ஸ்ரீவிஜயதாசர்

கன்னடத்தில்:
வித்வான் திரு.வியாசனகெரெ பிரபஞ்சனாசார்யர்

தமிழில்

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
89044 58276. haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

ஸ்ரீவிஜயதாசர்

ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால்
ஸ்ரீவிஜயதாசரின் ஆராதனை நாளான
14-11-2021 அன்று நவபிருந்தாவன க்ஷேத்திரத்தில்
ஸ்ரீவியாசராஜரின் சன்னிதானத்தில் வெளியிடப்பட்டது

தொடர்புக்கு:
'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
8904458276 haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

சலுகை விலையில் இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு பொருளுதவி புரிந்த ஹரி பக்தர்கள் அனைவருக்கும் நன்றி!!

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

ஸ்ரீ விஜயதாஸரின் வாழ்க்கை வரலாறு
வாழ்த்துரை

ஸ்ரீ விஜயதாஸர் ப்ருகு மகரிஷியின் அம்ஸ ஸம்பூதர். மத்வ மதத்தில் தாஸ சாஹித்யத்திற்கு பெரும் பங்களிப்பை அளித்த அஷ்ட தாஸர்களில் மிக முக்கியமான ஸ்தானத்தில் போற்றப்படுபவர். த்ரேதா யுகத்தில் 'ஸூரலீலா' என்ற கபியாக அவதரித்து ஸ்ரீ ராமபிரானுக்கு சேவை புரிந்தவர். த்வாபர யுகத்தில் 'நிகம்ப' என்னும் யாதவனாகப் பிறந்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு ஸகாவாக இருக்கும் பாக்கியத்தைப் பெற்றவர். கலியுகத்தில் ஸ்ரீ புரந்தர தாஸரின் வீட்டு கன்றுக் குட்டியாகவும், பின்னர் ஸ்ரீ புரந்தரதாஸரின் மகன் மத்வபதியாகவும் அவதரித்து மீண்டும் அவரே தாஸரின் அனுக்ரஹத்துக்கு பாத்திரராகி ஸ்ரீ விஜயதாஸராகவும் அவதரித்துள்ளார்.

ஸ்ரீ விஜயதாஸர் 1682ல் துங்கபத்திரா நதி தீரத்தில் உள்ள சீக்லபர்வியில் ஸ்ரீ நிவாஸ - கூஸம்மா தம்பதியருக்கு மகனாக 'தாஸப்ப' (கூஸி மக தாஸ) என்ற பெயரில் அவதரித்து சிறுவயதில் இருந்தே வறுமையில் திளைத்து வந்த சூழ்நிலையில், 14வது வயதில் அரஸம்மா என்ற கன்னிகையை மணந்து வறுமை மேலும் வாட்டி வதைக்க, விரக்தியினால் காஸி ஷேத்திரம் சென்று ஸத்ஸங்கத்தின் பயனால் பக்தி உணர்வு மேலிட, ஸ்வப்னத்திலேயே பகவான் ஸ்ரீ வேதவ்யாஸர் புரந்தரதாஸரின் ரூபத்தில் தோன்றி, வியாஸ காஸிக்கு அழைத்துச் சென்று, வியாஸ பகவான் மூலமாக நாவினில் 'விஜய' என்னும் பீஜாக்ஷரத்தை எழுதி அனுக்ரஹம் செய்ய விஜய தாஸராக பரிமளித்து 'விஜய விட்டல' என்ற முத்திரையில் பல தேவர நாமாக்களை இயற்றி தாஸ ஸாஹித்யத்திற்கு பெரும் பங்களித்தவர். அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த திருப்புமுனைக்குப் பின் பகவத் க்ருபையால் நித்ய அன்னதானம், ப்ராமண போஜனம், கன்யாதானம், தர்ம உபநயனம் என பல ஸத்காரியங்களைச் செய்தவர். ஸ்ரீ புரந்தரதாஸரின் ஐந்து லட்சம் தேவர நாமாக்களை இயற்றும் ஸங்கல்பத்தில் 25000 குறைய, தாஸர் தனது மகன் மத்வபதியை பூர்த்தி செய்யக் கோர, அவரே

ஸ்ரீ விஜயதாஸராக அவதரித்து ஸ்ரீ புரந்தரதாஸரின் சங்கல்பத்தை நிறைவு செய்துள்ளார். கோபாலதாஸர், மோஹனதாஸர், வேணுகோபாலவிட்டலதாஸர், வியாஸவிட்டலதாஸர் போன்ற 60க்கும் மேற்பட்ட சிஷ்யர்களுக்கு அங்கிதம் அளித்தவர். பாரத தேஸம் முழுவதும் யாத்திரை மேற்கொண்டு மத்வ ஸித்தாந்தத்தை தாஸ ஸாஹித்யத்தின் மூலம் பரப்பி பாமரர்களுக்கும் பக்தியையும் ஞானத்தையும் ஊட்டிய தாஸர், திருப்பதி க்ஷேத்திரத்திற்கு மேற்கொண்ட யாத்திரை கணக்கிலடங்காதது. பதங்கள், வ்ருத்த நாமங்கள், பத்யங்கள், கீர்த்தனைகள், உகாபோகங்கள் மற்றும் கத்யங்கள் எனப் பலவகைகளிலும் தாஸ ஸாஹித்யத்திற்கு வித்திட்ட தாஸர், விஸேஷமாக வேத சாஸ்திர உபநிஷத்துக்களின் ஸாரத்தை மிகச் சுலபமான வகையில் ஸூளாதிகளாக அளித்து 'ஸூளாதி தாஸர்' என்றே போற்றப்படுபவர். 1755ல் தமது 73வது வயதில் கார்த்திக ஸூத்த தஸமியன்று பாஸ்கர க்ஷேத்திரமான சிப்பகிரியில் அவதாரத்தை பூர்த்தி செய்து, இன்றும் வேண்டும் பக்தர்களின் மனோபீஷ்டங்களை நிறைவேற்றி ஞானம், பக்தி மற்றும் வைராக்கியத்தை அருள்பவர் ஸ்ரீ விஜயதாஸர்.

ஸ்ரீ விஜயதாஸரின் இத்தகைய சிறப்பு மிக்க வாழ்க்கை சரித்திரத்தையும், மஹிமைகளையும் மிக விளக்கமாக 'ஜகன்னாத கேஸவ' திரு. சத்திய நாராயணன் அவர்கள் தமிழிலே மிக அழகாக மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அவர் சமீப காலத்தில் வெளியிட்டுள்ள இன்னும் பிற தாஸ ஸாஹித்ய படைப்புகளின் நூல் வரிசையிலே, இதுவும் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. அவருக்கு ஸ்ரீ விஜயதாஸரின் அந்தர்யாமியான ஸ்ரீ விஜய விட்டலன் ஆயுள், ஆரோக்யம், ஐஸ்வர்யம் போன்றவற்றை அருளி இன்னும் பல்வேறு நூல்களைத் தொடர்ந்து வெளியிடப் பிரார்த்தனை செய்கிறேன்.

மேடவாக்கம், சென்னை
5th October 2021

'பிரஸங்க பூஷணம்',
'பிரவசன பூஷணம்','மத்வரத்னா'
S. லக்ஷ்மிபதிராஜா

ஸ்ரீவிஜயதாசர்

புகழ் பெற்ற தாச சதுஷ்டயர்களில் ஸ்ரீவிஜயதாசர் இரண்டாமவர். யதித்ரயரான ஸ்ரீஸ்ரீபாதராஜர், ஸ்ரீவியாசராஜர், ஸ்ரீவாதிராஜர் மற்றும் தாச-த்வயர்களான ஸ்ரீபுரந்தரதாசர், ஸ்ரீகனகதாசர் ஆகியோர், ஸ்ரீஹரிதாச சாகித்யத்தின் முதலாம் கட்டத்தின் பிரமுகர்கள். இரண்டாம் கட்டத்தின் முக்கிய ஹரிதாசர் என்று பெயர் பெற்றவர் ஸ்ரீவிஜயதாசர். பிறகு வந்த ஸ்ரீகோபாலதாசர், ஸ்ரீஜகன்னாததாசர் ஆகியோர் ஸ்ரீவிஜயதாசரை பின்தொடர்ந்தே வந்த தாசவர்யர்கள். அடுத்து வந்த ஹரிதாச சாகித்யத்திற்கு ஒரு முன்னோடியாக இருந்தவர் என்று ஸ்ரீவிஜயதாசரையே சொல்ல வேண்டும்.

ஸ்ரீவிஜயதாசரின் சிறப்பு

ஸ்ரீபுரந்தரதாசருக்குப் பிறகான காலத்தின் முக்கிய ஹரிதாசர் என்றால் அவர் ஸ்ரீவிஜயதாசரே. தம் வாழ்க்கையின் முதல் 33 ஆண்டுகள் வரை, செல்வம் மற்றும் ஞானங்களின் குறையுடன் இருந்த இவர், பிறகு செய்த சாதனை, உண்மையான அர்த்தத்தில் அற்புதமானது. கனவில் ஸ்ரீவிஜயவிட்டலா என்னும் அங்கிதத்தைப் பெற்றார். தாசப்பா எனப்பட்டவர் அன்றிலிருந்து ஸ்ரீவிஜயதாசர் என்று புகழடைந்தார். கிருதிகளை இயற்றியதிலும் ஸ்ரீவிஜயதாசர், ஸ்ரீபுரந்தரதாசருக்கு அடுத்த இடத்தில் உள்ளார்.

ஸ்ரீபுரந்தரதாசரின் மொத்த கிருதிகளின் எண்ணிக்கை 4,25,000 என்றால், ஸ்ரீவிஜயதாசரின் கிருதிகளின் எண்ணிக்கை 75,000. ஸ்ரீபுரந்தரதாசர் சங்கல்பம் செய்திருந்த 5,00,000 கிருதிகளை இவர் பூர்த்தி செய்தார். நாள் ஒன்றிற்கு குறைந்தபட்சம் 10 கிருதிகளையாவது இவர் இயற்றியிருக்க வேண்டும் என்பதை நாம் பார்க்கிறோம்.

(ஸ்ரீபுரந்தரதாசர் இயற்றியவை 4,75,000 கிருதிகள் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் கூறுவது 4,25,000 எண்ணிக்கையே. இதைப் பற்றிய ஆராய்ச்சி நடக்கிறது).

எண்ணிக்கையின் அடிப்படையில் பார்த்தால், ஸ்ரீபுரந்தரதாசரின் கிருதிகள் அதிகம் என்று இருந்தாலும், இதுவரை நமக்குக் கிடைத்துள்ள கிருதிகளில் அதிக கிருதிகள் ஸ்ரீவிஜயதாசருடையதே என்பது சிறப்பு. இதன்படி, ஹரிதாச சாகித்யத்தில் பெரும் பங்கு, ஸ்ரீவிஜயதாசரின் கிருதிகளே எனலாம்.

இவருடைய கிருதிகளில் பெரும்பான்மையானவை சுளாதிகள் என்பது இன்னொரு சிறப்பான விஷயம். மிகவும் கடினமான கிருதி வகை என்று சொல்லப்படக்கூடிய சுளாதிகள், ஸ்ரீவிஜயதாசருக்கு இயற்றுவதற்கு மிகவும் சுலபமாக இருந்தது என்பது அவருடைய ஸித்தியின் பலன். எண்ணிக்கையைப் போல, விஷய அடக்கத்திலும் தாசரின் சுளாதிகளின் சிறப்பு அதிகமானவை. ஒவ்வொரு சுளாதியும் அதனுடைய விஷய அடர்த்தியிலும், தத்வங்களை விளக்குவதிலும் முதன்மையாக இருக்கின்றன. அவருடைய சில சுளாதிகளின் விஷய அர்த்தங்கள், இன்னும்கூட வித்வத் உலகிற்கு சரியாக புரியவில்லை என்றால், ஸ்ரீவிஜயதாசரின் ஆளுமை எத்தகையது என்பது நமக்கு தெரிகிறது. ஆகவே, அவர் சுளாதி தாசர் என்றே அழைக்கப்படுகிறார்.

உகாபோகங்களின் பார்வையிலும், ஸ்ரீபுரந்தரதாசருக்குப் பிறகான இடம், இவருக்கே. இதுவரை கிடைத்துள்ள உகாபோகங்களில் அதிகமானது ஸ்ரீபுரந்தரதாசருடையது என்றால், அடுத்தது ஸ்ரீவிஜயதாசருடையதே. சுளாதிகளைப் போல இவரின் உகாபோகங்களிலும் விஷயங்கள் மிகவும் அற்புதமானவையாக இருக்கின்றன.

ஸ்ரீபுரந்தரதாசர் ஹரிதாசகூடத்தின் முதலாம் வகுப்பில் இருந்தாலும், அவரிடமிருந்து தாசதீக்ஷை பெற்று க்ருதிகாரர்கள் ஆனவர்களைப் பற்றி தகவல்கள் எதுவும் இல்லை. ஆனால், ஸ்ரீவிஜயதாசரைப் பற்றி அப்படி இல்லை. ஸ்ரீகோபாலதாசர், ஸ்ரீமோகனதாசர், ஸ்ரீவேணுகோபாலதாசர், ஸ்ரீகுருகோபாலதாசர் முதலான அனேகருக்கு தாசதீக்ஷ்யைக் கொடுத்து, அவர்களை ஹரிதாசர்கள் ஆக்கிய புகழ் இவருடையது. ஹரிகதாம்ருதசாரம் முதலான கிருதி ரத்னங்களைக் கொடுத்த ஸ்ரீஜகன்னாததாசரின்

சாதனையிலும் இவருடைய பாத்திரம் முக்கியமானது. இவரிடமிருந்து அங்கிதம் பெற்றவர்களும், அடுத்து பலருக்கு தாசதீக்ஷை வழங்கி, ஹரிதாசர்களாக ஆக்கினர். இவ்வாறு ஹரிதாச பரம்பரையை வளர்த்த விசேஷ சாதனை ஸ்ரீவிஜயதாசருடையதாகும்.

ஒரே வாக்கியத்தில் சொல்ல வேண்டுமென்றால், இன்றைய அனைத்து ஹரிதாச பரம்பரையினர் அனைவரின் மூலத்தை பார்த்தால், அது ஸ்ரீவிஜயதாசரிலேயே முடிகிறது. ஸ்ரீகோபாலதாசர் முதலான அனைவரையும்கூட அவரவர்களின் இடத்திற்கே சென்று அருளியது இவருடைய விஷால மனோபாவத்திற்கு ஒரு சிறந்த உதாரணம். ஸ்ரீமோகனதாசர் போன்றோரை வளர்ப்பு மகனாகவே வளர்த்த பெருமை இவருடையது. இவர் பிறந்த இடம் துங்கபத்ரா தீரத்தின் சீகலபரவியானால், மறைந்த இடம் பாஸ்கர க்ஷேத்திரம் எனப்படும் சிப்பகிரி. இந்த இரு இடங்களிலும் இவருடைய ஆராதனை மிகவும் சிறப்புடன் நடந்து வருகிறது. சீகலபரவியில் இருப்பவர்கள் இவருடைய தம்பியான ஆனந்த தாசரின் பரம்பரையினர் என்றால், சிப்பகிரியில் இவருடைய வளர்ப்பு மகனான ஸ்ரீமோகனதாசரின் பரம்பரையினர் இருக்கின்றனர்.

தாச சதுஷ்டயரில் ஸ்ரீவிஜயதாசருடையது இரண்டாம் இடமாகும். ஸ்ரீபுரந்தரதாசருக்குப் பிறகான காலத்தின் தாச வர்க்கத்தில் இவருடையது முதன்மையானதாகும். ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மேல் இயற்றப்பட்ட கிருதிகளின் எண்ணிக்கைக்குப் பிறகு, இன்னொருவர் மேல் அதிகமாக கிருதிகள் இயற்றப்பட்டது ஸ்ரீவிஜயதாசர் மேலேயே ஆகும். ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்தைப் போல, இவரைத் துதிக்கும் 'ஸ்மரிஸி பதுகிரோ திவ்ய சரணகெரகிரோ' (விஜயகவச) என்னும் ஸ்ரீவியாஸ விட்டலரின் கிருதி, தினந்தோறும் பாராயணம் செய்யத்தக்கதான இடத்தைப் பிடித்திருக்கிறது என்பது சிறப்பான விஷயம்.

ஹரிதாச பரம்பரையில், சமஸ்த தாச வர்க்கத்திற்கும் மரியாதைக்குரியவராக ஆகி, ஹரிதாச பரம்பரையையே வளர்த்த புகழ் இவருடையது. ஸ்ரீகோபாலதாசர், ஸ்ரீஜகன்னாத தாசர்,

ஸ்ரீமோகனதாசர் முதலான புகழ்பெற்ற ஹரிதாசர்கள் அனைவரும் ஸ்ரீவிஜயதாசரின் நேரடித் தொடர்பில், அவருடைய மகிமைகளை நேராக கண்டவர்கள் என்பது வரலாறு. மூன்று முறை காசி யாத்திரை, நான்கு முறை காஞ்சி முதலான தீர்த்த க்ஷேத்திரங்களின் தரிசனம், அனேக ஆண்டுகள் திருப்பதியின் பிரம்மோத்ஸ்வ தரிசனம் முதலான பல பெருமைகளை இவர் கொண்டிருக்கிறார்.

தீர்த்த பிரபந்தத்தின் மூலம் தீர்த்த க்ஷேத்திரங்களின் மகிமையை சம்ஸ்கிருதத்தில் தொகுத்த பெருமை ஸ்ரீவாதிராஜருடையது என்றால், அவற்றை கன்னடத்தில் கிருதிகளாக இயற்றிய பெருமை ஸ்ரீவிஜயதாசருடையது ஆகும். கடிகாசல, மன்னூரு ஆகிய க்ஷேத்திர மகிமைகளை பௌராணிக பின்னணியில் இவருடைய கிருதிகள் விவரிக்கின்றன. பற்பல அறியப்படாத புராதன வைஷ்ணவ க்ஷேத்திரங்களைப் பற்றியும் உள்ள இவருடைய கிருதிகள் அபாரமானவை.

ஸ்ரீவாதீந்திரர், ஸ்ரீசத்யப்ரியர், ஸ்ரீசத்யபோதர் முதலான அற்புத மடாதீசர்களின் சமகாலத்தவராகி, தாமே ஒரு மடாதீசருக்கு சமமான புகழைப் பெற்றிருந்த அபூர்வம் இவருக்கு இருந்தது. ஆயிரக்கணக்கில் இருந்த சிஷ்யர்களின் மேல் தமது ஆளுமையை செலுத்திய இவர், உண்மையான அர்த்தத்தில், ஹரிதாச பரம்பரையின் முதன்மை இடத்தில் உள்ள மஹனீயர் ஆவார். ராமா சாஸ்திரி முதலான பிரபல மாயாவாதிகளை வாதத்தில் தோற்கடித்து அவரை மத்வ மதத்தை பின்பற்றுபவர்களாக செய்த அபூர்வமான பெருமையும் இவருடையதே.

ஹரிதாசர் ஒருவர் இவ்வாறு பிரதிவாதி ஒருவரை தோற்கடித்த சம்பவம் எங்கும் கண்டதில்லை எனலாம். கல்லூர் சுப்பண்ணாசார்யர் போன்ற அந்த காலத்து மகா வித்வாம்சரை தம் சிஷ்யராக ஆக்கிக்கொண்ட இவருடைய வியக்தித்வம் உண்மையிலே அற்புதம். தம்மை சேர்ந்தவர்களுக்கு வந்த துர்மரணத்தை, தமது ஆயுளையே தானமாகக் கொடுத்து

அவர்களுக்கு மறுபிறவியைக் கொடுத்த பெருமையும் இவருடையதாகும்.

ஸ்ரீபுரந்தரதாசருக்குப் பிறகு, அதிக உகாபோகங்களை இயற்றியதும் இவரே. பற்பல மகிமைகளால், சாதாரண மக்களையும் ஹரியை பின்பற்றுபவர்களாக ஆக்கிய பெருமைக்குறியவர்களில் ஸ்ரீவிஜயதாசருடையது முதன்மையான இடமே எனலாம். மத்வ சித்தாந்தத்தின் மிகவும் ஆழமான விஷயங்களைப் பற்றி அனேக சம்ஸ்கிருத கிரந்தங்களிலும் காணக்கிடைக்காத அதி அபூர்வ விஷயங்களை தொகுத்துக் கொடுத்த இவரது ஞானத்தின் ஆழம் மிகவும் வியப்பானதாகும்.

ஸ்ரீவிஜயதாசரின் சரித்திரத்தின் ஆதாரங்கள்

ஸ்ரீவிஜயதாசரின் சரித்திரத்தை உள்ளபடியே அறிவதற்கு மிகவும் முக்கியமான ஆதாரங்கள் என்றால், தன் சொந்த வரலாற்றை விவரிக்கும், அவரே இயற்றிய பல கிருதிகள். அவற்றில் 'தாஸ புரந்தரன பாதவனு பொந்திதேனு', 'குருதாஸராயரெனகெ தாஸத்வ நீடோ க்ரம' என்னும் இரு சுளாதிகள் அவரின் அங்கித ஸ்வீகாரத்தைப் பற்றி தெளிவாக விளக்கக்கூடிய ஆதாரங்கள் ஆகும். இவற்றுடன் ஸ்ரீகோபாலதாசர், ஸ்ரீமோகனதாசர், ஸ்ரீவேணுகோபால தாசர் ஆகியோரின் அங்கித பதங்களான 'கோபாலவிட்டல நின்ன பூஜெ மாடுவெனு' ஆகிய கிருதிகள் வரலாற்று சம்பவங்களை விளக்குகின்றன.

'மாதன்னாட்யெ மன்னாரிகிருஷ்ண, 'நின்ன தருஷனகெ பந்தவனல்லவோ' ஆகிய கிருதிகளில் அவருடைய வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களின் குறிப்புகள் அடங்கியிருக்கின்றன. அதைப்போல அவருடைய மகன் சேஷகிரிதாசர், பாகி கேஷவதாசர் ஆகியோருக்கு ஆயுள்தானம் கொடுத்த சந்தர்ப்பங்களில் இயற்றப்பட்ட கிருதிகள் கூட கவனிக்கப்பட வேண்டியவை.

இவற்றுடன், அவருடைய தம்பிகளான ஸ்ரீஆனந்ததாசர் மற்றும் சிஷ்யரான ஸ்ரீகோபாலதாசர், ஸ்ரீமோகனதாசர் ஆகியோர் இயற்றிய அனேக கிருதிகள் இவருடைய வாழ்க்கையைப் பற்றி அனேக விவரங்களை விளக்குகின்றன. அவற்றில் முக்கியமான கிருதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஸ்ரீஆனந்த தாசரின் கிருதிகள்

1. நெனஸிதவரகனாஷன அனுமானவில்லதகெ
2. எந்து காம்பெனோ என்ன மனோஹரன
3. தாஸர நோடிரோ விஜயதாசர பாடிரோ
4. வரகள பேடிரோ ஸுஜனரெல்ல
5. தாஸரெந்தரெ இவரெ ஹரிதாஸரு
6. என்ன குலவிந்து பாவனவாயிது
7. தெரளிபோதரு ஸிரிஹரிய புரகெ
8. அக்ன்யந்தர்யாமி பரஷுராம
9. நெனெஸிகொண்டரெ என்ன எதெ பிச்சுதிதெ அண்ண

2. ஸ்ரீகோபாலதாசரின் கிருதிகள்

1. சரணகமலவன்னு நெனெவெ நா குரு
2. துரிதவாரி வாஹஜஞ்சானில
3. பஜிஸிபதுகு நித்ய விஜயதாஸர பாத
4. விஜயராயர நேந்து திக்விஜயமாடிரோ
5. குருவிஜயவிட்டல நின்ன சரணயுகளக்கெ எரகி
6. ஸ்மரிஸுவெ நா நிம்ம சரணகமல குரோ விஜயராயா
7. விஜயவு ஆரிந்த எனகாஹுது

3. ஸ்ரீமோகனதாசரின் கிருதிகள்

1. பரமஹருஷவாயிது விஜயராய குருகள
2. ஸரியுகாணெனல்லி ஜகதொளு
3. தந்தெ விஜயராய வ்யாளெகெ பந்த்யோ விஜயராய
4. நின்ன பாதத நம்பி அன்யராஸ்ரயவ்யாகெ

5. விஜயராயர பாத பஜிஸிதவகனவரத
6. நின்ன நம்பிருவெ பிரஸன்னனாகு ப்யாக
7. விஜயராயர பாத நிஜவாகி நம்பலு

4. ஸ்ரீவேணுகோபாலதாசரின் கிருதிகள்

1. ஸ்மரிஸிதவரகனாஷன
2. நின்ன நம்பித நரகெ அன்யராஷிகளேனோ
3. கருணவ மாடோ ஷரணர ப்ரேமி
4. காயோ காயோ குருவிஜயராய

5. ஸ்ரீஜகன்னாததாசரின் கிருதிகள்

1. ரதுன தொரகிதல்ல எனகொந்து ரதுன தொரகிதல்ல
2. தெரளிதரு விஜயராயரு

6. ஸ்ரீகுருகோபால தாசரின் கிருதிகள்

1. காயோ குருராய கவிகேய

7. ஸ்ரீகல்லூரு சுப்பண்ணாசார்யரின் கிருதிகள்

1. ஸ்மரிஸி பதுகிரோ திவ்ய சரணகெரகிரோ
2. தயமாடோ ப்ரீயா தாஸர ஷுபோதய

8. ஸ்ரீகேஷவவிட்டலரின் கிருதிகள்

1. விஜயராயர பதகமல பஜிஸாலக்ஷண

இவற்றைத் தவிர, ஸ்ரீவேணுகோபால தாசரின் சிஷ்யரான குருவேணு கோபாலவிட்டலரால் இயற்றப்பட்ட 'ஸ்ரீவிஜயதாசர ஆன்ஹிக பத்ததி' என்னும் கிருதி ஒன்று கிடைத்துள்ளது. அதில் ஸ்ரீவிஜயதாசரின் நித்ய ஆன்ஹிகத்தைப் பற்றி மிகவும் அற்புதமான விவரங்கள் சொல்லப்பட்டுள்ளன.

ஸ்ரீவிஜயதாசர் பிறந்த இடம்

ஸ்ரீவிஜயதாசர் பிறந்த இடம் - சீகலபரவி. இது இன்றைய ராயசூரில், மானவி தாலுகாவில் வருகிறது. அங்கிருந்து சுமார் 10 கிமீ தூரம் இருக்கும் துங்கபத்ரா தீரத்தில் இருக்கும் பவித்ர க்ஷேத்ரம். உத்தராதி மடாதீசராக இருந்த ஸ்ரீரகுநாத தீர்த்தரிடமிருந்து, ஸ்ரீபாதராஜர் என்னும் பெயர் பெற்ற ஸ்ரீலட்சுமி நாராயண முனிகள் தமது சஞ்சாரத்தில் இங்கு வந்திருந்தபோது, இந்த இடத்தின் புனிதத்தை கவனித்து, அஷ்வத்த மரம் ஒன்றினை நட்டு, அங்கு ஸ்ரீஅஷ்வத்த நரசிம்மனை பிரதிஷ்டை செய்தார் என்று சொல்லப்படுகிறது. இங்கு அந்த அஷ்வத்த மரத்தின் நிழல், ஆற்றின் மேல் விழுமாறு இருக்கிறது. இத்தகைய இடம் மிகவும் பவித்ரம் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஸ்ரீமுஷ்ண க்ஷேத்திரத்தின் நித்ய புஷ்கரிணி முதலான அனேக தீர்த்தங்களில் இத்தகைய சிறப்பினை காணலாம்.

ஸ்ரீபாதராயரின் இந்த செயல், ஒரு அர்த்தத்தில் ஸ்ரீவிஜயதாசர் போன்ற மஹனீயர்களின் அவதாரத்திற்கு ஒரு முன்னோட்டமாகவே இருந்தது என்று அறியலாம். ஸ்ரீபாதராஜர், ஸ்ரீஹரிதாச சாகித்யத்தின் துவக்கத்திற்கு மட்டுமல்லாமல், இந்த அபூர்வ காரியத்தினால் விஜயதாசர் போன்ற சிறந்த ஹரிதாசர்களின் அவதாரத்தின் சிறப்பிற்கும் காரணர் ஆனார் என்பது விசேஷம். அடுத்து வந்த காலங்களில் இந்த இடம் சிக்கபதரி என்று புகழ்பெற்றது.

தரெயொளு துங்கபத்ர தீர சிக்கபதரிய
புரதலி ஜனிஸித பாமரர ஆதரிஸி
பரமாத்ம ஹயவதன விட்டலரேய கன்ன
சரிதெ பேளித மஹிமனீத ஸுரளிதவரதாத - ஸ்ரீனிவாஸன ஜாத ||
--- ஸ்ரீஹயவதன விட்டலதாசர்

தனுவெத்தி வரஸரிததீரத அணுபதரி
ஜன ஸ்ரேஷ்டரொளு ஹரிய தாஸ பெஸரலி பந்து

கன யாதவாத்ரி பட்டணதொளகெ இத்து பகெ ஜனனி அனுஜாதஸஹித || --ஸ்ரீவேணுகோபாலதாசர்

அடுத்து, ஸ்ரீஸ்ரீபாதராயர், பிச்சாலெயில்கூட ஸ்ரீஅஷ்வத்த நரசிம்மஸ்வாமியை பிரதிஷ்டாபனம் செய்தார் மற்றும் சமீபத்தில் இருந்த மந்திராலயம், ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளைப் போன்ற மகாமகிமரின் கேந்திர ஸ்தானம் ஆனது அனைவருக்கும் தெரிந்ததே. இவ்வாறு அவர் பிரதிஷ்டை செய்த இரு நரசிம்ம க்ஷேத்திரங்கள் வியாஸ சாஹித்ய, தாஸ ஸாகித்யத்தின் முக்கியஸ்தர்களை உலகிற்கு கொடுத்த புண்ணிய க்ஷேத்திரங்கள் ஆனது.

பெற்றோர்

ஸ்ரீனிவாஸப்ப (சீனப்பா) மற்றும் கூஸம்மா என்னும் தம்பதிகள் சீகலபரவியில் வாழ்ந்து வந்தனர்.

வரதுங்கபத்ரதீரத க்ராம அஷ்வத்த
நரஸிம்ஹ சீகனபரவி எம்ப க்ராமதலி |
இருதிப்ப ஸ்ரீனிவாஸப்ப கூஸம்மஸ்ரீ குருஸேவெ மாடி ஸதத |
வர படெது படெதளெய் எரடொந்து புத்ரரனு
ஹிரிய மகனாத தாஸப்பனெந்திருவ நாமதி
கரெது முத்திஸி ஸாகி முஞ்சி மதுவெ மாடி இருதிரலு கெலவு கால || -- ஸ்ரீஹயவதன விட்டலதாசர்

தேஷதொளகெ துங்கதீர அஷ்வத்த நர
கேஸரிய சீகனபரவியல்லி
வாஸவாகித்த ஸ்ரீனிவாஸன உதரதலி
லேஸாகி ஜனிஸிதரு பூஸுர ரூபதலி ||
-- ஸ்ரீஹயவதன விட்டலதாசர்

அவர்கள் பாரத்வாஜ கோத்திரத்தை சேர்ந்தவர்கள். கடும் ஏழ்மையில் வாழ வேண்டியிருந்தது. வரவைவிட செலவே அதிகம். முதலிலேயே குக்கிராமம். அங்கிருந்த அஷ்வத்த

நரசிம்மஸ்வாமியைப் பார்க்க வந்த பக்தர்களுக்கு இவர்களே அதிதி உபசாரம். இதனால், இருந்த சிறிதான செல்வமும் செலவழிந்து போயிற்று. சில சமயம், தினப்படி உணவிற்கும் வழியில்லாத கோரமான ஏழ்மை. இத்தகைய நிலையிலும், ஊருக்கு வந்த அதிதிகளுக்கு உபசாரம் செய்து வந்தனர். இது தங்களுடைய பூர்வஜென்ம பலன் என்று மகிழ்ந்திருந்தனர்.

அதிதி தேவோ பவ என்பது அனைவருக்கும் விதிக்கப்பட்ட ஒரு கடமை என்று சாஸ்திரத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது அல்லவா? அவர்களுடைய அகண்ட அன்னதானம் செய்த பலனே, அகண்ட ஞான தானம் செய்யக்கூடிய விஜயதாசர் போன்ற மகனைக் கொடுத்தது எனலாம். ஸ்ரீஅஷ்வத்த நரசிம்மனின் அருளின் பலனாக, அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தையே பின்னர் ஸ்ரீவிஜயதாசர் என்று பெயர் பெற்ற தாசப்பா. தாசப்பனுக்கு ஸ்ரீஸ்ரீபாதராஜரின் ஸ்ரீமத்வநாம தினமும் சொல்லக்கூடிய மகாமந்திரமாக இருந்தது. இத்தகைய மகனுக்காக செய்த சேவையின் பலனாகவே, அவருக்குப் பிறந்த தாசப்பா - மத்வமதவே மதவு - என்று திடமாகக் கூறும் சிறந்த ஹரிதாசர் எனப்பட்டார். இவ்வாறு தாசப்பா என்று அவருடைய பெயரிலேயே, அவர் பின்னாளில் சிறந்த ஹரிதாசர் ஆகப்போகிறார் என்பதையும் அறியலாம்.

மொதலெ இவர பெஸரு தாஸனெந்திரலாகி
அதரிந்த தாஸத்வ ஸித்திஸிது
ஸதமல ஹயவதன விட்டலன பாதவனு
ஹ்ருதயதொளு பொளெவந்தெ ஸாதனவ கண்டரு
-- ஸ்ரீஹயவதன விட்டலதாசர்

காலம்

ஸ்ரீதாசரின் பிறந்த ஆண்டைப் பற்றி சரியான குறிப்புகள் இல்லை. ஆனால், யுவ சம்வத்ஸர கார்த்திக சுத்த தசமி வியாழக்கிழமையன்று, அவர் இஹலோக வியாபாரங்களை முடித்துக் கொண்டார் என்று, ஸ்ரீஹயவதனதாசரின் கிருதி ஒன்று

விளக்குகிறது. ஸ்ரீதாசரின் வாழ்க்கைக் காலம் 73 ஆண்டுகள் என்பது அவரே தெளிவாக சொல்லியிருக்கும் விவரம் (எப்பத்து மூருவருஷ ஹொப்பா தேஹதலித்தெ). இதனால் அவருடைய பிறந்த ஆண்டு பொ.யு. 1682 என்று ஆகிறது. இது சக 1604 துந்துபி சம்வத்ஸரத்திற்கு சரியாக பொருந்துகிறது. ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் பிருந்தாவனஸ்தர் ஆனது 1671ம் ஆண்டில். ஆக, ஸ்ரீராகவேந்திரரின் காலத்திற்குப் பிறகு, மிகவும் அருகிலான காலத்தில் மிகவும் சிறந்தவர்களில் ஸ்ரீவிஜயதாசரும் ஒருவர் என்று ஆகிறது.

தம்பி ஆனந்ததாசர்

ஸ்ரீனிவாசப்பா தம்பதிகள், பகவந்தன் தங்களுக்கு கொடுத்த வசதியிலேயே தங்கள் மகனுக்கு, காலகாலத்திற்கு செய்ய வேண்டிய நாமகரணாதி சத்கர்மங்களை செய்தனர். அடுத்து, தாசப்பனுக்கு 2 வயது ஆகும்போது, தம்பியாக பிறந்தவர் ஆனந்த. இவரே பிறகு ஸ்ரீஹயவதன விட்டலதாசர் எனப்பட்டார். பிறகு, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் அருளால் இன்னொரு தம்பி இவர்களுக்கு பிறந்தார் என்று ஸ்ரீஹயவதன விட்டல தாசரின் கிருதி ஒன்று தெரிவிக்கிறது.

கூஸம்மா ஸ்ரீகுருஸேவெ மாடி ஸதத
வர படெது படெதளெய் எரடொந்து புத்ரரனு ||

ஸ்ரீவிஜயதாசருக்கு ஒரு தங்கை

ஸ்ரீவிஜயதாசருக்கு ஒரு தங்கையும் இருந்தார் என்னும் செய்தி, மிக சமீபத்தில் கிடைத்த - அவருடைய தங்கை மகனால் எழுதப்பட்ட ஒரு கையெழுத்துப் பிரதியிலிருந்து தெரிய வருகிறது.

ஸ்வஸ்திஸ்ரீ வ்யய ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வர்ஷருதௌ ஸ்ராவண மாஸே ஷுக்ல பக்ஷே .. வாஸரே ஜ்யேஷ்டா நட்சத்திரே ஏதஸ்மின் ஷுபதினே ஸ்ரீமத் விஜயதாசவர்யஸ்ய பாகினீயக ரங்கேன லிகிதம் ||

ஸ்ரீவிஜயதாசரின் தங்கையின் மகனான ரங்கா என்பவரால் இது எழுதப்பட்டது என்று இதிலிருந்து தெளிவாக தெரிகிறது. விஜயதாசர் போன்ற தாச ஸ்ரேஷ்டரின் தங்கையின் மகன், பிரமேயதீபிகா, பாவரத்னகோஷ போன்ற சிறந்த கிரந்தங்களை இயற்றத்தக்க சிறந்த வித்வாம்சராக இருந்தார் என்பதும் சிறப்பான செய்தியாகும். அவருக்கு வியாச சாகித்யத்தின் சிறந்த அத்யயனத்திற்கு ஸ்ரீதாசரே ஊக்கம் அளித்திருக்க வேண்டும் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. ஹரிதாச பரம்பரையில் வந்த அனைவரும் ஸ்ரீவிஜயதாசரின் இந்த குறிப்பினை கவனித்து, மூலகிரந்தங்களின் அத்யயனத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என்று இதிலிருந்து அறியலாம்.

(ஸ்ரீவிஜயதாசரின் தம்பி ஆனந்ததாசரின் குறிப்பு மட்டுமே கிடைக்கிறது. இன்னொரு தம்பியின் விவரங்கள் கிடைக்கவில்லை. ஆகையால், ஆனந்ததாசரின் 'எரடொந்து புத்ர' என்பதற்கு இரு ஆண் மக்கள் பிறகு ஒரு மகள் என்று அறிய வேண்டும். இதனால் சீனப்பா கூஸம்மா தம்பதிகளுக்கு மொத்தம் மூன்று வாரிசுகள் என வேண்டும்.)

பால்ய - வித்யாபியாசம்

கடுமையான ஏழ்மை நிலையில், மக்களை வளர்க்கும் பொறுப்பும் சீனப்பா தம்பதிகளுக்கு வந்து சேர்ந்தது. அத்தகைய நிலையிலும் அவர்கள் தாசப்பனுக்கு காலாகாலத்திற்கு செய்ய வேண்டிய உபநயன சம்ஸ்காரத்தை செய்து நிறைவேற்றினர். அடுத்து அவரின் தம்பிகளின் உபநயனங்களும் நடந்து முடிந்தன. தாசப்பனுடைய வித்யாப்யாச தகவல்கள் சரியாக கிடைக்கவில்லை. அடுத்து அவர் ஆதவானி பகுதியில் ஒரு ஒப்பந்த வேலையில் ஈடுபட்டிருந்தார் என்பதால், இவருக்கு இளமையில் சாதாரண படிப்பே கிடைத்திருக்க வேண்டும் என்று அறியலாம். சாஸ்திர அத்யயனம் இவருக்கு கிடைத்ததாக எந்தவொரு தகவல்களும் இல்லை. அந்த காலத்தில் அவருடைய சூழ்நிலையில், சாஸ்திர படிப்பு கிடைத்திருக்கவும் வாய்ப்பு இல்லை.

ஒரு விதத்தில் இது ஸ்ரீஜயதீர்த்தரின் பூர்வ ஜீவனத்தை நினைவிற்குக் கொண்டு வருகிறது. ஸ்ரீஜயதீர்த்தர் தம் குல-வித்யையாக வந்திருந்த ஷஸ்திர வித்யையில் நிபுணத்துவம் பெற்றிருந்தாலும், சாஸ்திர வித்யையை எப்போதும் பெற்றிருக்கவில்லை என்னும் ஜயதீர்த்த விஜயத்தின் மேற்கோளை இங்கு ஒப்பிட்டுக் கொள்ளலாம். அவர் வியாஸ சாகித்யத்தின் ஆளுமையாகி ஸ்ரீஜயதீர்த்தர் என்று அழைக்கப்பட்டால், இவர் தாச சாகித்யத்தின் ஆளுமையாகி ஸ்ரீவிஜயதாசர் எனப்பட்டார். அவர் வியாச சாகித்யத்தின் டீகாராயர் எனப்பட்டால், இவர் தாசசாகித்யத்தின் டீகாராயர் எனப்பட்டார். அவர் மேல் இவர் அனேக கிருதிகளை இயற்றி 'ஈ முனி ஒலிதரெ அவனே பாக்யவந்த' என்று கொண்டாடியிருக்கிறார்.

திருமணம்

அன்றைய கால வழக்கப்படி, தாசப்பனுக்கு 16 வயதான உடன், அதே ஊரின் அரளம்மா என்னும் கன்யையுடன் திருமணம் நடைபெற்றது. இதனால் 'பரகாலதல்லி அதிகமாஸ' (பஞ்ச காலத்தில் அதிக மாதம்) என்று சொல்வதைப் போல, ஏழ்மை மேலும் அதிகரித்தது.

ஏழ்மை - வைராக்கியம்

அப்போதே உலகத்தை புரிந்து கொள்ளத் தொடங்கியிருந்த தாசப்பனுக்கு தம் வீட்டின் ஏழ்மை புரியத் தொடங்கியது. இரு வேளையில் ஒரு வேளைகூட அனைவருக்கும் உணவு கிடைப்பது கடினமாக இருந்தது. இது குக்கிராமமாக இருந்ததால், ஊரின் மற்ற மக்களிடமிருந்தும் இவர்களுக்கு எவ்வித உதவி கிடைக்கவும் வாய்ப்பு இல்லை. ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பூர்வாசிரமத்தின் ஏழ்மை நிலையையே இவரும் அனுபவித்தார் என்று சொல்லலாம். கல்வி, செல்வம் இரண்டும் இல்லாத தாசப்பனை சில அவிவேகி மக்கள் 'கூஸிமக தாஸ' என்று கேலியாக அழைக்கத் தொடங்கினர்.

இவ்வாறு இருக்கையில் ஒரு முறை, தன் தாய் மற்றும் சகோதர சகோதரியர்களுடன், தன் தாய்மாமா ராகவேந்திர ராயர் என்பவரிடம் செல்லும் சந்தர்ப்பம் வந்தது. அது ராகவேந்திர ராயரின் மகளின் திருமண நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சிக்கு இவர்களுக்கு அழைப்பு இல்லாவிட்டாலும், சொந்தத்திற்காக இவர்கள் சென்றிருந்தனர். அவமானத்தின் வரவேற்பே கிடைத்தது. அதிகாரம், செல்வம் ஆகியவற்றின் கர்வத்தில் மூழ்கியிருந்த ராகவேந்திர ராயர், இவர்களை சாதாரணமாகவும் மதிக்கவில்லை. திருமண நிகழ்ச்சியில் பங்கேற்காது, அங்கு வந்திருந்த மக்களின் உபசாரத்தில் இவர்கள் ஈடுபட்டனர்.

சாப்பாட்டிற்காக அமர்ந்திருந்த தாசப்பனை எழுப்பி, சந்தனம் அரைக்குமாறு கூறினார் ராயர். ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பூர்வாசிரமத்திலும் இத்தகைய சந்தனம் அரைக்கும் சம்பவம் வந்திருக்கிறது என்று அறிவோம். அனேக மக்களுக்கு சந்தனம் அரைத்துக் கொடுத்ததிலேயே, தாசப்பன் பசியால் வாடி மயங்கியிருந்தான். அப்போதும்கூட தாசப்பனுக்கு, அன்னம் வழங்கும் கருணையை ராகவேந்திர ராயர் காட்டவில்லை. பசியுடன் படுத்திருந்த தாசப்பனை ராகவேந்திர ராயர் அவமானம் செய்து, அவனை வெளியே தள்ளினார். செல்வத்துடன் மரியாதை இருக்கவில்லையென்றால், இத்தகைய அவிவேக புத்தி வருவதில் எந்த வியப்பும் இல்லை. ராகவேந்திர ராயர் அத்தகைய கெட்டவர்களின் கும்பலில் சேர்ந்திருந்தார்.

ஸ்ரீதாசரின் அந்த கால ஏழ்மையை அவருடைய புகழ்பெற்ற கிருதியான 'நின்ன ஒலுமெயிந்த நிகிளஜனரு பந்து மன்னிஸுவரோ மஹாராயா'வில் பார்க்கலாம்.

ஒப்ப ஹெங்கஸிகெ ஹொட்டிகெ ஹாகுவுதகின்னு - தப்பிப்பிகொண்டெனோ ஹிந்தெ ஸஞ்செதனகவித்து ஸண்ண ஸௌடின தும்ப - கஞ்சி காணதெ பளலிதெனோ
ஜீர்ண மலின வஸ்த்ர காணத நரரிகெ - ஊர்ணவிசித்ர ஸுவஸன
நீசோச்ச திளியதெ ஸர்வர சரணக்கெ - சாசிதெ நொஸல ஹஸ்தகள

மத்யான்ன காலக்கெ அதிதிகளிகெ அன்ன - மெத்தெனெந்தரெ ஈயகாணெ
மனெயனெ திரிதரு காஸு புட்டதெ - ஸும்மனெ சால்பரிது பளலிதெனோ

ஞானிகளுக்கு இத்தகைய ஏழ்மை என்பது, அவர்களுடைய பிராரப்த கர்மத்தின் பலன் என்பது சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விஷயம். ஸ்ரீகோபாலதாசரின் வாக்கு இதனை தெளிவுபடுத்துகிறது. தூரதர்ஷி ஸர்வ கண்டன்ன நிஜப்ராரப்த போகவ உண்டன்ன - ஸ்ரீராகவேந்திர விஜயத்தில் கூறியபடி, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பூர்வாசிரமத்தின் ஏழ்மையும்கூட இதே மாதிரி இருந்தது என்று அறியலாம்.

முதல் காசி யாத்திரை

தாசப்பனுக்கு இந்த சம்பவம் கொடுத்த அனுபவம், அடுத்து செய்யப்போகும் சாதனைக்கு அடித்தளமாக இருந்தது. பட்டினியைவிட அப்போது ஆன அவமானமே அவனின் மனதை மிகவும் வாட்டியது. தாயுடன் சீகலபரவிக்கு திரும்ப வந்த உடனேயே, வீட்டை விட்டுப் போகும் முடிவினை எடுத்தான். யாருக்கும் சொல்லாமல், விடியற்காலையிலேயே எழுந்து, துங்கபத்ரா நதியைத் தாண்டி, அந்தப்பக்கம் இருந்த பாகி கிராமத்தை அடைந்தான். அங்கு தேசாய் கேஷவதாசர் என்னும் வைஷ்ணவ கிருஹஸ்தர் இருந்தார். அன்று தனுர் மாதம் என்ற காரணத்தால், காலையில் சீக்கிரமாகவே உணவு உண்ணும் நிலை இருந்தது. நல்ல மனிதரான கேஷவதாசர், தாசப்பனை உபசரித்து, தீர்த்த கந்த அங்கார அக்ஷதைகளை கொடுத்து உணவிற்கு அமர்த்தினார். பற்பல நாட்களாக அரை வயிறே உண்டு வந்த தாசப்பனுக்கு, அன்றைய போஜனம் மிகவும் திருப்தி அளித்தது. அவருக்கு நன்றியை சொல்லிவிட்டு, 16 வயதேயான தாசப்ப, தன் சஞ்சாரத்தை தொடர்ந்தான்.

வழியில் கிடைத்த இடங்களில் உணவு, இல்லையெனில் உபவாசம். இவ்வாறு அவன் சென்று அடைந்தது மகாபுண்ய

க்ஷேத்திரம் எனப்பட்ட காசி. 'கெட்டு சுடுகாடு ஸேரு' (கெட்டும் சுடுகாடு சேர்) என்னும் வாக்கிற்கு இது பொருந்தியது. காசியில் இருக்கும் சுடுகாடு மட்டும் மகா-ஸ்மஷானம் எனப்படுகிறது. காசி விஸ்வனாதனின் இடம் என்பது இதன் விசேஷம். மானசிக துன்பங்களின் நிவாரணங்களுக்கு மனோ நியாமகனான சிவனின் ஆராதனை தேவை என்று சாஸ்திரம் சொல்கிறது. தாசப்பா காசிக்கு செல்லும் வழியில், அவரிடமிருந்த ஓரிரு வஸ்திரங்களையும் திருடர்கள் அபகரித்தனர். ஏற்கனவே நொந்திருந்த தாசப்பனுக்கு இது வைராக்கியத்தை மேலும் அதிகரித்தது அவ்வளவே. பகவந்தன் இவ்வாறு செல்வத்தை பிடுங்கிக் கொண்டு, விவேகத்தினை அருள்கிறான் என்பது அவனுடைய விசித்திர விளையாட்டு என்பதும் சாஸ்திரத்தின் செய்தி.

'யஸ்யானுக்ரஹமிச்சாமி தஸ்ய வித்தம் ஹராம்யஹம்'. ஸாதுகளின் சங்கமம்தாசப்பனின் மனதில் அப்போது இருந்த சிந்தனைகள், அவனுக்கு உலக வாழ்க்கையின் மேல் வைராக்கியம் ஏற்படக் காரணமாக இருந்தன. வழியில் பிரயாகத்தில் ஒரு வைஷ்ண கோஸாயின் (பாவாஜி) சந்திப்பு நடந்தது. ஒரு விதமாக இது சாஸ்திரங்களில் சொல்லப்படும், சஜ்ஜன-சங்கமமே ஆகும். 'மஹத்ஸேவாம் த்வாரமாஹுர் விமுக்தே:' 'ஸங்கவாகலி ஸாது ஸங்கவாகலி'. தாசப்பன் போன்ற அற்புத சேதனனுக்கு, யாரோ ஒரு சாமான்ய சாதுவின் சகவாசம் கிடைத்தது என்று எப்படி சொல்ல முடியும்? இது ஒரு வகையில், வெங்கடேச கல்யாணத்தில் வரும், திருப்பதி யாத்திரை மேற்கொண்ட ஒரு குழுவை பின்தொடர்ந்து சென்ற மாதவ பிராமணனின் கதையாகவே இருக்கிறது. அந்தமாதவ பிராமணன் பரம ஸித்தியைப் பெற்றதன் கதை இதிகாசத்தில் இருப்பதைப் போல, இந்த சம்பவமும் ஆயிற்று.

இவனின் விஷயத்தைக் கேட்டு இரக்கப்பட்ட அவர், தாசப்பனை அவருடைய குழுவிலேயே சேர்த்துக் கொண்டு காசிக்குச் செறார். தாசப்பனிடம் தெரிந்த ஒரு விசித்திர ஒளியை கண்டுகொண்ட கோசாயி அவர்கள், தாசப்பன் மேல் அதிக கவனம் செலுத்தினார்.

நித்ய கங்கா ஸ்னானம், பிந்துமாதவ, விஷ்வநாதனின் தரிசனம் ஆகியவை அவருடைய அடுத்த செயல்களுக்கான விதையாக இருந்தது. இவ்வாறு நான்கு ஆண்டுகள் வரை காசியிலேயே இருந்து, அந்த கோஸாயிகளின் குழு, ராமஸேதுவின் ஸ்னானத்திற்காக தெற்கு நோக்கி நகர்ந்தனர். தாசப்பனும் அவர்களுடனேயே சென்றான். வழியில் அவர்கள் கடந்தது, அவருடைய பிறப்பிடமான சீகலபரவியையே என்பது பகவத் சங்கல்பமே ஆகும்.

மறுபடி சீகலபரவிக்கு

பாவாஜியின் குழுவுடன், பிக்ஷை பெறுவதற்கு, அந்த ஹள்ளியில் சஞ்சரித்தவாறு, தன் வீட்டின் முன்னரே வந்து நின்றது விதியின் விளையாட்டே ஆகும். அவர் தன் வீட்டை விட்டுச் சென்று நான்கு ஆண்டுகள் ஆகியிருந்தன. ஆகையால், அவனுடைய முகம் யாருக்கும் அடையாளமே தெரியவில்லை. ஆனால் 'பிக்ஷாம் தேஹி' என்னும் அவனின் குரலை கண்டுகொண்டு, அங்கிருந்த ஒரு பெண், அவனுடைய பெற்றோருக்கு தகவல் அளித்தார்.

தாசப்பனைக் காணாமல் வாடியிருந்த அவனின் பெற்றோருக்கு, மறுபடி செல்வம் கிடைத்தது போலாயிற்று. நாள் முழுவதும் காணாமல் போய், மறுபடி கிடைத்த பா⁴வி (வருங்கால) ஸ்ரீமத்வாசார்யரைக் கண்ட மத்யகேஹ பட்டரைப் போல, ஆனந்தக் கண்ணீர் விட்டனர். 'நஷ்டம் ச நந்தனமிதி ஸ்வஜனோ஽ஸ்ய லப்த்வா நாதஸ்ய தஸ்ய தமனுக்ரஹமேவ மேனே'. ஏழ்மையின் துன்பத்தைவிட மகனை தொலைத்தது அவர்களை அதிகம் வாட்டியது. விஷயங்களை அறிந்த அவர்கள், தம் மகனை அழைத்துக் கொண்டு, பாவாஜி குழு தங்கியிருந்த அஷ்வத்த கட்டெயிடம் வந்தபோது, அங்கு யாரும் இருக்கவில்லை.

தாம்பத்யம் - ஆதவானியில் வசித்தல்

வீட்டிற்கு திரும்பிய மகனை சம்சாரி ஆக்குவதற்காக, மருமகள் அரளம்மாவை சீனப்பா தம்பதிகள் வீட்டிற்கு அழைத்து வந்தனர்.

அந்த சமயத்தில், ஆதவானியின் திவான் ருக்மய்யா என்பவர், சீனப்பனின் சம்சாரத்தின் நிலைகளைக் கண்டு, தன்னிடத்திற்கு வரவழைத்து, கிராமத்தின் கப்பத் தொகைகளை அரசிற்கு செலுத்தும் வேலையைக் கொடுத்து உதவி செய்தார். அது ஒரு விதத்தில் கணக்காளர் வேலையாகவே இருந்தது.

இதனால், அடுத்த சில நாட்கள் இரு வேளை உணவுடன் கூடிய வாழ்க்கையை அவர் வாழ்ந்தார். இதற்கு நடுவில் சீனப்பா அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

இப்போது, குடும்பத்தின் முழுப் பொறுப்பும் மூத்த மகனான தாசப்பனிடமே வந்தது. தந்தையின் வேலையையே மகனுக்கும் கொடுத்தார், திவான். ஆனால், கல்வி, அனுபவங்களின் குறைவால், தாசப்பனுக்கு அதனை சமாளிக்க முடியவில்லை. மறுபடி முன்பு இருந்ததைப் போலவே ஏழ்மை வந்தது. கப்பம் கட்ட வேண்டியவர்களும், சரியாகக் கட்டாமல், தாசப்பனின் நல்ல குணத்தால், அவரை ஏமாற்றினர். வேறு சில இடைத் தரகர்கள், கப்பத் தொகையை திருடினர். இதனால், தான் ஏற்றுக்கொண்ட வேலையை தன்னால் சரியாக செய்ய முடியவில்லை என்னும் குழப்பம் அவரை சூழ்ந்தது.

இரண்டாம் காசி யாத்திரை

தாசப்பனின் மனதில் முன்னர் இருந்த வைராக்கியம், இத்தகைய கஷ்டங்களால் மேலும் பக்குவப்பட்டு, இன்னொரு முறை கங்கா ஸ்னானம் செய்ய வேண்டும் என்னும் விருப்பத்தை வளர்த்தது. அதே போலவே, மறுபடி யாருக்கும் சொல்லாமல், தனியாக இரண்டாம் முறையாக காசிக்குப் புறப்பட்டார். மறுபடி வழியில் அவருடைய பொருட்கள் அனைத்தும் திருடர்களால் திருடப்பட்டன. பித்ரு ருணத்தை செலுத்த வேண்டி, தாசப்ப முதலில் கயா க்ஷேத்திரத்திற்கு சென்றான். அங்கு விதிப்படி பித்ரு காரியத்தை நிறைவேற்றி, விசேஷ தன்யதையை அடைந்தார்.

மத்தெ பொரடரு ஸிரி உத்தமஸ்லோகஹரி
பெத்த கங்கெய ஸ்னான கயெயல்லி பிண்டவ
நித்து மரளிபந்து வாரணாஸியல்லி
உத்தமர ஸங்கதிந்த -- ஸ்ரீஹயவதன விட்டலதாசர்

வாரணாஸிய யாத்ரெ தீரதனதலி போகி
மூரொந்து வத்ஸரகெ திருகி பந்து
ஸேரி யாதவகிரிய தாருணியொளகெ ஈ
ராரு வத்ஸரவித்து மரளி போதரு கயகெ
-- ஸ்ரீஹயவதன விட்டலதாசர்

இதுவும்கூட தாசப்பனின் அடுத்து வரும் சாதனைகளுக்கு ஒரு முன்னோட்டமாக இருந்தது. எத்தகைய துக்க நிலையிலும், தேவயக்ஞ, ரிஷியக்ஞ முதலான மஹாயக்ஞங்களை எப்போதும் விடக்கூடாது என்பதே சாஸ்திரத்தின் கட்டளை. அதனை பின்பற்றுபவர்களின் வாழ்க்கை, வளம் பெறும் என்பதற்கு இந்த சம்பவமே சாட்சி.

காசிக்குச் சென்ற தாசப்ப, அங்கு இருக்கும் மணிகர்ணிகா காட்டினில் தங்கினான். உலக சிக்ஷணைக்காக மகாவிஷ்ணு, ஒரு தபஸ்வியின் வேடத்தில் நிலைத்து, தன் சக்ரத்தினால் ஒரு பள்ளத்தை தோண்டினாராம். அந்த சமயத்தில் அவனின் உடம்பிலிருந்து வெளிவந்த வியர்வை போன்ற தண்ணீரால் அந்த இடம் நிரம்பியது. சிவன் அங்கு வந்து, விஷ்ணுவின் அந்த ஆளுமையைக் கண்டு தலை வணங்கியபோது, அவரின் கர்ணகுண்டலங்கள் மற்றும் கிரீடங்களில் இருந்த அனைத்து மணிகளும் அறுந்து, அங்கு விழுந்தன. பார்வதியின் தோடிலிருந்து ஒரு மணியும் அங்கு விழுந்தது. அதற்காகவே இதற்கு மணிகர்ணிகா தீர்த்த என்று பெயர் வந்தது என்று புராணம் சொல்கிறது.

இன்றும் தினமும் காசி விஷ்வநாதன், அங்கு காலையில் ஸ்னானத்திற்காக வருகிறார் என்பது நம்பிக்கை. அத்தகைய பவித்ரமான இடத்தில் தேகத்தை விடுபவனுக்கு, காசி

விஷ்வநாதனே, ராம தாரக மந்திரத்தை உபதேசம் செய்கிறார் என்று புராணத்தில் இருக்கிறது. அத்தகைய பவித்ரமன இடமே தாசப்பனின் வசிப்பிடம் ஆயிற்று. விஷ்ணு பாதோதகமான கங்கையில் ஸ்னானம். மனோ நியாமகனான விஷ்வநாதனின் தரிசனம், சர்வோத்தமனான பிந்து மாதவனின் தியானம் ஆகியவையே அவருடைய நித்ய செயல்கள் ஆயின. கங்கா ஸ்னானத்தினால் தேகம் சுத்தி ஆனது. விஷ்வநாதனின் தரிசனத்தால் மனம் நிர்மலம் ஆயிற்று. பிந்து மாதவனின் நித்ய தியானம் அவருடைய வாழ்க்கைக்கு புதிய திருப்பத்தைக் கொடுக்கக்கூடிய தவம் ஆயிற்று. ‘தெகெயரோ நின்னல்லி மனவ ஒம்மெகாதரு, ஜகன்னாதவிட்டல நின்னவரேனு தன்யரோ’. மொத்த சஜ்ஜனர்களின் உத்தாரத்திற்காக காரணமாகும் அமூல்ய சாதனமாயிற்று. நாட்கள் நகர நகர, தாசப்பனின் முகத்தில் தெய்வ காந்தி அதிகரித்தவாறு ஒளிர்ந்தது. ஆனால், புற வாழ்க்கையில் மட்டும் என்றைக்கும்போல ஏழ்மையே நிறைந்திருந்தது.

கெலவு தின ஸம்ஸார கலபியொளு இருதிர்து
ஜலதொளகெ அம்புஜவு மிளிதவாகித்த தெர
ஹளிது துஷ்டாஸெயனு களெது கடு மமதெயனு
புளகொத்ஸமனதி தாளி ।
ஜலதொளுத்தமவாத பாகீரதி யாத்ரி
சலபகுதியிந்தலி மாடி மோததி ஹரிய
ஹலவு பகெ லீலெயனு ஹருஷதிந்தலி இன்னு
திளிது குருகருண பலதி ॥
அல்லி குருகள தியானதல்லி த்ருடவாகி மன
நில்லிஸி வர படெது நானாகு பரியு ஸிரி
வல்லபன மூர்த்தி மனதொளு கண்டு ஸுகமனதியல்லி
லோல்யாடிகொளுத ॥ --ஸ்ரீவேணுகோபாலதாசர்

அன்றொரு நாள் அருணோதய காலம். அன்று தாசப்பனின் பிராரப்தம் பரிகாரம் ஆகும் நாள். தூக்கத்தின் கடைசிப் பகுதியில் இருந்த தாசப்பனுக்கு புரந்தரதாசரின் ரூபத்தில் ஸ்ரீலட்சுமி நரசிம்மஸ்வாமியின் தரிசனம் ஆயிற்று. தாசப்பனின் கை பிடித்து, கங்கையின் அடுத்த கரையில் இருந்த வியாஸகாசிக்கு

அழைத்துச் சென்று, அங்கு தாசப்பனுக்கு 'விஜயவிட்டலா' என்னும் அங்கிதத்தைக் கொடுத்தார். ஷாந்தி மந்திரத்துடன் வித்யையை அருளினார். சாஸ்திர செய்தியை உலகிற்கு எடுத்துச் சொல்லும் தீக்ஷையை அருளினார். மறுபடி அங்கிருந்த ஸ்ரீவேதவியாச ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று, தாசப்பனை ஸ்ரீவேதவியாஸ தேவருக்கு வணங்கச் செய்து, அவர் மூலமாக அபயம் அளிக்கச் செய்தார். கையில் ஏழு தந்திகளைக் கொண்ட தம்பூரி, ஒரு ஜோடி தாள, ஒரு சிட்டிகெ மற்றும் கால் சலங்கைகள் மற்றும் ஒரு கோபாளபுட்டி ஆகியவற்றைக் கொடுத்தார். மறுபடி காசியின் கங்கைக் கரைக்கு திரும்பச் செய்தார். அவருடைய 'அந்தரங்கத கதவு தெரெயிதிந்து' என்னும் அருமையான கிருதி, அவருடைய இந்த அற்புத மாற்றத்தை ஆவணப்படுத்துவதை கவனிக்க வேண்டும்.

அந்த சமயத்தில் தாஸப்பனுக்கு முழிப்பு வந்தது. அப்போது அவருக்கு ஆன மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்றானது. பகவந்தனின் அருளை ஊகிப்பதற்கும் அவனுக்கு சாத்தியமே ஆகவில்லை. தன்னுடைய அனுபவத்தின் சான்றாக தம்பூரி ஆகியவை அங்கேயே இருந்ததைக் கண்டார். அதிஅற்புதமான தெய்விக நிலையில் தாசப்ப ஹரிதாசனாக மாறியிருந்தான். ஸ்ரீஹரியின் சாட்சாத் அருளுக்கு பாத்திரர் ஆகி, 'ஸ்ரீவிஜயதாசர்' என்று உலகப்புகழ் பெற்றார். பல நூற்றாண்டுகளைத் தாண்டியும், பகவந்தனிடம் அழைத்துச் செல்லும் தார்மிக பிரக்ஞயை மக்களிடம் மூட்டினார்.

அம்புப் படுக்கையில் படுத்திருந்த பீஷ்மருக்கு ஸ்ரீகிருஷ்ணன் அருளிய மகாபாரத சம்பவத்தை இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனை கைலாயத்திற்கு அழைத்துச் சென்று, சிவனிடமிருந்து பாசுபத அஸ்திரத்தை பெற்றுத் தந்த, துரோண பர்வத்தின் சம்பவத்தையும் சொல்லலாம். இவ்வாறு கனவில் இன்னொரு இடத்திற்கு அழைத்துச் செல்லும் சாத்யதையை உபநிஷத் வாணி இவ்வாறு சொல்கிறது. பஹிஷ்குலாயாம்.

ஸ்ரீவிஜயதாசரின் இந்த சுளாதி, இந்த சம்பவத்தை தொகுத்து சொல்லியிருக்கிறது.

த்ருவ தாள

குருதாஸராயரெனகெ தாஸத்வ நீடோ க்ரம
கருணதிந்தலி வ்யாஸகாஷியல்லி
ஹருஷதி மனமுட்டி பேளித்தெ பேளுவெனு
நரஷிரோமணிகளு கேளுவது
ஸிரிமத்வமுனிக்ருத ஸித்தாந்த ஸாரவன்னு
குருவ்யாஸமுனி முகதிந்த திளிதுகொண்டு
தாரதம்ய பஞ்சபேத மொதலாத தத்வங்கள
பரிஷோதனவகெய்து மந்தரிகெ
ஹரிகருணவ மாள்வ தத்வ ரஹஸ்யவன்னு
பரி பரி ஸுளாதி பத முக ப்ராக்ருததி
ஸிரி விஜயவிட்டலன ப்ரீதிகோஸுக
திரிபாதோன பஞ்சலக்ஷ பேளிஹனெந்து ||1

மட்ட தாள

ஸாதுஸம்மதவெனிப பாதகள பூரெயிஸுத
மோத ஸம்ஸ்க்ருத வெந்து ஸாகரதலி படிஸி
பூதர விஜய விட்டலன்ன
பாதவனெ காம்புவது ஸத்ய ஸத்ய ||2

த்ரிவிடி தாள

முனி மத்வ ஹ்ருதயவெ ப்ராக்ருத க்ரந்தவிது
ஜனரிகெ பேளபேகாததெ
கனவாத தைதரீயதல்லி பேளித ஷாந்தி
மனதி பேளிஸுத்த தத்வகள
அனுவாகி திளிஸுத்த ஸ்ரீனிவாஸன பாத
வனருஹ தோரபஹுது நம்பிதவரிகெ
வனஜனாபன பாத துதிபந்த ஷக்திகெ

கனகத ரூபதங்கிதவு கொட்டு மத்து
அனுனயதிந்த ஷாந்திபேளிஸி தத்வகளு
மனதிந்தருஹ பஹுது ஸுகுணரிகெ
மனுஜரிகங்கிதவு ஷாந்தியு இல்லதலெ
அனுவாகி பேள்த தத்வகளு வ்யர்த்த காணோ
தனுஜதல்லண விஜயவிட்டலன்ன தாஸதன
வனு தரிஸோது பஹு கஷ்டகஷ்டவெந்து ||3

அட்ட தாள

ஸ்வதந்த்ர தாஸனு துதிஸலு பலவேனு
ஸதத மாடுவ புண்ய ஜிதகெ நில்லதலெ அ
ஸதிய வ்ரததந்தெ ச்யுதவாகி போபோது
கதிகெ ஸாதனவில்ல ரதிபதி பித நம்ம விஜயவிட்டலன்ன
அதிதயபடெதவர சிஷ்யனாகதெ கதி இல்ல ||4

ஆதி தாள்

குருத்வாரவெ கதி எம்ப மானவனிகெ
பரம ஷாந்தனிகெ வர வைஷ்ணவனிகெ
துரபுத்தி இரதவகெ நிரத சிஷ்யனிகெ
உருதர தத்வகளு அவிரத பேளலு
தொரெவனாக்ஷணதல்லி விஜயவிட்டலரேய
பரம ஹருஷபட்டு நலிதாடுவனெந்து ||5

ஜதெ

கூர்ராயராக்லு ஸ்வீகரிஸுவ நரரிகெ
ஸிரி விஜயவிட்டலனெ பொளெவனு நிஷ்சய ||6

விஜயதாசர் ஆன தாஸப்பா

அன்றிலிருந்து ஸ்ரீவிஜயதாசரின் வாயில் தொடர்ச்சியாக பகவத் ஸ்தவனங்களே வெளிவந்தன. அன்று வரை சாமான்யராக இருந்த

அவரது வாயிலிருந்து வரத்தொடங்கிய உபதேச வாணி, காசி நகர மக்களை வியப்பில் ஆழ்த்தியது. 'அவரந்த வசனகளெல்ல வேதார்த்தவாகி அவனியொளு பஸரிஸிதவு' என்று ஸ்ரீபுரந்தரதாசரைப் பற்றி இவர் கூறிய வாக்கு, இவருக்கும் அப்படியே பொருந்தியது. ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் 10 கிருதிகள் என கிருதிகளை இயற்றும் வேலை தொடங்கியது. அவருடைய பேச்சு, நடவடிக்கை, கிருதிகளால் மக்கள் விசேஷ அமைதியை / நிம்மதியை பெறத் தொடங்கினர். இப்படியே இந்த பேச்சு, காசி ராஜனின் காதிலும் விழுந்தது. பலரிடம் இதைப் பற்றி கேட்டுத் தெரிந்து கொண்ட அரசன், தன் திவான் மூலமாக, ஸ்ரீவிஜயதாசரை ராஜமரியாதைகளுடன் தன் சபைக்கு அழைத்து வரச் செய்து, தன்யர் ஆனார். தாசரின் அபாரமான தேஜஸ்ஸிற்கு மயங்கிய அரசன், தான் முன்னர் நினைத்ததைவிட அதிகமான மரியாதைகளை அவருக்கு சமர்ப்பித்தான். அபூர்வ பல்லக்கு ஒன்றினை சமர்ப்பித்து கௌரவித்தான். மற்ற பதார்த்தங்களை ஏற்றுக்கொண்ட அவர், பல்லக்கியை வேறொரு நாள் பெற்றுக் கொள்வதாக சொல்லி அங்கிருந்து புறப்பட்டார்.

அரசன் கொடுத்த பதார்த்தங்களையெல்லாம் அங்கங்கு இருந்த தகுதியானவர்களுக்கு பகிர்ந்து அளித்தார். அந்த விவரத்தை அறிந்த அரசனுக்கு அவர் மேல் இருந்த மரியாதை மேலும் அதிகரித்தது. தாசரின் பன்முக ஆளுமைக்கு மனம் மயங்கிய மக்கள், அவரின் சிஷ்யர்களாக ஆகத் தொடங்கினர். ராஜ மகாராஜகுருகளைவிட அதிகமாக இவருடைய மகிமை பரவத் தொடங்கியது. தாஸப்ப என்னும் பெயர் கொண்ட இவருடைய தாஸானுதாஸராக ராஜமகா ராஜகுருகள் வரத்தொடங்கினர்.

சீகலபரவியில் தாசரின் வைபவம்

இதற்குள் சீகலபரவிக்கு செல்வதாக தாசர் சங்கல்பம் செய்து கொண்டார். சிஷ்யர்களான பலருடன் அவர் பிரயாணத்தை தொடங்கினார். அவருக்கு முன்னரே அவருடைய புகழ் ஊரெங்கும் பரவியிருந்தது. வழியெங்கும் அந்தந்த ஊர் ராஜ மகாராஜர்கள், ஊர் பெருமக்கள் அனைவரும், தாசரிடமிருந்து உபதேசம் பெற்று

தன்யர் ஆகி, அபாரமான காணிக்கைகளை கொடுத்தவாறே இருந்தனர். அப்படி கொடுக்கப்பட்ட காணிக்கைகளை அவருடன் அனுப்பும் ஏற்பாட்டினையும் அவர்களே செய்தனர். அவர் ஆதவானிக்கு வரும் வேளையில் அவருடைய ஆளுமை அனைவரும் பேசக்கூடியதாக இருந்தது.

ஆதவானியின் மக்களுக்கோ பண்டிகையின் கோலாகலம். தம்முடைய தாஸப்பா, இன்று ஸ்ரீவிஜயதாசர் என்று புகழ்பெற்று குருஸ்தானத்தில் இருப்பது அவர்களுக்கு அபாரமான கௌரவ விஷயமாக இருந்தது. ஸ்ரீபுரந்தரதாசர் மற்றும் அவருடைய புத்திரர்களின் காலத்திற்குப் பிறகு, சிறிது குறைந்திருந்த ஹரிதாச வாஹினி, மறுபடி புத்துணர்ச்சி பெற்று பரவத் தொடங்கியது. பஜனை, ஹரிகீர்த்தனைகள் அனைத்து இடங்களிலும் நிரந்தரமாக நடந்தன.

விஜயதாசரின் வழிகாட்டுதலில் மக்களுக்கு மறுபடி ஆத்யாத்ம தீபத்தின் மகிமை தெரிந்தது. உபதேசத்துடன் அனுஷ்டானமும் சேர்ந்ததால், அவரைப் பற்றிய மரியாதை நம்பிக்கைகள் மக்களிடம் அபாரமாக வளர்ந்தன. அடுத்து சில நாட்களில் அவர் தம் பிறந்த ஊரான சீகலபரவியை அடைந்து, தம் உற்றார் உறவினர்களை சேர்ந்தார். அவருடைய வயதான தாய்க்கோ, தன்னுடைய மகனின் சாதனைகளைக் கண்டு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தம் குலதேவதையான ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமிக்கு தம் அனைத்து சாதனைகளையும் சமர்ப்பித்த ஸ்ரீவிஜயதாசர், அன்றிலிருந்து அந்த இடத்தையே தம் முக்ய கார்யக்ஷேத்திரமாக ஆக்கிக் கொண்டார். குசேலனின் முந்தைய வாழ்க்கையைப் போல இருந்த ஸ்ரீதாசரின் வாழ்க்கை, இப்போது குசேலன் கிருஷ்ண அருளுக்குப் பிறகான சிறப்பான வாழ்க்கையைப் போல மாறியது. ஒரு அர்த்தத்தில், கலியுகத்தின் குசேலனே என்னும் பெருமை இவருடையதாயிற்று. ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் முந்தைய மற்றும் பிறகான வாழ்க்கையும்கூட ஒரு விதத்தில் இப்படியாகவே இருந்தது என்பது நாம் அறிந்ததே.

திருப்பதி யாத்திரை

தாசதீக்ஷையைப் பெற்று ஆதவானிக்கு வந்த சில நாட்களில், ஸ்ரீதாசருக்கு திருப்பதி யாத்திரை மேற்கொள்ளும் விருப்பம் வந்தது. ஸ்ரீகோபாலதாசர் முதலான சிஷ்யர்களுடன் பாதயாத்திரையாக திருப்பதிக்கு நடந்தார். கபில தீர்த்தத்தில் ஸ்னானாதிகளை முடித்து, பகவந்தனுக்கு சாஷ்டாங்கமாக வணங்கி, திருப்பதி மலையில் ஏறத் தொடங்கினார். அடுத்து, வெங்கடகிரி யாத்ராகிரம என்னும் சுளாதியில் தாமே சொல்லியிருப்பதைப் போல, சாஸ்திரோக்தமாக ஸ்ரீபூவராக, ஸ்ரீனிவாசனை தரிசனம் செய்து தன்யர் ஆனார். இது அவரே சொல்லியிருப்பதைப் போல, 'ஹிமருது ப்ரதமமாஸத தசமி ஹிமகரவார தினதல்லி க்ரமதிந்தலி போகி பிம்ப மூருதிய நோடிதெ'. ஹேமந்த ருதுவின் முதலாம் மாதத்தின் தசமி திங்கட்கிழமை - அதாவது இது முக்கோடி த்வாதசிக்கு முன்னரான தசமி என்று ஆகிறது. அதாவது, ஸ்ரீதாசரின் முதல் திருப்பதி தரிசனம், முக்கோடி த்வாதசி சமயத்தில் ஸ்வாமி புஷ்கரிணி ஸ்னானத்திற்கு சென்றார் என்று தெரிகிறது. அப்போது தாசருக்கு 35 வயது. அன்றிலிருந்து பல முறை திருப்பதி யாத்திரை செய்த குறிப்புகள் அவருடைய வரலாற்றிலிருந்து தெரிகிறது.

அவருடைய தீர்த்தக்ஷேத்திர மஹிமா சுளாதியில் 30க்கும் அதிகமான கிருதிகள் வெங்கடகிரியை சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும், பிரம்மோத்ஸவத்திற்கு தவறாமல் திருப்பதி செல்லும் பழக்கத்தை வைத்திருந்தார். சில முறை வேறு காலங்களிலும் என, அவருடைய திருப்பதி யாத்திரை மட்டும் எண்ணிக்கை இல்லாததாக இருக்கிறது.

ஸ்ரீவிஜயதாசர் தரிசனம் செய்த தீர்த்த க்ஷேத்திரங்கள்

ஸ்ரீவிஜயதாசரின் தீர்த்த யாத்திரைகள் மிகவும் கவனிக்கத்தக்கவை. அவர் ஹரிதாச தீக்ஷையை ஏற்றபிறகு, மொத்தம் 18 ஆண்டுகள் வரை தீர்த்த யாத்திரையை ஒரு விரதத்தைப் போல செய்தார்

என்பது ஸ்ரீஹயவதனதாசரின் கிருதியிலிருந்து தெரிய வருகிறது. அவர் காசி யாத்திரையை செய்தது மொத்தம் மூன்று முறை. காஞ்சி, காளஹஸ்தி, ஸ்ரீரங்க, ஸ்ரீராமஸேது யாத்திரை ஆகியவற்றை ஐந்து முறை செய்தார். முன்னர் கூறியதைப் போல, அவர் செய்த திருப்பதி யாத்திரைக்கு எண்ணிக்கையே இல்லை.

பரத கண்டத்தை பலமுறை சஞ்சரித்த புகழ் ஸ்ரீவிஜயதாசருடையது. அவர் தரிசித்த தீர்த்த க்ஷேத்திரங்களின் விவரங்களை கிருதியாக, பௌராணிக பின்னணியில் விளக்கிய பெருமையும் அவருடையதே ஆகும். ஸ்ரீவாதிராஜ தீர்த்தரின் தீர்த்த பிரபந்தத்தைப் போல, இவருடைய தீர்த்த க்ஷேத்திர கிருதிகளும் கவனிக்கத் தக்கவையே. அவர் கொடுத்துள்ள பற்பல விவரங்கள் மிகவும் அபூர்வமானவை அந்தந்த தீர்த்த க்ஷேத்திரங்களின் சிறப்பினையும் தெளிவாக விளக்கியுள்ளார். இன்று கிடைத்திருக்கும் ஹரிதாசர்களின் கிருதிகளில், தீர்த்த க்ஷேத்திரங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிக கிருதிகளில், ஸ்ரீவிஜயதாசருடைய கிருதிகளே அதிகம் என்பதை பார்க்கிறோம்.

பொருளாதாரம், வாகன வசதி, இயற்கை சீற்றங்கள் என பல்வேறு பிரச்னைகளுக்கிடையே நாட்டின் பல தீர்த்த க்ஷேத்திரங்களுக்கு விடாமல் பயணம் செய்ததோடு மட்டுமல்லாமல், அவற்றைப் பற்றி விசேஷமாக எழுதியும் வைத்தது சிறந்த சாதனையே. கடிகாசலம், வக்கல, அனந்தகிரி முதலான க்ஷேத்திரங்களைப் பற்றி ஸ்ரீதாசர் கொடுத்திருக்கும் விவரங்கள், அவரின் திவ்ய ஞானத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். வைஷ்ணவ யாத்திரிகர்களுக்கு, பயணக் கையேடாக விளங்கக்கூடிய இவருடைய கிருதிகள் கன்னட ஸாஹித்யத்திற்கு கிடைத்திருக்கும் அபூர்வ பரிசுகள் ஆகும். இவற்றில் பெரும்பாலானவை சுளாதிகள் என்பது இன்னொரு அற்புதம். ஸ்ரீதாசருடன் யாத்திரை மேற்கொண்டவர்களுக்கு, அது அவர்களுக்கு கிடைத்த பெரும்பேறு என்றே சொல்ல வேண்டும்.

ஸ்ரீதாசரின் கிருதிகளிலிருந்து தெரிய வருவதைப் போல, அவர் தரிசித்த மற்றும் வர்ணித்த தீர்த்த க்ஷேத்திரங்களின் விவரங்களை

இவ்வாறு பட்டியல் இடலாம். இவற்றில் அவர் மூன்று முறை காசி யாத்திரை செய்தார் என்னும் குறிப்பும் வருகிறது.

ஸ்ரீவிஜயதாசரின் பயண க்ஷேத்திரங்களின் பட்டியல்:

1. திருப்பதி	2. அஹோபல	3. ஸ்ரீசைலம்	4. மஹாநந்தி
5. கனககிரி	6. ஹம்பி	7. யந்த்ரோ த்தாரக	8. நிவ்ருத்தி ஸங்கம
9. காஞ்சி	10. ஸ்ரீ முஷ்ணம்	11. கும்ப கோணம்	12. அருணாசல
13. மத்யார் ஜுன	14. ஸ்ரீரங்கம்	15. அளகிரி	16. மதுரை
17. குரங்கக் ஷேத்ர (பஞ்ச திருப்பதி)	18. தர்ப்ப ஷயன	19. ராமேஸ்வர	20. தாமிர பரணி
21. சுசீந்திரம்	22. அனந்த சயன	23. தோத்தாத்ரி	24. கடிகாசல
25. மன்னார் குடி	26. கதரி	27. வர்க்கால (வக்கல)	28. கன்யா குமரி
29. உடுப்பி	30. சுப்ரமண்ய	31. சங்கர நாராயண	32. கோடேஷ்வர
33. ஹரிஹர	34. காகினெலெ	35. ஸோதா	36. சாயா
37. ஷ்வேத ஸ்ருங்கி	38. பண்டராபுர	39. அனந்தகிரி	40. பிரயாக
41. காசி	42. கயா	43. மந்த்ராலய	44. வ்ருத்தாசல
45. த்வாரகா	46. ஜகன்னாத புரி	47. திருவனந்த புர	48. புஷ்கர
49. அயோ த்யா	50. பேலூரு	51. நட்யந்தாடி (மத்யவாட)	52. தண்ட தீர்த்த
53. விமான கிரி	54. பாஜக	55. விஜயவாடா	56. கதரி

இந்த சமயத்தில் ஸ்ரீதாசர் தரிசித்த இன்னொரு இடம் காமவர என்பது. ஸ்ரீவியாச தீர்த்தர் பிரதிஷ்டை செய்த முக்யபிராணர்

இங்கு இருக்கிறார். இந்த க்ஷேத்திரங்களின் வழியில் இன்னும் பல க்ஷேத்திரங்களை ஸ்ரீதாசர் தரிசித்த தகவல்களும் உள்ளன. ஸ்ரீதாசர் பள்ளாரி ஜில்லாவில் ஹரபணஹள்ளியை தரிசனம் செய்து, அங்கு சில நாட்கள் தங்கியிருந்தார் என்று சிலர் சொல்கின்றனர்.

தெற்கு தீர்த்த யாத்திரை

திருப்பதியிலிருந்து புறப்பட்ட தாசரின் யாத்திரை, ராமேஸ்வரம், கன்யாகுமரி, தோத்தாத்ரி, திருவனந்தபுரம், வர்கால, சுப்ரமண்ய, உடுபி ஆகிய க்ஷேத்திரங்களுக்கு ஒரு பிரதட்சிணம் போல சுற்றி வந்தது. அவருடன் வழக்கம்போல பல சிஷ்யர்களின் குழு. வழி முழுவதும் பற்பல ஊர்களில் மக்களால் அமோக வரவேற்பு. இத்தகைய தீர்த்த யாத்திரையை முடித்துக்கொண்டு ஸ்ரீதாசர் மறுபடி சீகலபரவிக்கு வந்தார்.

உடுப்பியில் ஸ்ரீவிஜயதாசர்

பரசுராம க்ஷேத்திரத்தில் முக்கியமான இடம் உடுப்பி. முந்தைய பெயர் ரஜதபீடபுரி. சர்வோத்தமான ஸ்ரீஹரி, பரசுராம ரூபத்தினால் அனந்தாசனனாக நிலைத்திருக்கும் இடம். அங்கு மனோ நியாமகரான சந்திரமௌளீஷ்வரர் இருக்கிறார். அனந்தேஷ்வரனின் முன்னர் சந்திரமௌளீஸ்வரர் என்றால், பக்தனின் பின்னால் பகவந்தன். ஸ்ரீதாசரின் ‘பகுத ஜன முந்தெ, நீனவர ஹிந்தெ’ என்னும் கிருதி இதையே சொல்கிறது. வாயுதேவரின் மூன்றாம் அவதாரமான ஸ்ரீமத்வாசார்யரால், உடுப்பி, கலியுகத்தின் மஹா புண்ணிய க்ஷேத்திரம் ஆனது. த்வாரகையிலிருந்து ஸ்ரீருக்மிணி கரார்ச்சித ஸ்ரீபாலகிருஷ்ணன் அவருக்காக இங்கு வந்தான். ஸ்ரீமத்வாசார்யரின் முக்கிய கார்ய க்ஷேத்திரமான உடுப்பி நித்யமங்களங்களின் சுவர்ணபீட எனப்பட்டது. அனைத்து வைஷ்ணவர்களின் மகாசாதன க்ஷேத்திரம் எனப்பட்டது. ஸ்ரீகிருஷ்ணன் அன்ன பிரம்ம என்று அழைக்கப்பட்டு, அனைத்து பக்தர்களுக்கும் ம்ருஷ்டான்ன போஜனங்களை அளிக்கும் ஸ்வாமி எனப்பட்டான்.

அடுத்து ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகளின் காலத்தில் அவரின் புகழ், ஸ்ரீமதாசார்யரின் காலத்தின் சிறப்பினை மறுபடி கொண்டு வந்தது. ஸ்ரீவியாஸராஜர், ஸ்ரீவிஜயீந்திரர், ஸ்ரீராகவேந்திரர், ஸ்ரீவித்யாதீஷர் முதலான மகா ஞானிவரேண்யர்கள் அந்த க்ஷேத்திரத்தை தரிசித்து அனேக நாட்கள் வரை அங்கேயே இருந்த தகவல்கள் கிடைக்கின்றன. ஸ்ரீபுரந்தரதாசர் உடுப்பி கிருஷ்ணனை விதம்விதமாக கொண்டாடியிருக்கும் பல கிருதிகள் உள்ளன. ஸ்ரீகனகதாசரோ அங்கேயே பல காலம் இருந்து வணங்கியதற்கான சான்றுகள் பல உள்ளன.

ஸ்ரீகிருஷ்ணனுக்கு தினமும் கஞ்சி சமர்ப்பிக்கும் விதியைக் கொண்டு வந்தவர் ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள். கனகதாசர் ஸ்ரீகிருஷ்ணனுக்கு சமர்ப்பித்த கஞ்சியைக் குறிக்கும் விதமாக இந்த ஏற்பாட்டினை செய்தார் என்பது ஐதீகம். உடுப்பிக்கு அருகில் இருக்கும் பாஜகவோ, ஸ்ரீமதாசார்யரின் அவதார பூமியாகும். ஹனுமத் அவதார பூமியான திருப்பதியைப் போல, பீமாவதாரத்தின் அவதார பூமியான் பதரியைப் போல, பவித்திரமாக இருக்கும் ஒரு க்ஷேத்திரம். உடுப்பியில் ஸ்ரீஅனந்தாஸனம் இருந்தால், பாஜக க்ஷேத்திரத்தில் அனந்தாஸனின் மூர்த்தி இருக்கிறது. இது மூலத: அனந்தாஸனனின் உத்ஸவ மூர்த்தியாக இருந்தது என்கிறார்கள். ஸ்ரீமதாசார்யர் கடைசியில், அனைவரின் கண் பார்வையிலிருந்து மறைந்த இடமும் அனந்தாஸனனின் சன்னிதியே ஆகும். உடுப்பியில் ஸ்ரீகிருஷ்ணனின் பிரஸாதத்தின் ஒவ்வொரு பதார்த்தமும் எப்படி விதவிதமான பலன்களுக்கு காரணமாகிறது என்பதை விளக்கும் ஸ்ரீதாசரின் ஒரு கிருதி அவருடைய உடுப்பி வாசத்தின் ஆவணமாக இருக்கிறது.

ஆவ ஜென்மத புண்ய பலிஸிதெனகெ
ஈ உடுப்பி கிருஷ்ணன ப்ரஸாத புஞ்சிஸிதெ ||ப

லவணவனு ஸவிதுணலு பலுஜன்மதலி இத்த
பவராஷிகளு ஹாரி பயலாதவு
நவவித பகுதிய மார்க்கவனெ திளிது மா

நவரொளகெ பரிஷுத்தனாதெ குரு கருணதலி ||1

ஷாகபல கைகொளலு அரிஷட்வர்க்ககளிந்த
ஷோகவனெ பந்திரலு பென்னு பிட்டு
தா கட்டு போகுவவு ஏனெம்பெ ஸோஜிகவு
லோகதொளகெ நம்ம குலகோத்ரஜரெ தன்ய ||2

ஸூபவனு உண்டரெ முந்தட்டி பருதிப்ப
ஆபத்து களவளிஸி ஹிந்தாதவு
பாபுரெ மோக்ஷமார்க்கக்கெ பலுதீவ்ரதலி
ஸோபான தொரகிதவு ஏனெம்பெ ஸோஜிகவு ||3

பக்ஷ்யகளு மெலலாகி பக்தி புட்டுவதய்ய
அக்ஷயவாகுவது இத்த புண்ய
அக்ஷரவந்தனு தானாஹ ஸர்வதா
மோக்ஷஸாதன மாள்ப மனஸு புட்டிது நோடா ||4

ஓதனவு உதரதலி தும்பலாக்ஷணதல்லி
ஸாதுகள சங்கதியு கடிஸுவது நோடா
பேதார்த்தஞான பந்தோதகுவது குரு பூர்ண
போதர மததல்லி லோலாடுவானந்த ||5

க்ருத ததி தக்ர மொதலாத வ்யஞ்சன உணலு
ஹிதவாகுவவு ஸகல இந்திரியகளு
ஸதத துர்விஷயக்கெ போகதலெ ஆவாக
ரதிபதிபிதன பதஸேவெயொளகிப்பவு ||6

கிருஷ்ண ஸந்தருஷன ம்ருஷ்டான்ன போஜன
கஷ்டனாஷன சர்வ கர்மகதிக
இஷ்டஸுக ஸௌக்யதர மத்தாவல்லி காணெ
ஸ்ருஷ்டியொடெய விஜயவிட்டலனு தயவாகெ ||7

தொடர்ந்த சஞ்சாரம்

ஸ்ரீதாசர் உடுப்பியிலிருந்து சுப்ரமண்ய, குமார பர்வத ஆகிய க்ஷேத்திர மூர்த்திகளை தரிசித்துவிட்டு, க்ரோடேஷ்வர க்ஷேத்திரத்திற்கு வந்தார். அங்கு க்ரோட சங்கர நாராயணனை தரிசித்தார். பிறகு ஹரிஹர வழியாக ஸ்ரீகனகதாசரின் க்ஷேத்திரமான காகினெலெக்கு வந்தார். ஸ்ரீகனகதாசரின் வேண்டுகோளுக்கு ஏற்ப, ஸ்ரீவியாசராயர் பிரதிஷ்டை செய்த ஆதிகேசவ மூர்த்தி அங்கு இருக்கிறது. இங்கு ஸ்ரீதாசர் ஒரு அபூர்வ கிருதியை இயற்றினார்.

ஸலஹோ ஸாத்விக தெய்வவெ காகினெலெயாதி கேஷவ
நீரத வர்ண ஆதிகேஷவா ||ப

கனக காமினி கும்பிணியிந்த பருவ சிந்தெ
கனஸினொளகாதரு தூராகலி
கனகோதரகெ ஸாம்யவாத ஜீவனதல்லி
கனலதெ பகுதி இரலி எந்தெந்திகெ
மனவு நின்னாதீன தேவரதேவ ||1

கனக நயன மயன கண்டவரிகெ ஞான
கனகவருஷவ கரெவ வாஸுதேவ
கனககேஷப்ரிய காமிதபலதாயக
கனக பர்வததிந்த பந்த கோவிந்த வ
சனவெ நின்னாதீனவோ தேவர தேவ ||2

கனக மாலிகெ ஒலித கமலத லோசன
கனகாம்பரதரானந்த மூர்த்தி
கனககாய நம்ம விஜயவிட்டலரேய
கனகரிஸுவாக நின்ன த்யானவெ கொடு
தனுவெ நின்னாதீனவோ தேவரதேவ ||3

விஜயவிட்டல பிரதிமை கிடைத்தது

ஸ்ரீதாசர் பயணத்தில் ராயச்சூருக்கு வந்தபோது, அங்கு ஒரு அற்புத சம்பவம் நடந்தது. அங்கு மாளிகி ஸ்ரீனிவாஸாச்சார் என்னும் மகாவித்வாம்சர் இருந்தார். அவருடைய முக்கிய ஆராத்யமூர்த்தி விஜயவிட்டல பிரதிமை. ஸ்ரீதாசர் அங்கு தங்கியிருந்தபோது, அவருக்கு அந்த பிரதிமையை விஜயதாசரிடம் கொடுக்கவும் என்னும் கனவு வந்தது. அப்போது முதுமையில் இருந்த ஸ்ரீனிவாஸாச்சார்யருக்கு அந்த பிரதிமையை தக்க ஒருவரிடம் கொடுக்க வேண்டுமே என்னும் கவலை ஏற்கனவே இருந்தது. ஆக அந்த கனவு வந்ததை நினைத்து மகிழ்ந்தார்.

உடனடியாக தாமே ஸ்ரீவிஜயதாசரிடம் வந்து, அவரை தம் இடத்திற்கு வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். பொதுவாக தாம் இருந்த இடத்திலேயே அனேக சிஷ்யர்களுடன், அதிதிகளுடன் உணவருந்தும் பழக்கமே ஸ்ரீதாசரிடம் இருந்தது. ஆனாலும், அவரும் அன்று தெய்வாதீனமாக இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டார். ஏதோவொரு ஒரு சிறப்பு சம்பவம் நடக்கவிருக்கிறது என்று அவருக்கும் தோன்றியது.

அதன்படி, அடுத்த நாள் ஸ்ரீனிவாஸாச்சார்யரின் வீட்டிற்கு ஸ்ரீதாசர் வந்தார். ஸ்ரீதாசரைக் கண்ட ஆசார்யருக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டானது. தம் வாழ்க்கை இன்று ஸார்த்தகம் ஆயிற்று என்று நினைத்தார். கடைசி முறையாக ஸ்ரீவிஜயவிட்டலனை பூஜித்து, உணவிற்கு முன்னர், ஸ்ரீதாசரிடம் அந்த பிரதிமையை சமர்ப்பித்து வணங்கினார். விஷயம் அறிந்த ஸ்ரீவிஜயதாசருக்கு ஆன ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை என்றானது.

தம் அங்கித மூர்த்தி இன்று தம்மிடம் வந்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்த ஸ்ரீதாசர், மிகுந்த பக்தி பாவத்துடன் அதன் ஏற்றுக்கொண்டு, அன்றிலிருந்து அதனை தம்முடைய முக்கிய ஆராத்ய மூர்த்தியாக வைத்துக்கொண்டார். அங்கித பிராப்தி ஆன, பல ஆண்டுகளுக்குப் பிறகு, அங்கித நாமத்தின் மூர்த்தி கிடைத்தது விசேஷமே.

இந்த சமயத்தில் ஸ்ரீதாசர் இயற்றிய கிருதி இவ்வாறு.

ஈதனீக விஜயவிட்டல ஈதனீக விஜயவிட்டல
மாது மாதிகெ நெனஸிதவர பாதககள பரிது யமன
யாதனெயனு களெது பொரெவா ||ப

கரெதரொந்தெ நுடிகெ பந்து கருணதிந்த முந்தெ நிந்து
கரவ பிடிது அந்து அபய கரவ பாலிஸித தயாஸிந்து
பரிபரியிந்தலி ஹிந்து முந்து துரிததிந்த நொந்து பந்து
இரலு தாஸர தாஸரனெந்து மொரெ விசாரிஸி ஸாகிதனெந்து ||1

அச்யுதானந்தனெம்ப நாம அச்சு ஸுதெயெனகெ நேம
நிச்ச உணலிகித்த ப்ரேம சச்சலதலி பூர்ணகாம
ஹெச்சி பப்ப மததா ஸ்தோம நுச்சு மாடி பிடுவ பீம
நிச்ச மனத குமுத ஸோம ஸச்சரித ஸார்வபௌம ||2

மொதல குரு புரந்தரதாஸர ஹ்ருதயதொளகெ நிந்தா ஷ்ருங்கார
உததியோ இது பண்ணிஸிபல்லிர த்ரிதஷரொளகெ காணெ ஞானர
ஸதமலானந்த பூர்ண இந்திர ஸதனா ப்ரதாபகுண பாராவார
சதுர விஜயவிட்டல கம்பீர பதோபதிகெ என்னய மனோஹர ||3

தம்பிக்கு ஹரிதாச தீக்ஷை

நிழல் போல, தன் வாழ்க்கை முழுவதும் தன்னுடனே இருந்து சேவை செய்து வரும் தம்பியான ஆனந்த தாசருக்கு, ஹயவதன விட்டல என்னும் அங்கிதத்தைக் கொடுத்து, ஹரிதாச தீக்ஷையை அருளினார் ஸ்ரீதாசர். இது ஸ்ரீமதாசார்யர் தம் பூர்வாசிரம தம்பியான ஸ்ரீவிஷ்ணுதீர்த்தருக்கு அங்கிதத்துடன் சன்யாச தீக்ஷையைக் கொடுத்த சந்தர்ப்பத்தை நினைவுபடுத்துகிறது.

ஒரு முறை ஒரு மகாசமாரம்பத்தில் ஒரு பக்தர் ஸ்ரீதாசரை இவ்வாறு கேட்டுக் கொண்டார். 'தாஸரே. நம் நித்ய ஸ்மரணைக்கு அனுகூலமாகுமாறு, ஹரிபக்தர்களின் நாமாவளியை இயற்றிக் கொடுக்க வேண்டும்' என்றார். ஸ்ரீதாசர் அத்தகைய பதம்

ஒன்றினை தம் தம்பியான ஆனந்ததாசரை இயற்றுமாறு கூறினார். அவரும் 'ஸந்தரன நெனெஸி ஜனரு' என்று துவங்கும் ஸந்தமாலிகெ என்னும் அபூர்வ கிருதியை இயற்றினார். அதன் கடைசி நுடியில் அதனை இயற்றிய இந்த சம்பவமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈ ஸந்தமாலிகெய மாடிகொடு எந்தொப்ப
தாஸ பேடிகொள்ளலு கருணதலி நஸுநகுத
தாஸவிஜயராய தம்ம ஸஹோதரகெ நிரூபிஸி ஆ க்ஷணதலி ।
லேஸாகி மாடிஸலு ஸர்வரிகெ உத்தார
வாஸுதேவன தோரி ஸத்கதிய பாலிஸுவ
வாஸெபந்தவ பிட்டு ஹயவதனவிட்டலன்ன தாஸரன கொண்டாடிரோ ॥

இந்த கிருதியில் அனைத்து யதிகளின், ரிஷிமுனிகளின் நாமாவளி வந்திருப்பது சிறப்பு. ஸ்ரீதாசரின் வாழ்க்கை வரலாறுக்கு தக்க ஆவணங்களாக இருக்கும் பல கிருதிகளை இயற்றியிருக்கும் பெருமை ஆனந்த தாசருடையது.

ஸ்ரீவிஜயதாசர் செய்த வாதிஜய

ஸ்ரீவிஜயதாசரின் வாழ்க்கையின் இன்னொரு அற்புதமான சாதனை - வாதிஜய. ஸ்ரீவியாஸராஜர், ஸ்ரீவாதிராஜர்கள் வாதிகளுக்கு சிம்ம சொப்பனத்தைப் போல இருந்தனர் என்பதை படிக்கிறோம். பரவாதி நிக்ரஹம் என்பது தத்வ பிரசாரத்தின் ஒரு முக்கிய அங்கம் என சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய வாதிஜய காரியத்திற்கு, ஸ்வமதத்தின் ஞானத்துடன், பிற மதங்களின் செயல்களும் தெரிந்திருக்க வேண்டும். அந்த காலத்தில், கிருஹஸ்தர்களாக இருந்த அனைத்து ஹரிதாசர்களும், யதிகளைப் போல, வாதி நிக்ரஹம் செய்வதற்கு ஏற்ற வியாஸ சாகித்யத்தின் வித்வாம்சர்களாக இருந்தார்கள் என்பதையும் அறிகிறோம். ஆனால், பெரும்பாலான ஹரிதாசர்கள் இத்தகைய வாத விவாதங்களில் பங்கேற்ற விவரங்கள் எங்கும் ஆவணப்படுத்தப் படவில்லை. ஸ்ரீவிஜயதாசர் மட்டும் இதற்கு விதிவிலக்கு. அவர்

மேல் இயற்றப்பட்ட கிருதிகளிலிருந்து அவர் வாதங்களில் சிறந்தவர் என்பதும் தெரிய வருகிறது.

சரணடைந்த ராமா சாஸ்திரி

ஸ்ரீதாசர் காசியில் இருந்தபோது ஒருமுறை ராமா சாஸ்திரி என்னும் ஒரு மாயாவாதி வித்வாம்சர், ஸ்ரீதாசரின் புகழைக் கேள்விப்பட்டு அவரைக் காண வந்தார். அவருடன் வாதம் செய்ய வேண்டும் என்று கூறினார். சில நாட்கள் பிரவசனம் கேட்டு, பிறகு வாதம் செய்யலாம் என்று ஸ்ரீதாசர் அவரிடம் கூறியிருந்தார். அந்த பிரவசனங்கள் மூலமாகவே, சாஸ்திரிக்கு, மத்வ மதம் யதார்த்தமானது என்னும் நிச்சய ஞானம் உண்டானது.

த்ரிவிக்ரம பண்டிதாசார்யர், ஸ்ரீமத்வருடன் வாதம் புரிய வேண்டும் என்று சொல்லி, அதற்கு முன்னோடியாக அவரின் கிரந்தங்களை படிக்கத் துவங்கி, அதிலிருந்தே அவருடைய பெருமையை புரிந்து கொண்டு, பின்னர் அவருடைய சிஷ்யர் ஆனார் என்பதை மத்வவிஜயம் தெளிவாக சொல்கிறது. ராமா சாஸ்திரியின் இந்த சம்பவம் அதையே நினைவுபடுத்துகிறது.

இனி வாதத்திற்கு அமர்வது வெறும் உபசாரத்திற்காகவே என்று ராமா சாஸ்திரிக்குத் தோன்றியது. பிறகு, அந்த வாதம் நடந்து, மத்வ மதத்தின் சிறப்பினை முழுமையாக அறிந்து, மன மாற்றம் அடைந்தார் சாஸ்திரி. தான் வைஷ்ணவ தீக்ஷையைப் பெற வேண்டும் என்னும் விருப்பத்தை ஸ்ரீதாசரிடம் கூறினார். ஸ்ரீதாசரும் அதற்கு ஒப்புக்கொண்டு அவரையும் தன் சிஷ்ய வர்க்கத்துடன் சேர்த்துக் கொண்டார்.

ராமா சாஸ்திரி போன்ற வித்வாம்சரை வைஷ்ணவராக மாற்றியதன் மூலம், தாம் வாதத்தில் சிறந்தவர் என்னும் விசேஷ அம்சத்தை ஸ்ரீதாசர் உலகிற்கு எடுத்துரைத்தார். ஸ்ரீதாசர் ஞானிகளாக இருக்கலாம். ஆனால் சாஸ்திர பண்டிதர் அல்ல என்று சிலர் கூறுவதற்கு, அவர் இந்த சம்பவத்தினால் தக்க பதில் அளித்தார்.

வைஷ்ணவனான ராமா சாஸ்திரி

அடுத்து சீகலபரவிக்கு திரும்ப வந்தபிறகு, அந்த ராமா சாஸ்திரியை அப்போது ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பீடாதிபதிகளாக இருந்த ஸ்ரீவாதீந்திர தீர்த்தரிடம் அனுப்பி, ஸ்வாமிகள் மூலமாக தப்தமுத்ரா தாரணை செய்வித்து, வைஷ்ணவ தீட்சையை செய்வித்தார். ஸ்வத: தாம் உத்தராதி மடத்து சிஷ்யராக இருந்தாலும், சாஸ்திரியை ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் பீடாதிபதியிடம் அனுப்பி தாசதீக்ஷை பெற்றுத் தந்ததன் மூலம், தாம் மடங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதை உலகிற்கு காட்டினார். இந்த சமயத்தில் ஸ்ரீவாதீந்திர தீர்த்தரைக் குறித்த 5 நுடிகளைக் கொண்ட 'கண்டெ கண்டெனோ கங்களலி ... அகண்டமஹிம வாதீந்திர குருகள' என்னும் கீர்த்தனையை இயற்றி அவரை போற்றினார்.

ஸ்ரீசத்யப்ரிய தீர்த்தர் மற்றும் ஸ்ரீவிஜயதாசர்

ஒரு முறை ஸ்ரீவிஜயதாசர், விஜயவாடா அருகில் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும்போது, அங்கு அந்த காலத்தில் ஸ்ரீஉத்தராதி மடத்தின் மடாதீசராக இருந்த, ஸ்ரீசத்யப்ரிய தீர்த்த ஸ்ரீபாதங்களவரின் தரிசனம் கிடைத்தது. முதலைகளின் தொல்லயால், யாரும் ஸ்னானம் செய்யாதிருந்த ஒரு இடத்தில் ஸ்னானம் செய்வதற்காக ஸ்ரீகளவர் தமது சிஷ்யர்களுடன் வந்தார். அவர்களுக்கு தண்ட ஸ்னானமும் செய்வித்தார். அந்த யாரையும் முதலைகள் எதுவுமே செய்யவில்லை. அன்றிலிருந்து அந்த இடத்தில், முதலைகளின் தொல்லை நிரந்தரமாக ஒழிந்தது. அத்தகைய ஸ்ரீகளவரின் தரிசனம், மிகவும் சிறப்பானது என்று ஸ்ரீவிஜயதாசர் நினைத்தார்.

அந்த சமயத்தில் ஒரு வாதி, வேதங்கள் அபௌருஷேயம் அல்ல என்று வாதிப்பதற்கு ஸ்ரீகளவரிடம் வந்திருந்தார். ஸ்ரீவிஜயதாசரின் அசாதாரண அறிவினை மக்களுக்கு புரிய வைப்பதற்காக, ஸ்ரீகளவர் அவரையே அந்த வாதியுடன் வாதம் செய்யுமாறு பணித்தார். குருகளின் ஆணையை சிரமேற்கொண்ட ஸ்ரீதாசர், அந்த

வாதியுடன் வாதம் செய்யத் துவங்கினார். ஸ்ரீமதாசார்யர், விஷ்ணு தத்வ நிர்ணயம் முதலான கிரந்தங்களில் நிரூபித்த ஆதாரங்களுக்கேற்ப ஸ்ரீதாசர், வாக்யார்த்தத்தை துவக்கினார். சரளமாக அவரிடமிருந்து வந்த வாதங்களைக் கண்டு அந்த வாதி திகைத்தார். கடைசியில், ராமா சாஸ்திரியைப் போல இவனும்கூட ஸ்ரீதாசரின் சிஷ்யனாகி, ஸ்ரீசத்யப்ரிய தீர்த்தரிடம் வைஷ்ணவ தீக்ஷையைப் பெற்று தன்யர் ஆனார்.

தாசரின் 'நின்ன பாதத நம்பி அன்யராஸ்ரயபேகெ, சென்ன குரு விஜயராயா' என்னும் கிருதியில் இந்த சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது.

புஸியு ஜகவெல்ல தெய்வவு தானெனுத
அஸம வேத பௌருஷ யெம்பந்த
பஸுமதாரியனெ கரதெ அவன
அஸுர பாவவனெல்ல முரிதெ நம்ம
பிஸஜாக்ஷ பரனெந்து பொரெதெ ஸ்வாமி ||
எஸெவ த்வாதஷ நாம பஞ்சயுத்ரியனிடிஸி
நஸுநகுதலவன பொரதெ பிடதெ

ஸ்ரீவிஜயதாசர், ஸ்ரீசத்யப்ரிய தீர்த்தரைக் குறித்து 'நோடி நோடி ஸத்யப்ரியர' என்னும் 7 நுடிகளின் கீர்த்தனையை இயற்றியிருக்கிறார்.

ஸ்ரீதாசருக்கு மகன் பிறந்தான்

ஸ்ரீதாசர் மற்றும் அரளம்ம அவர்களின் தாம்பத்தியம் நல்லபடி நடந்து கொண்டிருந்தது. நீண்ட காலமாக சஞ்சாரம், தத்வ பிரசாரம் முதலான விசேஷ காரியங்களால், ஸ்ரீதாசர் மற்றும் அவருடைய மனைவி இருவருக்கும், தங்களுக்கு சந்தானம் இல்லை என்னும் சிந்தனையே எழவில்லை. ஸ்ரீதாசர் தமது 45ம் வயதில் ஒரு மகனைப் பெற்றார். (இது ஆண்டு 1727. இது ஸ்ரீஜகன்னாததாசரின் பிறந்த ஆண்டு என்பதும் ஒரு விசேஷம்). பிறந்த குழந்தைக்கு தம் ஆராத்ய தெய்வமான ஸ்ரீனிவாஸனின் சிந்தனையினால் மற்றும்

திருப்பதி யாத்திரையின் குறிப்பாக, சேஷகிரி என்று நாமகரணம் செய்தார் ஸ்ரீதாசர். தக்க வயதில் செய்ய வேண்டிய அனைத்து சம்ஸ்காரங்களையும் சேஷகிரிக்கு செய்து வந்தார் ஸ்ரீதாசர். முன்னர், அவனுக்கு ஹயக்ரீவவிட்டல என்னும் அங்கிதத்தையும், தாச தீக்ஷையையும் ஸ்ரீதாசரே வழங்கினார்.

மோகனதாசர்

ஸ்ரீவிஜயதாசர் தமது ஹரிதாச தீக்ஷைக்கு காரணரான ஸ்ரீபுரந்தரதாசரின் ஆராதனையை ஆண்டுதோறும் தவறாமல், வெவ்வேறு இடங்களில் செய்து கொண்டிருந்தார். பல முறை, ஸ்ரீபுரந்தரதாசர் வைகுண்ட யாத்திரை செய்த ஹம்பி க்ஷேத்திரத்திலேயே அதனை செய்தார்.

அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு சம்பவம் நடந்தது. என்றும் போல, அருணோதய காலத்தில் சக்ர தீர்த்தத்திற்கு ஸ்னானத்திற்காக வந்தார் ஸ்ரீதாசர். அப்போது அங்கு அவருக்கு ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. கருணாளுவான ஸ்ரீதாசர், அதன் காரணத்தைக் கண்டுபிடிக்க, குரல் வந்த திசைக்கு சென்றார். அங்கு ஒரு பெண், ஒரு சிறிய குழந்தையை கையில் பிடித்தவாறு, அதனை ஆற்றில் வீசிவிட்டு, தானும் தற்கொலை செய்யும் நிலையில் இருந்தாள். அதனைக் கண்ட ஸ்ரீதாசர், உடனே அவளைத் தடுத்து, அதன் காரணத்தை விசாரித்தார். ஆனால் எதுவும் பதில் அளிக்காத அவள், அங்கிருந்து கிளம்பிவிட்டாள்.

அடுத்த நாள், தீர்த்த பிரசாத சமயத்தில் அந்தப் பெண் தனியாக அமர்ந்திருந்ததை ஸ்ரீதாசர் பார்த்தார். மறுபடி அவளிடம் சென்று, அவளின் நிலையைக் கேட்டார். ஆனெகொந்தியின் ஒரு செல்வந்தனின் வீட்டின் மருமகள் அவள். அவள் மூன்று மாத கர்ப்பிணியாக இருந்தபோதே, அவளின் கணவனான பீமண்ண நாயகன் இறந்திருந்தான். அவள் ஆண் குழந்தையைப் பெற்றால், அந்த குடும்பத்தின் சொத்தில் ஒரு பெரும்பங்கு கொடுக்க வேண்டியிருக்கும் என்ற கெட்ட எண்ணத்தில், அவளின்

கணவனின் உறவுக்காரர்கள், அவளை வீட்டை விட்டுத் துரத்தி விட்டனார்.

தாய் வீட்டிற்கு வந்து, ஆண் குழந்தையைப் பெற்ற அவளுக்கு இன்னொரு துக்கம் காத்திருந்தது. அந்த குழந்தையின் உடம்பில் தழும்புகள் நிறைந்து, விசித்திர நோய் பரவியதாக இருந்தது. மேலும், அவளின் தாயும் இறந்திருந்தாள். இவ்வாறு அவள் யாருமற்ற அனாதையானாள். இதனால் பிழைக்க வழி இல்லாமல், அவள் தற்கொலை செய்யும் முடிவுக்கு வந்திருந்தாள்.

இவற்றை அறிந்த ஸ்ரீதாசர், அவள் மேல் கருணை கொண்டார். அவளை காப்பாற்ற முடிவு கொண்டார். 'இந்தக் குழந்தை உனக்கு வேண்டாம் என்றால், எனக்கு கொடுக்கலாம் அல்லவா?' என்றார். உடனே அவள் அக்குழந்தையை ஸ்ரீதாசரிடம் கொடுத்து விட்டு, அவரை விழுந்து வணங்கினாள்.

குழந்தையை தூக்கிக் கொண்ட ஸ்ரீதாசர், சக்ர தீர்த்தத்திற்கு வந்து, தந்த்ரஸாரத்தின்படி தன்வந்திரி மந்திரத்தை ஜெபித்தவாறு, தன் கையால் அந்த குழந்தைக்கு ஸ்னானம் செய்வித்தார். 'இவன பாலிஸிதரெ எனகெ புண்ய, அவனியொளகெந்தெந்திகு நானே தன்ய' என்னும் தேவரநாமாவை இயற்றி ஸ்வாமியை வணங்கினார். குறைந்த காலத்திலேயே குழந்தை முழுமையாக நலம் பெற்று, கிரகணம் விட்ட நிலவினைப் போல ஒளிர்ந்தான். உத்தமர்கள் செய்யும் தேவதா பிரார்த்தனை எவ்வளவு சீக்கிரம் பலன்களைக் கொடுக்கும் என்பதற்கு இதுவே சாட்சி.

உன்னத ப்ரார்த்திதாசேஷ ஸம்ஸாதகம்... ப்ரீணயாமோ வாஸுதேவம் தேவதாமண்டலா கண்டமண்டனம். ஸ்ரீகிருஷ்ணனுக்கு சந்தனம் சமர்ப்பணம் செய்த, த்ரிலோக சுந்தரி எனப்பட்ட ஸ்ரீமத்பாகவதத்தின் த்ரிவைக்ரை என்பவளின் கதையைப் போல இது இருந்தது.இக்குழந்தைக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது என்று ஸ்ரீதாசருக்கு தியானத்தில் புலப்பட்டது. குழந்தையின் அழகிற்கு ஏற்றவாறு, அதற்கு மோகன என்றே நாமகரணம் செய்தார். அந்த தாய்க்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இத்தகைய அழகான குழந்தையை கொல்ல இருந்தேனே என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள். ஸ்ரீதாசர் தம் மனைவி அரளம்மாவுடன் சேர்ந்து நிச்சயித்து, அந்தப் பெண்ணை தன் சொந்த மகளாகவே நினைத்து தம்முடன் சேர்த்துக் கொண்டார். அவரின் மகன் சேஷகிரியுடன் சேர்ந்து குழந்தை மோகனனும், அண்ணன் தம்பியாகவே வளர்ந்தனர்.

ஸ்ரீவிஜயதாசரின் முக்கிய குருகளான ஸ்ரீபுரந்தரதாசர், ஒரு முறை காஞ்சியில் தங்கியிருந்தபோது அவருடைய மூத்த மகனுக்கு ஒரு அபாரமான நோய் வந்தது. அப்போது ஸ்ரீதாசரின் பிரார்த்தனைக்கு தரிசனம் அளித்த வரதராஜ, அந்த நோயினை பரிகரித்து காப்பாற்றினான். அதனை குறிப்பதாக ஸ்ரீபுரந்தரதாசர் அந்த மகனை, வரதப்பா என்றே அழைத்தார். ஸ்ரீவிஜயதாசரின் வாழ்க்கையிலும் அத்தகைய சம்பவமே வந்திருப்பது சிறப்பு. அதனால், ஸ்ரீதாசர், மோகனனையும் ‘வரத’ என்றே அழைத்து வந்தார் என்பதை அறிகிறோம்.

ஹரிதாசர்களின் சங்கத்தினால் விஷய ஆசைகள் பரிகாரம் ஆகி, ஸ்வரூபத்தின் வளர்ச்சியும் ஆகி, ஜீவன் உத்தார ஆகிறான் என்னும் தத்வத்திற்கு இது ஒரு தக்க உதாரணம் ஆகும்.

ஸ்ரீதாசரின் செல்ல வளர்ப்பு மகனாக வளர்ந்த மோகனனுக்கு ஸ்வத: தாசரே அவனுடைய 18 வயதில் ஸிருகுப்பெக்கு அருகில் இருக்கும் பலகுந்தி என்னும் கிராமத்தின் ஆத்திக பிராமணனின் மகளான ஸீதம்மா என்னும் கன்யையுடன் திருமணம் செய்து வைத்தார். மோகனதாச - ஸீதம்மா அவர்களின் தாம்பத்யம் விதிப்படி நடந்து வந்தது.

பாகண்ண தாசருக்கு அங்கிதம் வழங்குதல்

ராய்ச்சூருக்கு அருகில் உள்ள தேவதுர்க்கைக்கு அருகில் இருக்கும் மொஸரகல் என்னும் கிராமத்தில் முராரிபட்ட மற்றும் வெங்கம்மா தம்பதிகளுக்கு நான்கு ஆண் குழந்தைகள் இருந்தனர். அவர்கள் ஹரித்ஸ கோத்திரம். அவர்களில் பெரியவர் பாகண்ண.

குழந்தைகளின் சிறிய வயதிலேயே தந்தை முராரிராயர் இறைவனடி சேர்ந்தார். வெங்கம்மா ஊர் ஊராக சுற்றி, கத்வால் அருகில் உள்ள ஸங்காபுரத்தில் ஸ்ரீபிராணதேவரின் சன்னிதியில் வசித்து வந்தார். மூத்த மகனான பாகண்ணன், உபநயனம் ஆனபிறகு, கோடி காயத்ரி மந்திரம் ஜெபித்து, வாக்ஸித்தி, கவித்வம் ஆகியவற்றை பெற்றான். அடுத்து அவர்கள் உத்தனூருக்கு சென்று வசித்தனர். தன் அபூர்வ வாக்ஸித்தியினால் பாகண்ண அபாரமான கீர்த்திவந்தனாக ராஜ மரியாதைக்கும் பாத்திரர் ஆகியிருந்தார்.

அப்போது ஒரு முறை, ஆதவானியின் திவான் ருக்மண்ணனின் மகன் திம்மண்ண, பாகண்ணனை தன் வீட்டிற்கு வரவேற்றார். அப்போது ஸ்ரீவிஜயதாசர் ஆதவானிக்கு வந்து மங்கராய பிராணதேவரின் சன்னிதியில் தங்கியிருந்தார். பாகண்ணனைப் பற்றி பல விஷயங்களை கேட்டிருந்த ஸ்ரீவிஜயதாசர், தனது தியான திருஷ்டியில் சிந்தித்து, அவர் மூலமாக ஆத்யாத்ம உலகிற்கு பல விசேஷமான செயல்கள் நடைபெற வேண்டியிருக்கிறது என்பதை அறிந்தார்.

பாகண்ண அனைவருக்கும் எதிர்காலத்தை கணித்து தக்க பலன்களை சொல்லிக் கொண்டிருந்தார். அப்படியே அந்த மக்களின் வரிசையில் ஸ்ரீவிஜயதாசரும் சேர்ந்து கொண்டார். ஸ்ரீவிஜயதாசரின் அறிமுகம் பாகண்ணனுக்கு ஆகியிருக்காவிட்டாலும், அவரைப் பார்த்த உடனேயே அவரைப் பற்றி அபாரமான மரியாதையைப் பெற்றான். ஸ்ரீவிஜயதாசர் கூறினார். 'பாகண்ணா, இது என்ன? அனைவரின் எதிர்காலத்தை கணிக்கும் நீ, உன்னுடைய எதிர் காலத்தை அறியவில்லையே? கடை விரித்து அமர்ந்தது போதும்' என்றார்.

பீமா நதி தீரத்தில் அமர்ந்திருந்த அக்ஷோப்ய தீர்த்தர், குதிரையில் இருந்தபடியே தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த டோண்டோ ரகுநாதராயருக்கு 'கிம் பஷு: பூர்வதேஹே' என்று கூறிய வாக்கினை நினைவுபடுத்துகிறது. அடுத்து, அந்த டோண்டோ

ரகுநாதராயர் அவர்கள், டீகாராயர், ஸ்ரீஜயதீர்த்தர் ஆனது வரலாறு. இங்கு நடந்ததும் அப்படியே.

ஸ்ரீதாசரின் அமிர்தவாணி, பாகண்ணனுக்கு புதிய உலகினை காட்டியது. எதிர்காலத்தை கணிப்பதை அன்றுடன் நிறுத்திய பாகண்ண, ஸ்ரீஹரிவாயுகளின் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தான் ஹரிதாசன் ஆகவேண்டும் என்று நிச்சயித்து ஸ்ரீவிஜயதாசரிடம் வேண்டிக் கொண்டான். அதற்கு செவிசாய்த்த விஜயதாசர், ஒரு நாள், ஆதவானியின் ஸ்ரீவியாஸராஜ பிரதிஷ்டித மங்கராய பிராணதேவரின் சன்னிதானத்தில் பாகண்ணனுக்கு, 'கோபாலவிட்டல நின்ன பூஜெ மாடுவெனு' என்னும் கீர்த்தனையை இயற்றி 'கோபாலவிட்டல' என்னும் அங்கிதத்தை வழங்கி ஹரிதாச தீக்ஷையைக் கொடுத்தார். ஹனுமத் விரதத்தின் ஷுப நாளன்று (17-11-1746) ஹனுமந்தனின் சன்னிதியில் ஹனுமத் விரதத்தைப் போல நடந்த இந்த காரியம் 'ஹனுமந்தனே பகவந்தன ப்ரதமதாஸ' என்னும் ரிஷிவாணியை நினைவுக்குக் கொண்டு வருகிறது.

தாச சதுஷ்டயரில் மூன்றாமவர் எனப்படும் ஸ்ரீகோபாலதாசரை உலகிற்குக் கொடுத்த புகழ் ஸ்ரீவிஜயதாசருடையதாயிற்று. இவர் காலகிரமத்தில் ஸ்ரீவிஜயதாசரின் முதல் சிஷ்யர் ஆனார். புகழிலும் முதன்மையானவராக திகழ்ந்தார். இதற்கு முன்னரே, வெங்ககிருஷ்ண என்னும் அங்கிதத்தால் கிருதிகளை இயற்றியிருந்த அவர், இந்த அங்கிதம் கிடைத்த பின், கோபாலவிட்டல என்னும் அங்கிதத்திலேயே கிருதிகளை இயற்றத் துவங்கினார்.

இவரை பின்பற்றி இவருடைய மூன்று தம்பிகளும், அண்ணனிடமிருந்தே ஹரிதாச தீக்ஷையைப் பெற்று முறையே குருகோபாலவிட்டல, வரதகோபாலவிட்டல, தந்தெகோபாலவிட்டல என்னும் அங்கிதங்களைப் பெற்று ஹரிதாசர்களின் குழுவில் இணைந்தனர். ஆனாலும்கூட அனேக அற்புத கிருதிகளை இயற்றி அனைவரும் ப்ராத:ஸ்மரணீயர் ஆயினர். பாகண்ணனை தாசதீக்ஷை ஆத்யாத்மத்தின் ரிஷியாகவே

ஆக்கியது. இதில் ஸ்ரீவிஜயதாசரின் பாத்திரம் மிகவும் அற்புதமானது.

திவான் திம்மண்ணருக்கு அங்கிதம் வழங்குதல்

ஸ்ரீவிஜயதாசரின் முக்கிய கார்ய க்ஷேத்திரமாக ஆதவானி ஆயிற்று. ஒரு முறை ஆதவானியின் திவான் ருக்மண்ணரின் அழைப்பின் பேரில், ஸ்ரீதாசர் அவரின் வீட்டிற்குச் சென்றார். அப்போது ருக்மண்ண அவரின் இரண்டாம் மகன் சிக்க திம்மண்ண, ஸ்ரீதாசரின் ஆளுமையில் மிகவும் ஈர்க்கப்பட்டு, பயபக்தியுடன் அவரின் பாதங்களில் விழுந்து வணங்கினான். தாசரின் வாயிலிருந்து ‘என்ன பங்க நாமத திம்மண்ணா’ என்ற வாக்கு வந்தது. வியப்படைந்த ருக்மண்ண, தாஸரே, இது ஏன் திம்மண்ணா பங்க நாமத திம்மண்ணா ஆனான்?’ என்று கேட்டார்.

அதற்கு தாசர், இதன் ரகசியத்தை இன்னொரு முறை கூறுகிறேன் என்றார். அந்த திம்மண்ண, முற்பிறவியில் பேலூரில் வைகுண்ட தாசராக ஸ்ரீவைஷ்ணவ வழியைச் சேர்ந்த ஒரு ஆத்திகராக இருந்தார். தெய்வாதீனமாக, ஸ்ரீவாதிராஜர், ஸ்ரீபுரந்தரதாசர் முதலான ஞானிகளின் தொடர்பு, அவருக்கு அப்போது கிடைத்திருந்தது. அதன் பலனாக இப்போது வைஷ்ணவராக பிறந்திருந்தார். இந்த பின்னணியை தம் தியான திருஷ்டியினால் அறிந்திருந்த ஸ்ரீதாசர், அதனாலேயே அவரை அவ்வாறு அழைத்தார் என்பதை அறிகிறோம்.

அடுத்து திம்மண்ண ஆதவானிக்கு திவான் ஆகி. திம்மண்ணனய்யா என்று பெயர் பெற்றார். அந்த சமயத்தில் ஸ்ரீதாசரின் விசேஷ தொடர்பில் இருந்ததால், அவரிடமிருந்து அங்கிதம் வாங்குவதற்கு விரும்பினார். சில முறை ஸ்ரீதாசரிடம் இதைப் பற்றி கூறியும் இருந்தார். அதற்கான வேளை வரட்டும் என்று ஸ்ரீதாசரும் அங்கித உபதேசத்தை தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார். கடைசியில் ஒரு நாள், திம்மண்ண, ஸ்ரீதாசர் ஸ்னானம் செய்த தண்ணீர் விழும் இடத்தில் வந்து தானும் அதிலேயே ஸ்னானம் செய்யத்

துவங்கினார். இதைக் கண்ட ஸ்ரீதாசர், திம்மண்ணருக்கு நிஷ்டையின் பக்குவம் வந்திருப்பதை கவனித்து, அவருக்கு 'வேணுகோபாலவிட்டலரேய' என்னும் கீர்த்தனையை இயற்றி, வேணுகோபாலவிட்டலா என்னும் அங்கிதத்தை அருளி, ஹரிதாச தீக்ஷையை வழங்கினார். இவ்வாறு பங்க நாமத திம்மண்ணய்ய வேணுகோபாலதாசர் ஆனார்.

ஸ்ரீவேணுகோபாலதாசர், தம் குருகளின் ஆணைப்படி நூற்றுக்கணக்கான பத சுளாதிகளை இயற்றி, மக்களுக்கு தத்வபோதனையை செய்யத் துவங்கினார். திவானரின் இந்த சிஷ்யத்வ, சமூகத்தின் மேல் செய்த மாற்றம் அபாரமானது. பற்பல மக்கள் நல்வழியில் சென்று, வைஷ்ணவ தீக்ஷை அடைவதற்கு இது காரணம் ஆயிற்று. நூற்றுக்கணக்கான பேர் புதியதாக ஸ்ரீதாசரின் சிஷ்ய வர்க்கத்தில் சேர்வதற்கு காரணம் ஆயிற்று.

ஆதவானியின் திவானாக இருந்த வெங்கண்ண, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் சிஷ்யர் எனப்பட்டு அபாரமான சேவை செய்த சம்பவத்தை இது நினைவுக்குக் கொண்டு வருகிறது.

ஸ்ரீமோகனதாசருக்கு அங்கித பிரதானம்

ஸ்ரீபுரந்தரதாசரின் ஆராதனை மகோத்ஸவ சமயம். பல முறை நடந்ததைப் போல இப்போதும் ஹம்பியில் நடந்து கொண்டிருந்தது. அப்போது குரு பரம்பரையின் தரிசனத்திற்காக ஸ்ரீதாசர் அங்கு வந்தபோது, ஸ்ரீமோகனதாசருக்கு தாச தீட்சை வழங்க வேண்டுமென்று, அவருக்கு ஸ்ரீவியாசதீர்த்தரின் பிருந்தாவனத்திலிருந்து குறிப்பு வந்தது. அதன்படி அன்றே ஸ்ரீதாசர் நவயதிகளின் அந்த திவ்ய சன்னிதானத்தில், ஸ்ரீவியாசராயரின் குகையில் 'பாஹி மோஹனவிட்டல பரமகருணாஜலதி மஹதாதி தேவவந்த்ய' என்னும் தேவரநாமாவினால் ஸ்ரீஹரியை வணங்கி மோகனனுக்கு விதிப்படி மோகனவிட்டலா என்னும் அங்கிதத்துடன் தாச தீக்ஷையை வழங்கினார். அன்றிலிருந்து மோகன, மோகனதாசர் என்றே பெயர் பெற்றார். பின்னர் இவரே

கோலுஹாடு முதலான அனேக கிருதிகளை இயற்றிய பெருமையைப் பெற்றார்.

ஸ்ரீதாசரின் ஆசியின்படி, மோகனதாசர் கிருஹஸ்தாஸ்ரமியாகி, மனைவி, மக்கள், மாப்பிள்ளை, மருமகள், பேரன், பேத்திகள் என இவர்களுடன் வாழ்ந்து மகாகீர்த்தியைப் பெற்றார். ஸ்ரீதாசரின் வம்சம் வளர்ந்தது ஸ்ரீமோகனதாசரினாலேயே என்பது விசேஷம். ஸ்ரீதாசரின் பிரதான சிஷ்யரான ஸ்ரீகோபாலதாசர், ஸ்ரீமோகனதாசர் மற்றும் ஸ்ரீதிம்மண்ண தாசர் முறையே பக்தியலி பாகண்ண, யுக்தியலி மோஹன்ன, ஷக்தியலி திம்மண்ண என்று பெயர் பெற்றனர்.

ஸ்ரீகல்லூரு சுப்பண்ணாசார்யரின் சரணாகதி

சீகலபரவியிலிருந்து மான்வி ராயச்சூர் வழியில் கல்லூரு என்னும் ஒரு கிராமம். அந்த காலத்தின் பிற கிராமங்களைப் போல அதுவும் பண்டிதர்களின் கிராமமே. சுப்பண்ணாசார்யர் என்பவர் அந்த ஊரின் முக்கிய பண்டிதராக இருந்தார். குல்கர்ணி வம்சத்தவரான அவர், சுதாதி கிரந்தங்களில் அபார பாண்டித்யத்தை பெற்றிருந்தார். சந்ததி இல்லாதிருந்த அவருடைய பெற்றோர், நாகபிரதிஷ்டை செய்து இவர் பிறந்ததால் சுப்பண்ணா என்றே பெயர் பெற்றிருந்தார். சிறிய வயதிலேயே பல முறை நியாயஸுதா மங்களம் செய்த பெருமை இவருக்கு இருந்தது. ஸ்ரீவிஜயதாசரின் கீர்த்தியினை இவர் கேள்விப்பட்டிருந்தாலும், தாசர் முறையே சாஸ்திர அத்யயனம் செய்தவர் இல்லை என்னும் காரணத்தினால் அவரைப் பற்றி அவ்வளவாக கவனம் செலுத்தவில்லை.

ஒரு முறை அவருடைய சுதா மங்களத்தின் விழா நடந்து கொண்டிருந்தது. அந்த மங்கள காரியத்திற்காக சுற்றும் முற்றும் இருந்த கிராமங்களிலிருந்து வித்வாம்சர்கள் அங்கு வந்திருந்தனர். உடன், ஆத்திக மக்கள் பலரும் சேர்ந்திருந்தனர். மங்கள நாளன்று ராஜபக்ஷ்ய எனப்படும் மண்டிகெ சமர்ப்பணம் என்பது அந்த இடத்தின் மற்றும் அந்த காலத்தின் சிறப்பு வழக்கமாகும். மண்டிகெ பக்ஷ்யத்திற்கு சாட்சாத் பிரம்மதேவர் அபிமானி

தேவதை ஆவார். பா4வி பிரம்மரின் கிரந்தமான அனுவ்யாக்யான மற்றும் அதன் டீகையான நியாயஸுதாவின் மங்களத்திற்கு மண்டிகெ முக்கிய பக்ஷ்யம் என்று அன்று மக்களின் நம்பிக்கை.

ஆகவே, அன்றும் மண்டிகெ செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால், அந்த மண்டிகெ செய்யும் சமையல்காரர் ஏதோவொரு தவிர்க்க முடியாத காரணத்தால் வரமுடியவில்லை என்று தகவல் சொல்லி அனுப்பிவிட்டார். இதனால் ஆசார்யருக்கு மிக்க கவலை உண்டானது. அவரது அதிர்ஷ்டமாக, நேரடியாக அழைப்பு இல்லாவிடிலும், ஸ்ரீவிஜயதாசர் அங்கு வந்திருந்தார். ஆத்யாத்மிக நிகழ்ச்சிகளுக்கு இப்படி அழைப்பு இல்லையென்றாலும், செல்வது என்பது குணமே தவிர தோஷம் அல்ல என்பதே

சாஸ்திரங்களின் வாக்கு.

விஷயம் அறிந்த ஸ்ரீதாசர் தாமே மண்டிகெ பக்ஷ்யம் செய்வதற்கு தயாரானார். ஸ்ரீதாசரை, சமையல்காரர் என்றே நினைத்து, ஆசார்யர், தமது பிரச்னை தீர்ந்தது என்று உடனே அதற்கு சம்மதம் தெரிவித்தார். ஸ்ரீதாசர் தான் எதுவும் சமையல் செய்து பழக்கப்பட்டவர் அல்ல. ஆனால், இது ஒன்றும் சவாலான விஷயம் இல்லை என்று அவருக்கு தோன்றியது. தக்க நேரத்திற்கு முன்னரே, மண்டிகை காரியத்தை நிறைவேற்றி, தாசர் மங்கள அனுவாதத்தைக் கேட்பதற்கு விரைந்தார். ஆசார்யரின் அனுவாத நிகழ்ச்சி துவங்கியது.

ஸ்ரீதாசரின் சமையல்காரர் கோலத்தைப் பார்த்து அங்கிருந்த பலருக்கும் வியப்பு உண்டாயிற்று. அப்போதே அவரே ஸ்ரீவிஜயதாசர் என்னும் சிந்தனை ஆசார்யருக்கும் உண்டானது. ஆனால், பிராரப்தத்தினால் வந்த கர்வத்தினால், அவருக்கு தக்க மரியாதை கொடுக்காமல், அவமானம் செய்தார்.

ஆசார்யரின் கர்வத்தைப் போக்கி, அவரை மேம்படுத்த வேண்டும் என்று ஸ்ரீதாசருக்கு தோன்றியது. அனுவாதத்தின் ஒரு கட்டத்தில்,

அங்கு வந்த தண்ணீர் பரிமாறுபவனின் கைகளைப் பிடித்து, ஆசார்யரின் அனுவாதத்தை பற்றி மேலதிக விவரங்களைக் கூறுமாறு அவனிடம் கூறினார் ஸ்ரீதாசர். உடனே அந்த சாதாரண மனிதன், சுப்பண்ணாசார்யரைவிட அதிகமாக கற்றவனைப் போல, சரளமாக ஸுதா அனுவாதத்தை செய்யத் துவங்கினான். கல்லூர் சுப்பண்ணாசார்யரே அவனுடைய அனுவாதத்தைக் கேட்டு வியப்படைந்தார். ஆனால், ஸ்ரீதாசர் தன் கையை எடுத்த உடனேயே, அந்த மனிதன் தன் அனுவாதத்தை நிறுத்திவிட்டு, மறுபடி சாமான்யனாக ஆனான்.

ஆசார்யரின் கர்வம் அழிந்தது. தாசரின் அசாதாரண ஸித்தி தெரிந்து, வெறும் பாண்டித்யத்தைவிட அதிகமான பெருமை கொண்டவர் என்று புரிந்தது. ஸ்ரீதாசரை பார்ப்பதற்கே யோசித்த ஆசார்யர், அவரது பார்வை தம் மேல் விழுந்தது என்று நினைத்து மகிழ்ந்தார். உடனே எழுந்து ஸ்ரீதாசரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து, தன்னுடைய அவமானத்தை மன்னிக்குமாறு பலமுறை கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீதாசரோ - கருணாநிதி. சஜ்ஜனவத்ஸலர். 'ஆசார்யரே, உம் வித்யையைப் பற்றி நமக்கு மிக்க மரியாதை இருக்கிறது. அதற்கு மரியாதை என்னும் அலங்காரம் இருக்கட்டும் என்று மட்டுமே நாம் நினைத்தோம். அது இப்போது உங்களுக்கு வந்திருக்கிறது. நமக்கு இதில் மகிழ்ச்சியே' என்று கூறினார். இதைக் கேட்ட சுப்பண்ணாசார்யருக்கு அவர் மேல் மேலும் மரியாதை அதிகரித்தது. மங்கள அனுவாதம் மிகுந்த சிறப்புடன் முடிவடைந்தது.

இந்த சம்பவம் சாந்தோக்ய உபநிஷத்தில் வரும் ஷ்வேதகேதுவின் சம்பவத்தைப் போல இருக்கிறது. 12 ஆண்டு அத்யயனத்தின் பின்னணியில் கர்வம் கொண்டிருந்த ஷ்வேதகேது, தந்தை உத்தாலகர் கொடுத்த அதத்வமஸி உபதேசத்தினால், மரியாதை பெற்று வெளிச்சத்தைக் கண்ட கதை அங்கு இருக்கிறது. அதாவது, வித்யையுடன் இருக்கும் கர்வத்தை விலக்கினால் மட்டுமே, அந்த கல்விக்கு தக்க இடம் கிடைக்கிறது. மரியாதையை கொடுக்காத

கல்வி, பாம்புக்கு கொடுத்த பால் போல, விஷமாக சமூகத்திற்கு கஷ்டத்தைக் கொடுக்கிறது. சுப்பண்ணாசார்யர் பரம ஸாத்விக சேதனர். ஆகையாலேயே, அவருக்கு ஸ்ரீதாசரின் அருள் கிடைத்து, கர்வத்தின் களை எடுக்கப்பட்டு தத்வஞானத்தின் ஒளி பிறந்தது.

மங்களத்திற்குப் பிறகு, அங்கிருந்த புறப்பட்ட ஸ்ரீதாசரை மறுபடி வணங்கி, சுப்பண்ணாசார்யர் இவ்வாறு தம் கோரிக்கையை முன்வைத்தார். 'தயவு செய்து என்னையும் உங்களின் சிஷ்யர்களுடன் சேர்த்துக்கொண்டு தாசதீக்ஷையைக் கொடுத்து அருளவேண்டும்'. ஸ்ரீதாசர் பதில் அளித்தார். 'நீங்கள் தாசதீக்ஷையைக் கேட்பது மிகவும் மகிழ்ச்சியான விஷயம். ஆனால் அந்த தீக்ஷையைக் கொடுப்பது நான் அல்ல. நம்

சிஷ்யரான பங்க நாமத திம்மண்ணய்ய' என்றார்.

தாச தீக்ஷையில் ப்ர-சிஷ்யராகும் (சிஷ்யரின் சிஷ்யர்) யோகம் சுப்பண்ணாசார்யருக்கு இருந்தது. மகனைவிட பேரன் மேல் தந்தைக்கு மிகவும் அபிமானம் இருக்குமாம். ப்ர-சிஷ்யன் ஆவதும்கூட இதே போல பாக்கியமே என்னும் பாவனை அவரில் வந்தது. ஒரு சுப முகூர்த்தத்தில் ஸ்ரீதிம்மண்ணய்ய அவர்கள் அவருக்கு குருவர்ய ஸ்ரீவிஜயதாசரின் ஆணைப்படி, 'ஸ்ரீவியாஸ விட்டல ஆஸ்ரித ஜனகல்பதரு' என்னும் தேவரநாமத்துடன் 'வியாஸ விட்டல' என்னும் அங்கிதத்தை வழங்கினார். அன்றிலிருந்து பண்டித சுப்பண்ணாசார்யர், ஹரிதாச ஸ்ரீவியாஸவிட்டலர் ஆனார். விஜயகவசம் என்று அழைக்கப்படும், இன்று அனைவரும் தினம்தோறும் பாராயணம் செய்யக்கூடியதான 'ஸ்மரிஸி பதுகிரோ திவ்ய சரணக்கெரகிரோ துரித களெது பொரெவ விஜயகுருகளெம்பர' என்னும் சிறப்பு வாய்ந்த கிருதி ஸ்ரீவியாசவிட்டலருடைய கிருதியே ஆகும். அதைப் போல, 'நெரெனம்பித மத் ஹ்ருதய மண்டபதொளு பரிஷோபிஸுதிரு பாண்டுரங்க' என்னும் ஜாகரணையின் ஹரிவாண சேவையின் அங்கமாக இருக்கும் அபூர்வ கிருதியும் இவருடையதே ஆகும்.

ஸ்ரீவிஜயதாசரின் சிஷ்யர்கள்

ஸ்ரீவிஜயதாசர் தமது இந்த அற்புத சாதனையுடன் ஹரிதாச பரம்பரையை முன்னெடுத்துச் செல்வதிலும் மிக முக்கிய பாத்திரத்தை வகித்தார். பலருக்கு அங்கிதத்தை வழங்கி, ஹரிதாசராக மாற்றினார். அதற்கு முன்னர் ஸ்ரீபாதராஜர், ஸ்ரீவியாசராஜர் முதலான யதிவரேண்யர்களே தாசதீக்ஷை வழங்கியதாக தெரிகிறது. ஸ்ரீபுரந்தரதாசரின் மக்களும், ஹரிதாச தீக்ஷை வாங்கியது ஸ்ரீவியாசதீர்த்தரிடமிருந்தே. ஸ்ரீபிரசன்ன வெங்கடதாசருக்கு அங்கிதம் கிடைத்தது அவரது கனவில். ஸ்ரீவிஜயதாசருக்கு தாசதீக்ஷை கிடைத்தது தெய்வீக செயல் என்பதை பார்த்தோம். ஆக, ஒரு கிருஹஸ்த ஹரிதாசர், அங்கிதத்தைக் கொடுக்கும் சம்பிரதாயத்தை ஸ்ரீவிஜயதாசரே துவக்கியிருக்க வேண்டும்.

ஸ்ரீவிஜயதாசர் இப்படியாக பலருக்கு தாசதீக்ஷையை வழங்கினார். ஸ்ரீகோபாலதாசரின் கிருதியில் இருக்கும் குறிப்பினால் அது மிகவும் அதிகமான எண்ணிக்கை என்றே தெரிகிறது.

ப்ரத்யக்ஷவாகி ஹத்திப்பத்து ஜனரிகெ தத்வோபதேஷ மாடி விஜயராயா
ஹ்ருத்கமலதி ஹரிய துதிஸி ஸத்கதிகபயவித்தெ ஸ்ரீவிஜயராயா|

இங்கு ஹத்திப்பத்து என்றால் 10+20=30 என்று சிலர் சொல்கின்றனர். ஆனால், ஹத்திப்பத்து என்று பொதுவாக சொன்னால் ‘அதிகம்’ என்றே அர்த்தம். அதே ஹத்திப்பத்து என்பதை 10*20=200 என்றும்கூட சொல்லாம் அல்லவா? ஸ்ரீதாசரின் பெருமையை அறிந்தவர்களுக்கு இது சாதாரணமான விஷயமே ஆகும். ஆனாலும், ஹத்திப்பத்து என்பதற்கு அதிக மக்களுக்கு என்னும் அர்த்தமே பொருந்துகிறது. ஆகையால், 200ஐ விட அதிகம் என்று சொன்னாலும், அதில் தவறில்லை. ஸ்ரீகோபாலதாசரின் இன்னொரு வாக்கியத்தையும் இங்கு பார்க்கவேண்டும்.

ஆருமூரெரடொந்து ஜனரு இவரிந்த உ
த்தாரகதியனு சிந்திஸி - மூரு ஜன்மகளல்லி

பிடதெ மூலவு கெடதெ - ஸேரி மத்திவர பளிய
ஸ்ரீரமண நின்ன விசாரவனு மாடுத
ஸாரிஸாரிவர வர படெது - காரணரு நமகி
வரு கர்ம மூலவ கெடிஸி
நாராயணனெ நின்ன பரனெந்து தோரித

இங்கு 'ஆருமூரெரடொந்து' என்றால் 21 என்று அர்த்தம். இது, அவரே முன்னர் கூறிய ஹத்திப்பத்து என்பதற்கு வேறாக இருப்பதால், 'அதிகம்' என்றே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று புரிகிறது.

ஸ்ரீவிஜயதாசரின் சமகாலத்தைய பீடாதிபதிகள்

ஸ்ரீதாசர், அனைத்து மாத்வ மடாதிபதிகளுடன் மிக நல்ல தொடர்பில் இருந்தார். குருபீடத்திற்கு தக்க கௌரவத்தை அளித்து, அந்த பீடாதீஷரின் விசேஷ அருளுக்கு

பாத்திரராக இருந்தார். தம் வாழ்க்கையில் அவருக்கு சமகாலத்தவராக இருந்த யதிகள் விவரம் இவ்வாறு:

ஸ்ரீஉத்தராதி மடத்தின்
ஸ்ரீஸத்யாபினவ தீர்த்தர் (1673-1706),
ஸ்ரீசத்யபூர்ண தீர்த்தர் (1706-1726)
ஸ்ரீசத்யவிஜய தீர்த்தர் (1726-1737)
ஸ்ரீசத்யப்ரிய தீர்த்தர் (1737-1744)
ஸ்ரீசத்யபோத தீர்த்தர் (1744-1783)

ஸ்ரீவியாசராஜ மடத்தின்
ஸ்ரீலட்சுமி நாராயண தீர்த்தர் (1690-1700)
ஸ்ரீரகுநாத தீர்த்தர் (ஸ்ரீசேஷசந்திரிகாசார்யர்) (1700-1755)
ஸ்ரீஜகன்னாத தீர்த்தர் (ஸ்ரீபாஷ்யதீபிகாசார்யர்) (1755-1770)

ஸ்ரீராகவேந்திர மடத்தின்
ஸ்ரீசூரீந்திர தீர்த்தர் (1688-1692)
ஸ்ரீசுமதீந்திர தீர்த்தர் (1692-1725)
ஸ்ரீஸ்ரீஉபேந்திர தீர்த்தர் (1725-1728)

ஸ்ரீவாதீந்திர தீர்த்தர் (1728-1750)
ஸ்ரீவசுதேந்திர தீர்த்தர் (1750-1761)
ஆகியோர்.

இவர்களில் ஸ்ரீசத்யாபினவ தீர்த்தர், ஸ்ரீலட்சுமி நாராயண தீர்த்தர், ஸ்ரீயோகீந்திர தீர்த்தர் ஆகியோர் மூத்த சமகாலத்தவர்கள் என்றால், ஸ்ரீசத்யபோத தீர்த்தர், ஸ்ரீபாஷ்ய தீபிகாசார்யர், ஸ்ரீவசுதேந்திர தீர்த்தர் ஆகியோர் பின்னாளின் சமகாலத்தவர்கள்.

ஸ்ரீவிஜயதாசரின் காலத்து முக்கிய திவான்கள்

ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் சிஷ்யவரேண்யரான வெங்கண்ணன் மூலமாக, ஸித்தி மஸூத் கான் என்னும் ஆதவானியின் நபாப், ஸ்வாமிகளைப் பற்றி விசேஷ மரியாதைகளைக் கொண்டிருந்தான். வெங்கண்ணரின் பிறகான காலத்தில், ருக்மண்ண மற்றும் பங்க நாமத திம்மண்ண அவர்கள் ஆதவானியின் திவான் பதவியை வகித்தனர். ருக்மண்ண ஸ்ரீவிஜயதாசருக்கு சேவை செய்பவர் என்றால், திம்மண்ணய்ய ஸ்ரீதாசரிடம் தாசதீக்ஷை பெற்று ‘வேணுகோபாலவிட்டல’ என்னும் அங்கிதத்தால் ஹரிதாசர் ஆன பாக்யசாலி எனப்பட்டார்.

ஸ்ரீவிஜயதாசரின் மகிமைகள்

மகாமகிமரும் தபஸ்விகளும் அபரோக்ஷ ஞானிகளுமான ஸ்ரீவிஜயதாசர் அனேக மகிமைகளை நிகழ்த்தியிருக்கிறார். அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

1. திருப்பதியில் நடந்த விசேஷ மகிமை

பிரம்மோத்ஸவ காலத்தில் திருப்பதியில் தங்கியிருந்து, தினமும் அன்ன ஸந்தர்ப்பணை மற்றும் ஞானஸத்ர நடத்துவது ஸ்ரீதாசருடைய முக்கிய காரியமாக இருந்தது. இந்த ஞானகாரியத்தில் பங்கேற்கும் மக்களுக்கு அன்ன பானத்தின் சிந்தனையால் கவனம் சிதறி விடக்கூடாது என்பது அவருடைய நோக்கமாக இருந்தது. பவித்ரமான ஸ்ரீஹரிவாயுகளின் பிரஸாத ஸ்வீகாரத்தினால் அந்த:கரண ஷுத்தி அடைந்து, ஞான

காரியத்திற்கு விசேஷமான தகுதி வரட்டும் என்னும் சிந்தனையிலே, உத்ஸவங்களில் இத்தகைய போஜன காரியங்களை ஸ்ரீதாசர் நடத்தி வந்தார்.

அப்போது ஒரு முறை நடந்த சம்பவம் இது. ஏகாந்த இடம் ஒன்றில் தியானத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீதாசர், ரதோத்ஸவத்திற்கு சரியான நேரத்தில் வரமுடியாமல் போனது. யாருக்கும் காத்திராத தேவஸ்தான அதிகாரிகள், தக்க நேரத்தில் ரதோத்ஸ்வத்தை துவக்க முயன்றனர். ஒவ்வொரு முறையும் சரியாக நகர்ந்து கொண்டிருந்த ரதம், அன்று நகர்த்தவே முடியாததாக ஆயிற்று. அத்தகைய சமயத்தில் யானைகளால் ரதத்தை தள்ளுவது ஆலயத்தின் பத்ததியாக இருந்தது. அதையும் செய்து பார்த்தனர். ஆனால் ரதம் சிறிதும்கூட அசையவேயில்லை. இதற்கான காரணத்தை அவர்கள் ஆராயத் தொடங்கினர்.

அங்கு இருந்த ஒருவரில் வந்த ஸ்ரீனிவாசன் 'என் பக்தன் ஒருவன், என்னை தன் இதயத்தில் கட்டிப் போட்டுள்ளான். அவன் இங்கு வராதவரை, ரதம் முன்னால் நகராது' என்றார். இதைக் கேட்டு நாற்புறமும் தேடித்திரிந்த தேவஸ்தான ஆட்கள், அங்கு தனிமையில் அமர்ந்திருந்த ஸ்ரீதாசரை பார்த்தனர். ஸ்ரீனிவாசன் தெரிவித்த பக்தர் இவரே என்று அறிந்த அவர்கள், அவரை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி ஸ்ரீனிவாசனின் செய்தியை சொல்லி, ரதோத்ஸவத்திற்கு வருமாறு அவரிடம் வேண்டினர். ஸ்ரீஹரியின் விசேஷ காருண்யத்தைக் கண்டு ஆனந்தக்கண்ணீர் விட்ட ஸ்ரீதாசர், உடனே ரதத்தின் அருகே ஓடோடி வந்து வணங்கி இவ்வாறு பாடத் துவங்கினார்.

ஸாகி பாரய்யா நீனு, கோவிந்த வெங்கட ||ப

ஸாகி பாரய்யா பவரோகத வைத்யனெ
பாகி நினகெ சென்னாகி துதிபெ நிந்து
பாகீரதிபித பாகவதர ஸம்
யோக ரங்க உரககிரி வெங்கட ||அப

ரதத மத்யதொளிப்பனெ ரதாஞ்டஜபாஹனனெ
ரதாங்க பாணியெ தஷரத ந்ருபதிபால

பார்த்தகெ ஒலிதவன ரதவ நடெஸி அதிரத
மஹரதர விரதர மாடி கெலிஸிதெ
ப்ரதம தெய்வவெ மன்மதபித தைத்யர
மதன பக்தர மனோரதனெ தாரா
பதவர்ணனெ தவ கதாஸ்ரவணதலி ஸு
பதவனு தோரிஸு ப்ரதமாங்கனொடெய ||1

நில்லதெ பருவுது புல்லலோசன ஸிரி
வல்லப ஸர்வரிகு பல்லிதனெ அப்ரதி
மல்ல முரவிரோதி மெல்லமெல்லனெ பாத
பல்லவ தோருத எல்லா காலதி நம்ம
நெல்லருத்தரிபுது எல்லி நினகெ ஸரி
யில்லவோ நோடலு ஸல்லுவுதோ பிரு
தல்லிகல்லிகெ குணபல்லவராரின்னு
நெல்லகட்டு கோனெயல்லிப்ப விஷ்வ ||2

பொம்ம மொதலு மனுஜோத்தமரு கடெயாகி
நிம்ம தாஸரு அவர ஸம்பந்திகள பாத
நெம்மிகொண்டிப்பந்த தம்மனு நா ஸர்வோத்து
மமானேக குணமஹிமெ விபூஷித
ரம்மெதரணிதேவி இம்மஹிஷேர கூடி
ஸுமுகனாகுத ஸும்மனெ பா பா
ஹிம்மெட்டிதெ ஸிரி விஜயவிட்டல அனு
பம்மசரித பரபொம்ம திருமலேஷ ||3

அதுவரை நகராமல் நின்றிருந்த ரதம், உடனே முன்னர் நகரத் துவங்கியது. மக்களுக்கு ஸ்ரீதாசரின் ஆளுமை புரிந்தது. அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் பிரம்மோத்ஸவ சமயத்தில் ஸ்ரீதாசருக்கு விசேஷ அழைப்பு, தேவஸ்தானத்தின் கௌரவங்கள் கிடைத்தன.

2. ஸ்ரீனிவாஸனைக் குறித்த நிந்தா ஸ்துதி

இன்னொரு பிரம்மோத்ஸவ சந்தர்ப்பம். வழக்கத்தைவிட திருப்பதியில் அபாரமான கூட்டம். அத்தகைய சமயத்தில்,

கூட்டத்தை சமாளிக்க, கிருஷ்ணாஜினத்தால் செய்யப்பட்ட சிறு குச்சியால் மக்களை தட்டி தள்ளுவது வழக்கமாக இருந்தது. அத்தகைய கூட்டத்தில் சாமான்ய மனிதர்களைப் போலவே இருந்த ஸ்ரீதாசருக்கும் அத்தகைய தட்டு ஒன்று விழுந்தது. அது கொஞ்சம் பலமாகவே விழுந்தது. ஸ்ரீதாசருக்கு அதனால் சிறிது தொந்தரவும் ஆயிற்று. உடனே மிகவும் அபூர்வமான, ஸ்ரீஹரியின் நிந்தாஸ்துதி ரூபமான கீர்த்தனை ஒன்றினை இயற்றி சமர்ப்பித்தார்.

நின்ன தருஷனகெ பந்தவனல்லவோ
புண்யவந்தர திவ்யசரண நோடலி பந்தெ ||ப

எல்லெல்லி நின்ன வ்யாப்ததனவிரலிக்கெ
இல்லிகெ பருவ காரணவாவுதோ
ஸொல்லிகெ கம்பதலி தோரித மஹாமஹிம
அல்லி இல்லேனய்ய பல்ல பஜகரிகெ ||1

கரெதாகலெ ஓடி பந்தொதகுவ ஸ்வாமி
மரளி காவுத எணிஸீ பரல்யாதகோ
நெரெ நம்பிதவரிகெ ஆவல்லாதரேனு
அரிதவர மனதொளகெ நிந்தாடுவ சந்தவ ||2

கடினவோ நின்ன பகுதரன நோடுவ லாப
ஸடியல்லா வேதகள ஸாருதிவெகோ
வடு மொதலாத வைஷ்ணவாக்ரேஸரங்க்ரி
த்ருடியாதரூ எனகெ ஸோகலு கதிகெ தாரி ||3

த்யானக்கெ ஸிலுகுவனெ நின்ன காணலிபஹுது
ஞானிகளு எந்து பருவரோ அல்லிகெ
அனந்த ஜனுமதலி ஜப தப ஹோம வ்ரத
ஏனேனு மாடிதரு இஷ்டு ஜன கொடுவதே ||4

நீனித்த ஸ்தானதலி ஸகல புண்யக்ஷேத்ர
நீனித்த ஸ்தானதலி ஸர்வதீர்த்த
நீனித்த ஸ்தானதலி ஸமஸ்த தாத்விகரு
நானித்த பருவுது நினகெ திளியதெ ஸ்வாமி ||5

இதனெ லாலிஸு ஜீயா நின்னதொந்தெ மூர்த்தி
நிதருஷனவல்லதெ மிகிலாவுதோ
பதேபதெகெ மத்வமத ஹொந்தித ஸுஜனர
ஹ்ருதயதொளகானந்தபரி நின்ன ரூபகளு ||6

பளிரெ திருமலராய நின்ன கருணாரஸகெ
நெலெகாணெ நெலெகாணெ நெரெஹொரெயொளு
ஒலிது பகுதரிகாகி மதுவெ ஹவணிஸிகொண்டெ
ஸுலப தேவரதேவ விஜயவிட்டல வெங்கட ||7

ஸ்ரீனிவாசனின் தரிசனம் விசேஷ செயல் ஒன்றும் அல்ல. சர்வத்ர வியாப்தனான அவனின் தரிசனத்திற்கு திருப்பதிக்கே செல்ல வேண்டிய காரணம் என்ன இருக்கிறது? ஆனாலும், அத்தகைய க்ஷேத்திரத்திற்கு தம்மைப் போன்ற ஞானிகள் வருவது, ஸ்வாமியின் தரிசனத்திற்கு என வந்திருக்கும் மகாபுண்யவந்தர்களின் திவ்ய சரண தரிசனத்திற்காகவே' என்பது இந்தப் பாடலின் கருத்து.

பாடல் முடிந்தது. அர்ச்சகர் ஒருவர் மூலமாக, ஸ்ரீனிவாசன், அவரை விசேஷ மரியாதையுடன் தன்னிடம் அழைத்துக் கொண்டான். ஸ்வாமியின் எதிரில் வெகு நேரம் நின்று அற்புத தரிசனம் செய்யும் பாக்கியம் ஸ்ரீதாசருக்குக் கிடைத்தது. ஸ்ரீஹரியின் அபார காருண்யத்தைக் கண்ட ஸ்ரீதாசர், தாம் செய்த நிந்தாஸ்துதிக்கு வருத்தப்பட்டு, வகைவகையாக ஸ்ரீனிவாசனை துதித்தார். நிந்தாஸ்துதியிலேயே மங்கள க்ருதி ஒன்றினை இயற்றினார்.

ஜயமங்களம் நித்ய ஷுப மங்களம் ||ப

தொளஸிதக்கிய திம்ப திலுபு தளகெயலும்ப
கொளகதலி ஹணகளனு அளெதுகொம்ப
இல்ல காஸு எந்து ஸுள்ளு மாதாடிதரெ
எல்லவனு கஸுகொம்ப கள்ள தொரெகெ ||1

தன்ன நோடேனெந்து முன்னோருகாவுத பரெ
தன்ன குடிய பொக்க ஜனரிகெல்ல
ஹொன்னு ஹணகள கொண்டு தன்ன தருஷன கொடதெ

பென்னொடெய ஹோயிஸுவ அன்யாயகாரிகெ ||2

கிட்ட ஹாரவனாகி ஒட்டி தானவ பேடி
துட்டு காஸுகளிகெ கையனீடி
அட்டபித்த ஜனர விட்டோரகள களெது
தொட்டவர மாள்பஸிரி விஜயவிட்டலகெ ||3

இதில் இருக்கும் நிந்தா ஸ்துதியில் ஸ்ரீஹரியின் ஸ்தோத்திரத்துடன் விசேஷ ரீதியிலான மங்களரூப ஸ்தவனமும் வந்திருப்பது விசேஷமாக இருக்கிறது. அதனுடன் ‘நின்ன நோடலி பந்தெ நித்யத்ருப்த, அன்யரிந்தலி எனகெ ஏனு ப்ரயோஜனவோ’ என்று 7 நுடிகளில் ஆன இன்னொரு கிருதியையும்கூட இயற்றி தன்யரானார்.

3. திருப்பதியில் பகவத் தரிசனம்

ஒரு முறை ஸ்ரீதாசர் திருப்பதிக்கு வந்திருந்தபோது, அவருக்கு ஒரு விசித்திரமான ஆசை வந்தது. ஸ்ரீனிவாசனின் தேக ஸ்பர்சத்தின் யோகம் தமக்கு கிடைக்க வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாக இருந்தது. கனவில் அவருக்கு தரிசனம் அளித்த ஸ்ரீனிவாசன், அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதாக நம்பிக்கை அளித்தான். மூன்றாம் நாள் கனவில், ஸ்ரீனிவாசன் ஒரு குழந்தை ரூபமாக வந்து, அவர் தன்னை ஆலிங்கனம் செய்துகொள்ளும் யோகத்தை அளித்தான். பாரய்யா திம்மய்யா தோரய்யா முகவன்னு - என்னும் அவருடைய கிருதி அந்த சமயத்தில் இயற்றப்பட்டதாகும்.

4. திருப்பதியில் 43 பதங்களை இயற்றினார்.

ஒரு முறை ஸ்ரீபுரந்தரதாசரின் ஆராதனையை திருப்பதியில் செய்வதற்காக வந்தார் ஸ்ரீதாசர். அந்த ஆராதனைக்கு முந்தைய நாளின் இரவில் கனவில் வந்த ஸ்ரீனிவாஸன், 43 பதங்களை இயற்றுமாறு அவருக்கு ஆணையிட்டான். இந்த விவரம் அவருடைய ‘எந்தொடனாடுவெ எந்தர்த்திபடெவெ’ என்னும் 9 நுடிகளைக் கொண்ட கிருதியில் சொல்லப்பட்டுள்ளது.

நால்வத்து மூருபதங்களு மாடெந்து
ஹேளித ஹேமாத்ரி ஷிகராகாரன கூட ||
வாரஸோம சதுர்தஷி க்ருஷ்ணபுஷ்யதி
ஈரீதியலி கண்ட இந்திரேஷன கூட ||
ரௌத்ரி ஸம்வத்ஸரத அர்த்தராத்ரியல்லி
பத்ரமூருதியாத பவஹரன கூட ||
குருபுரந்தரன உபதேஷ பலதிந்த
ஸிரிவிஜயவிட்டலன சரண தக்கயிஸி ||

இந்த நாள் 7-1-1741க்கு சரியாக பொருந்துகிறது. அப்போது ஸ்ரீதாசருக்கு 59 வயது. அன்றே ஸ்ரீதாசர் அந்த 43 பதங்களையும் இயற்றி ஸ்ரீனிவாசனுக்கு அர்ப்பித்தார்.

5. ஸ்ரீகோபாலதாசருக்கு கொடுத்த ரக்ஷா கவசம்

ஒரு முறை ஸ்ரீகோபாலதாசர் உடுப்பி ஸ்ரீகிருஷ்ணனை தரிசனம் செய்ய விரும்பி உடுப்பி யாத்திரைக்கு குருகளின் அனுமதியை வேண்டினார். ஆனால், அனுமதி அளிக்க வேண்டிய குருகள், சிறிது யோசித்தார். மண்டகத்தெய பீம என்னும் ஒரு வழிப்பறி கொள்ளைக்காரன், உடுப்பியின் வழியில் காட்டின் வழியாக செல்பவர்களை துன்புறுத்திக் கொண்டிருந்ததை, ஸ்ரீதாசர் அறிந்திருந்தார். பெயருக்கு பிராமணன் ஆனாலும், கொடும் செயல்களையே அவன் செய்து வந்தான். பகல் வேளையில் அனைவருக்கும் மிக்க மரியாதை அளித்து, பரிசுகளை வழங்கி அனுப்பிவிட்டு, பின்னாலேயே தன் ஆட்களைக் கொண்டு அவர்களை மிரட்டி மறுபடி அந்த பரிசுகளை பறித்துக் கொண்டு வருவது அவனது வழக்கமாக இருந்தது.

ஒரு முறை ஸ்ரீவிஜயதாசரையும்கூட அவ்வாறே செய்ய முயற்சிக்க, அவருடைய தவசக்தியின் முன் அவனுடைய முயற்சி தோல்வி அடைந்தது. அவனின் தொல்லை கோபாலதாசருக்கு வரக்கூடாது என்பதற்காக, ஸ்ரீதாசர் ஒரு உகாபோகத்தை இயற்றி, அதனை படித்துக் கொண்டே போகுமாறு கோபாலதாசருக்கு கூறினார்.

ஒந்து கையலி கட்க ஒந்து கையல்லி ஹலகெ
அந்தவாகி பிடிதுகொண்டு திவாராத்ரியலி
ஒந்து பதியல்லி நித்ய பாராஸனாகி
ஹிந்து முந்துபத்ரவாகதந்தெ
இந்திரேரமண காயுத்தலிகெ எனகாவ
பந்தனகளில்ல தன்ய தன்ய
கந்தர்ப்பனய்ய ஸிரி விஜயவிட்டலரேய
எந்தெந்திகாபத்து பரலீஸனோ ||

ஸ்ரீகோபாலதாசரின் பயணம் துவங்கியது. அந்த உகாபோகத்தினால் பிரார்த்திதனான ஸ்ரீஹரி, ஒரு கையில் வாள் ஒரு கையில் கேடயம் பிடித்து, இரவும் பகலுமாக ஸ்ரீகோபாலதாசரை காத்தவாறு வந்தான். அதனால், மண்டகத்தெ பீமன், அவரை எதுவும் செய்ய முடியாமல், அவரிடமே சரணடைந்தான். அடுத்து திருந்தி, நல்வழியிலும் நடந்தான்.

இந்த சம்பவம், ஸ்ரீவேதஷ தீர்த்தர் உபதேசித்த - அக்ரதோ நாரஸிம்ஹஷ்ச ப்ருஷ்டதோ கோபிநந்தன | உபயோ: பார்ஷ்வயோராஸ்தாம் ஸஷரௌ ராமலக்ஷ்மணௌ || - என்னும் ஸ்லோகத்தை படித்ததால், திருடர்களின் ஆக்ரமணத்திலிருந்து தப்பித்த அவரது தம்பியான ஸ்ரீயதுபத்யாசார்யரின் கதையை நினைவுபடுத்துகிறது.

ஸ்ரீவிஜயதாசரின் கருணை, தவசக்தியினால் ஸ்ரீகோபாலதாசரின் உடுப்பி யாத்திரை எவ்வித தடையுமின்றி நடந்து, ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனம் கிடைத்தது. இந்த சம்பவத்தால், ஸ்ரீகோபாலதாசருக்கு தன் குருகளின் மேல் உள்ள பக்தி மேலும் அதிகரித்தது. இன்றைக்கும் அனேக ஆத்திகர்கள் வீட்டிலிருந்து கிளம்பும்போது ‘அக்ரதோ நாரஸிம்ஹஸ்ச’ என்னும் ஸ்லோகத்தையும், ஸ்ரீவிஜயதாசரின் இந்த உகாபோகத்தையும் சொல்லிவிட்டு பின் கிளம்பிச் செல்லும் வழக்கம் இருக்கிறது.

6. அரளம்மா அவர்களின் மலேரியா நோயினை பரிகரித்தல்

ஒரு முறை ஸ்ரீதாசர் கங்கா ஸ்னானத்திற்கு செல்வதற்காக குடும்பத்தினருடன் தயார் ஆகிக் கொண்டிருந்தார். அப்போது அவருடைய மனைவி அரளம்மா திடீரென்று மலேரியா நோய் வந்து துன்பப்பட்டார். ஒரு நாள்கூட விடாமல் நைவேத்யாதி பூஜா கைங்கர்யங்களை நடத்தி வந்த அவருக்கு இது மிகப்பெரிய தொந்தரவாக இருந்தது.

ஆண்களுக்கு தேவபூஜை விதிக்கப்பட்டிருப்பதைப் போல, பெண்களுக்கு ஸ்வாமியின் நைவேத்தியத்திற்கு சமையல் செய்வது விதிக்கப்பட்டிருக்கிறது. சாட்சாத் திரௌபதிதேவியே தினமும், ஸ்ரீஹரியின் நைவேத்தியத்திற்கு சமையல் தயார் செய்து, ஸ்ரீபீமசேன தேவரின் பூஜா காரியத்தில் சேவை செய்து வந்த விவரம் மத்வவிஜயாதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தகைய தர்ம தேவதையாக இருக்கும் அரளம்மாவிற்கு வந்திருக்கும் நோயினால், தர்மம் தப்பிப்போகும் பயம் வந்தது. அதனுடன், கங்கா ஸ்னானம் கூட தப்பும் பயம் சேர்ந்தது. இத்தகைய தடைகள் வராமலிருக்க அருளுமாறு ஸ்ரீதாசரிடம் அரளம்மா வேண்டிக் கொண்டார். உடனே ஸ்ரீதாசர் ‘தயமாடோ என்னொடெயா தாஸிகொலிது’ என்னும் துவங்கும் சுளாதியை இயற்றி ஸ்ரீஹரியை பிரார்த்திக் கொண்டார்.

உடனடியாக அவருக்கு வந்திருந்த ஜுரம் பரிகாரமாகி அவர் முன்னர் இருந்ததைப் போலவே பூஜை காரியகிரமத்தில் ஈடுபட்டார். சங்கல்பம் செய்ததைப் போலவே, கங்கா ஸ்னானமும் நடந்தது. ஸ்வதர்ம ஆசரணைக்கு தடை வந்தபோது, இப்படியாக பிரார்த்தனை செய்வது, என்றும் அதர்மம் ஆகாது என்னும் தத்வத்தை ஸ்ரீதாசர் இவ்வாறாக தன் கிருதியின் மூலம் தெரிவித்தார். இங்கு நாம் பார்க்க வேண்டியது, ஸ்ரீதாசருக்கு தன் மனைவி மேல் இருந்த பாசம் மட்டும் அல்ல. ஒரு விஷ்ணு பக்த சேதனரின் மேல் அவருடைய அபாரமான காருண்யத்தை மற்றும் அற்புத தெய்வ பக்தியையும் பார்க்க வேண்டும்.

7. துர்மரணத்தை பரிகரித்த தருணங்கள்

துர்மரணங்களை பரிகரித்த தருணங்கள் என ராமாயணம், பாகவதம் ஆகியவற்றில் பல உதாரணங்களைக் காணலாம். இவை அனைத்தும் ஸ்ரீஹரிவாயுகளின் அருளாலேயே நடந்திருக்கின்றன என்பதை பார்க்கிறோம். மாத்வ பரம்பரை, ஹம்ஸ நாமக பகவந்தனிடமிருந்தே வந்திருக்கும் பரம்பரை ஆகும். ஸ்ரீமன் மத்வாசார்யரின் த்வாதச ஸ்தோத்திரம், விஷ-ஹர மந்திர துல்ய ஸ்தோத்திரம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், இந்த பரம்பரையில் வந்த ஸ்ரீவியாஸராஜர், ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தர், ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள், ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் முதலான மகானுபாவர்கள் பற்பல மக்களை அருளிய சம்பவங்கள் இருக்கின்றன. இந்த வரிசையில் சேர்ந்திருக்கும் இன்னொரு மஹனீயர் ஸ்ரீவிஜயதாசர்.

ஸ்ரீபுரந்தரதாசரும் வைஷ்ய மாதம்மா என்பவளின் இறந்த புத்திரனை பிழைக்க வைத்த சம்பவம், ஸ்ரீவிஜயதாசரின் க்ருதி ஒன்றில் வந்திருக்கிறது.

புரந்தரதாசரு வைஷ்ய மாதம்மன
வரகுமாரகன பதுகிஸிதரு கட
குருவ்யாஸ முனிராயரு பூபதிகெ பந்த து
ஸ்தரவாத குஹுயோக பிடிஸிதரு கட
ஸிரி நாராயணயோகி வ்யாஸமுனிகெ பந்த
உரகபாதெய களெது பாலிஸிதரு கட
ஹரியெ ஈ கலியுகதி நின்ன ஷரணரு இந்தா
சரிய மாடிப்பரு அவனாதரு இனிது
ஸ்மரணெ மாடிதவகெ மனஸு நிர்மல காணோ
தரெயொளகெ ஈ மனுஜ நுடிதத்தெ வேதோக்த
நெரெனம்பிதவரிகெ ரோக ஹிங்களெது
பரமஷுத்தன மாடி பொரெவனு தடெயதெ
ஹரிஷரணங்கெ இதிருண்டெ
கருணாகர நம்ம விஜயவிட்டல நின்ன
சரண த்யானிஸுவர படிதொத்து நானய்ய ||41

ராத்ரி சூக்த பாராயணம், புரஸ்சரண, ஹோமாதிகளால் துர்மரணத்தை வெல்வதற்கு சாத்தியம் என்னும் விவரம் ஐதரேய உபநிஷத் மற்றும் அதன் பாஷ்யங்களில் உள்ளது. ஸ்ரீபிராணதேவரின் விசேஷ ஆராதகரான ஸ்ரீவிஜயதாசர், அனேக துர்மரணங்களை பரிகரித்த குறிப்பும் அவருடைய வரலாற்றில் வந்திருக்கிறது. அத்தகைய சில சம்பவங்களை இங்கு பார்க்கலாம்.

7.1 ஸ்ரீவேணுகோபாலதாசரின் துர்மரணம் பரிகாரம் ஆயிற்று

ஒரு முறை வேணுகோபாலதாசர் ஆதவானியில் ஒரு ஞானஸத்ரத்தை ஏற்பாடு செய்து, அதற்கு குருகளான ஸ்ரீவிஜயதாசர், நண்பரான கோபாலதாசர் போன்ற பலரை அழைத்திருந்தார். அப்போது அந்த ஊரில் ப்ளேக் நோய் பரவியிருந்த நேரம். இது வேணுகோபாலதாசருக்கும் வந்துவிட்டது. ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி தடைபடுமே என்னும் கவலையில் அவர் ஸ்ரீவிஜயதாசரை பிரார்த்தித்துக் கொண்டார். அப்போது ஸ்ரீகோபாலதாசரின் தம்பியான ஸ்ரீகுருகோபாலதாசர் 'காயோ குருராயா, கவிகேய ஆயாஸ பரிஹரிஸோ ராய குருராய.. ஷபததி வேணுதாஸன்னிவிபத நீ பொரெயதிரலு ப்தபஸு இத்தெனு பலவோ க்ருபணவத்ஸலனே' என்று ஸ்ரீவிஜயதாசரை பிரார்த்தித்தார். அப்போது ஸ்ரீதாசர், ஸ்ரீகோபாலதாசருக்கு அதன் பரிகாரத்திற்காக ஸ்ரீஹரியை பிரார்த்திக்க சொல்லி, தாமும் ஒரு சுளாதியுடன் தம் ஆராத்ய மூர்த்தியை பிரார்த்தனை செய்தார். ஸ்ரீஹரி மகிழ்ந்தான். மரணப்படுக்கையில் இருந்த திம்மண்ணனய்ய உடனே நலம் பெற்று எழுந்து அமர்ந்தார். குருகளின் அருளால் அவருக்கு வந்திருந்த துர்மரணம் பரிகாரம் ஆயிற்று. ஞானகாரியத்தின் நோக்கம் மற்றும் ஸ்ரீதாசவர்யரைப் போன்ற ஞானிகளின் இருப்பு - இந்த இரண்டும் சேர்ந்து, அவருடைய துர்மரணத்தை பரிகரித்தது.

இந்த சம்பவத்தைக் குறிக்குமாறு, ஸ்ரீவேணுகோபாலதாசரின் பிரார்த்தனையின்படி, ஸ்ரீவிஜயதாசர், ஒரு பிராணதேவரின் பிரதிமையை அங்கு பிரதிஷ்டை செய்தார். ஆதவானியில் இன்றும் அது ஸ்ரீவிஜயதாசரின் கோயில் என்று புகழ்பெற்றிருக்கிறது.

7.2 சேஷகிரிதாசரின் துர்மரணம் பரிகாரம் ஆயிற்று

அப்போது, ஸ்ரீதாசரின் மகன் சேஷகிரிதாசருக்கு 22 வயது ஆகியிருந்தது. ஸ்ரீதாசருக்கு 67 வயது. சேஷகிரிக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. நாளுக்கு நாள் நோயின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே போனது. பயம் கொண்ட அரளம்மா, ஸ்ரீதாசரை பிரார்த்தித்துக் கொண்டாள். சேஷகிரிக்கு துர்மரணம் வருவதை தன்னுடைய ஞானதிருஷ்டியால் அறிந்த ஸ்ரீதாசர், உடனே 'ஹகரணவ மாடதிரு ஹரியே' என்னும் சுளாதியை இயற்றி ஸ்வாமியை பிரார்த்தனை செய்தார்.

உடனடியாக சேஷகிரியின் வியாதி பரிகாரம் ஆயிற்று. முன்பு இருந்ததைப் போலவே உடல் நலம் பெற்றார். ஸ்ரீதாசரின் இரு ஆண்டுகளின் ஆயுளைப் பெற்று, சேஷகிரி மேலும் அதிக சாதனை செய்வதற்கு வாய்ப்பு பெற்றார். 'வரஸந்ததி இன்னிவகெ இருவுதெந்தரிது பிரார்த்திபெ' என்னும் அவருடைய பிரார்த்தனையின்படி சேஷகிரிக்கு சந்தானயோக்யமும் கிடைத்தது. இதனால் அந்த இரண்டு ஆண்டுகளின் ஆயுளில், சேஷகிரிக்கு புத்ரோத்ஸவம் கிடைத்தது.

ஸ்ரீதாசர் அருளியிருந்த காலம் ஆன, அந்த இரண்டு ஆண்டுகளும் முடிந்தன. ஸ்ரீதாசர் அந்த சமயத்தில் கௌதம சங்கம க்ஷேத்திரத்தில் சேஷகிரியுடன் தங்கியிருந்தார். மறுபடி சேஷகிரிக்கு உடல் நலம் குறைந்தது. மற்றவர்கள் பயந்தாலும், அவரின் ஆயுள் முடிவடைவதாக ஸ்ரீதாசருக்கு தெரிந்திருந்ததால், அதைப் பற்றி அவ்வளவு கவலைப்படவில்லை. அப்படியே ஒரு நாள் சேஷகிரி இஹலோகத்தின் செயல்களை முடித்தான். அவனின் அருகிலேயே இருந்து, கடைசி சமயத்தில் ஹரிஸ்மரணை செய்ய வைத்தார் ஸ்ரீதாசர். புத்திர சோகத்தில் வாடிய அரளம்மா மற்றும் அனைவருடன் தாசர் மறுபடி சீகலபரவிக்கு வந்தார்.

திவ்யஞானிகளான, சாஸ்திர சிந்தன ஷீலரான ஸ்ரீதாசருக்கு புத்திர சோகத்தின் தொந்தரவு இருக்கவில்லை. ஆனால், அரளம்மாவிற்கு

புத்திர சோகம், நிரந்தரமாக இருந்தது. 'ந ஸா ஸவித்ரீ விரஹம் ஸஹேத' என்னும் மத்வவிஜயத்தின் வாக்கிற்கு தக்கதாக இருந்தது. சேஷகிரியின் சிறிய குழந்தை மற்றும் மனைவியைப் பார்க்கும்போது அவருக்கு துக்கமே வந்தது. இதனை கவனித்த ஸ்ரீதாசர், அவர்களின் மன சமாதானத்திற்காக, ராமேஸ்வரத்திற்கு தீர்த்தயாத்திரைக்கு அழைத்துச் சென்றார்.

இந்த சமயத்தில் ஸ்ரீதாசர் இயற்றியதாக கூறப்படும் 12 பதங்கள் இன்றும் கிடைக்கின்றன. இந்த 12 பதங்களால், ஸ்ரீஹரியை துதித்து, அவர் நிம்மதி அடைந்தார். மற்றும் இவற்றை பாடுபவர்கள் அனைவருக்கும் நிம்மதியை கொடுப்பவன் ஸ்ரீஹரியே என்பதை இதன் மூலம் நிரூபித்தார்.

7.3. ஸ்ரீமோகனதாசரின் துர்மரணம் பரிகாரம் ஆயிற்று

சேஷகிரியின் நினைவாகவே இருந்த அரளம்மா மற்றும் குடும்பத்தினரை காசி யாத்திரைக்கு அழைத்துச் செல்வதாக ஸ்ரீதாசர் தீர்மானித்தார். அதற்காக தன்னை பின் தொடர்ந்து வந்த மோகனதாசரிடம் - இந்த யாத்திரையில் நீ வர வேண்டாம். இந்த பயணத்தால் அஷ்வத்த நரசிம்மனின் பூஜை தடைபட வேண்டாம். நீ இங்கேயே இருந்து இந்த பூஜை காரியங்களை பார்த்துக் கொள்' என்றார்.

பிறகு, ஸ்ரீமோகனதாசரின் மனைவியான ஸீதம்மாவை தனிமையில் அழைத்து, விசேஷமாக மந்திரித்த மந்திராட்சதையைக் கொடுத்து இவ்வாறு கூறினார் ஸ்ரீதாசர். அம்மா, நாம் இங்கு இல்லாதபோது ஒரு மிகப்பெரிய ஆபத்து வரவிருக்கிறது. நீ தைரியத்தை இழக்காதே. அந்த சமயத்தில் ஸ்ரீஹரிவாயுகுருகளை நினைப்பாயாக. நம் அருளும் உனக்கு எப்போதும் இருக்கிறது. ஆகையால் அந்த ஆபத்து பரிகாரம் ஆவது நிச்சயம்' என்றார்.

ஸீதம்மாவுக்கு இதன் அர்த்தம் முழுமையாக விளங்கவில்லை. ஆனாலும், அவரது அருள் இருக்கும் என்று கூறியதால் நம்பிகையுடன் இருந்தார். ஸ்ரீதாசரின் ராமேஷ்வர யாத்திரை

துவங்கியது. பல மாதங்கள் ராமேஸ்வரத்திலேயே தங்கி, அரளம்மாவுக்கு மன நிம்மதி கிடைக்குமாறு செய்தார். ஸ்ரீராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட, மனோ நியாமகரான ருத்ரர், அதனுடன், ஸ்ரீமத்வாசார்யரின் சாதுர்மாதத்தினால் பவித்ரமாக இருந்த அந்த க்ஷேத்திரத்தில் தினமும் அரளம்மாவிற்கு தத்வபோதனைகளையும் செய்தார். இவ்வாறு அவரின் புத்திரசோகத்தை மறப்பதற்கான பல்வேறு செயல்களை செய்தார்.

இங்கு சீகலபரவியில் ஸ்ரீமோகனதாசர் ஒரு நாள் மதியம் திடீரென்று மரணம் அடைந்தார். ஆரோக்கியத்துடன் இருந்த அவரின் திடீர் மரணம் மக்களை துக்கத்தில் ஆழ்த்தியது. ஸீதம்மாவின் சோகத்திற்கு எல்லையே இல்லை. அவர்களுடன் இருந்த மோகனதாசரின் தாயும் துக்கம் அடைந்தார். இந்த சமயத்தில் ஸீதம்மாவிற்கு, ஸ்ரீவிஜயதாசர் பயணத்திற்கு புறப்படும் முன்னர் கூறிய விஷயங்கள் நினைவுக்கு வந்தன. உடனே அவர் பக்தியுடன் ஸ்ரீஹரிவாயுகுருகளை ஸ்ரீவிஜயதாசரை சிந்தித்து வணங்கினார். 'மதுஸூதனனே மோததீர்த்தரே, விஜயராயரெ' என்று அவர்களை விசேஷமாக வணங்கினார்.

பிணத்திற்கு ஒரு யாமத்திற்குள் தக்க சம்ஸ்காரங்களை செய்ய வேண்டும் என்பது விதி. ஆனால் ஸீதம்மா, மக்கள் யாரையும் அந்த உடலை தொடக்கூட விடவில்லை. சிறிது நேரத்திலேயே, அனைவரும் வியக்கும் வண்ணம், ஸ்ரீமோகனதாசர், தூக்கத்திலிருந்து எழுந்து வருபவரைப் போல எழுந்தார். அதே வேளையில் அங்கு கூட்டத்தில் இருந்த மோனப்பா என்னும் ஒருவர் இறந்து விழுந்தார்.

அந்த சமயத்தில், மோகனதாசர் இவ்வாறு ஸ்ரீவிஜயதாசரைக் குறித்து ஒரு கிருதியை இயற்றிப் பாடினார்:

தந்தெ விஜயராய வ்யாள்யக்கெ
பந்த்யோ விஜயராய
ஹிந்தேஸு ஜன்மவு முந்தேஸு ஜன்மவு
ஒந்து திளியதெந்திகு என்னய ||ப

ஸூர்யன ஸுதனந்தெ அல்லி மஹ

ஷௌர்ய தூதரந்தெ
கார்யாகார்யவு திளியதெ நின்ன பரி
சார்யன எளெதரெ பார்யளு மொரெயிடெ ||1

அதே தைர்ய நோடி ஸூததி தா
ஹ்ருதய பத்த மாடி
மதுஸூதனனெ மோத தீர்த்தரென்
தோதரிதளொதரித்ள் விஜயராயரெந்து ||2

கரகளனெ கட்டி யெளெயுதிரெ
தொரெகளனெ முட்டி
ஸிரி மோஹன விட்டலன பதவ தோரி
தரிகெ தந்துபிட்டெ கருணாளுவெ என்ன ||3

நடந்ததை மோகனதாசர் மக்களிடம் விவரித்தார். தம்மை யமதூதர்கள் அழைத்துச் சென்று, யமன் முன்னால் நிறுத்தியபோது அங்கு உடனே விஜயதாசர் வந்தார். மஹனீயரான விஜயதாசரை ஸ்வத: யமதர்மனே மரியாதையுடன் வரவேற்றான். அவர் வந்ததன் காரணத்தைக் கேட்டான். ‘தன் மகனான மோகனின் ஆயுள் இன்னும் முடியவில்லை. அதற்குள் ஏன் அவனை அழைத்து வந்தீர்கள்?’. யமதர்மன் இதைப் பற்றி சித்ரகுப்தனிடம் கேட்டபோது ‘ஆயுள் முடிந்தது மோனப்ப என்பவருடையதே தவிர, மோகனதாசருடையது அல்ல. தூதர்கள் தவறுதலாக இத்தகைய தவறினை செய்துவிட்டார்கள்’ என்றார்.

விஷயத்தை அறிந்த யமதர்மன், உடனே அந்த மோனப்பனை அழைத்து வரவும், மோகனதாசரை பூலோகத்திற்கு திருப்பி அனுப்புமாறும் உத்தரவிட்டார். இதன்படி, மோகனதாசர் திரும்ப உயிர்பெற்று வந்தார்.

இதனை அறிந்த மக்களுக்கு, ஸ்ரீவிஜயதாசர் மேல் இருந்த பக்தி, மரியாதை ஆகியவை மேலும் அதிகரித்தது. மோகனதாசர் மற்றும் அவருடைய குடும்பத்தார்க்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஸ்ரீதாசரின் ஆணைப்படி, ஸ்ரீஹரிவாயுகளின் பிரார்த்தனையை செய்த ஸீதம்மா, இன்னொரு சதிசாவித்திரி என்றே அறியப்பட்டாள். அவருக்கு ஸ்ரீவிஜயதாசர் வெறும்

மாமனார் மட்டுமல்லாமல், தந்தை, தாய், குரு என அனைத்துமாக ஆனார்.

இந்த விஷயத்தை கேள்விப்பட்ட அரளம்மா, இதே போல் தன் மகனான சேஷகிரியை ஏன் பிழைக்க வைக்கவில்லை என்று கேட்டார். அதற்கு ஸ்ரீதாசர் இவ்வாறு பதில் அளித்தார். சேஷகிரிக்கு முதலில் வந்தது அபம்ருத்யு. என் ஆயுளில் இரு ஆண்டுகளைக் கொடுத்ததால் அது பரிகாரம் ஆயிற்று. பிறகு வந்தது காலம்ருத்யு. அதனை பரிகரிப்பது என்பது, பகவந்தனின் சங்கல்பத்திற்கு எதிரானது. அதற்காகவே நாம் அமைதியாக இருக்க வேண்டியதாயிற்று. அதே போல, இப்போது மோகனனுக்கு வந்தது அபம்ருத்யு. ஆகவே, அதுவும் பரிகாரம் ஆயிற்று -- என்றார்.

இந்த சம்பவத்தால் விதம்விதமான பிரமேயங்களை வெளிப்படுத்தினார். ஸ்ரீதாசரின் யோகசக்தி, மோகனதாசரின் பகவத் பக்தி, மோகனதாசரின் மனைவியின் ஹரிகுருகளில் இருந்த பக்தி என்று பல விஷயங்கள் மக்களுக்கு தெரியவந்தன.

7.4 பாகி கேஷவராயரின் அபம்ருத்யு பரிகாரம் ஆனது

சீகலபரவியின் மறுகரையில் இருந்த கிராமத்தில், கேஷவராய என்னும் ஒரு பகவத்பக்தர் வாழ்ந்து வந்தார். சதாசார ஷீலராக இருந்தார். ஸ்ரீவிஜயதாசர் தமது முதல் காசி யாத்திரை சமயத்தில், இவருடைய வீட்டிலேயே உணவு உண்டார் என்பதை பார்த்தோம். அவருக்கு ஒரு முறை மரணம் வந்து, வீட்டில் இருப்போர் அனைவரும் துக்கத்தில் ஆழ்ந்தனர். அந்த சமயத்தில், ஸ்ரீவிஜயதாசர், ஸ்ரீகோபாலதாசர் முதலான தம்முடைய சிஷ்யர்களுடன் அந்த ஊரில் பிராணதேவரின் கோயிலில் தங்கியிருந்தார்.

இந்த தகவல் கேஷவராயரின் மனைவிக்குத் தெரிந்தது. உடனே அவர் அந்த கோயிலுக்கு விரைந்தார். ஸ்ரீதாசரின் சரணங்களில் விழுந்து வணங்கினார். ஸ்ரீவிஜயதாசரின் வாயிலிருந்து 'தீர்க்க சுமங்கலி பவ' என்று ஆசீர்வாதம் வந்தது. அவளோ எழுந்து தன்

பிரச்னையை சொல்லி, அவரின் ஆசீர்வாதத்தை சத்தியம் ஆக்குமாறு வேண்டிக் கொண்டாள். விஷயம் அறிந்த ஸ்ரீதாசர், அவள் மேல் உள்ள கருணையினால் உடனே 15 உகாபோகங்களை இயற்றி ஸ்வாமியை பிரார்த்தனை செய்தவாறு, தம் ஆயுளின் மூன்று ஆண்டுகளை அவருக்கு தானம் அளித்தார். அப்போது அவர் 'ருத்ராந்தர்கத நாரஸிம்ஹ' என்னும் சுளாதியை இயற்றி, ஸ்ரீஹரியை விசேஷமாக பிரார்த்தனை செய்தார். உடனே கேஷவராயர் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதைப் போல எழுந்தார். ஸ்ரீதாசர் தன் மேல் காட்டிய கருணையை சார்த்தகம் ஆக்கிக்கொண்டு, முன்னர் இருந்ததைவிட அதிக தெய்வ பக்தியைக் கொண்டார்.

அதனை அறிந்த கேஷவராயனின் தாய், தன் ஆயுளின் 10 ஆண்டுகளை தன் மகனுக்கு தானம் அளிக்க விரும்பினாள். ஸ்ரீதாசர் அதற்கு சம்மதித்து அனுமதி அளித்தார். இதனால், கேஷவராயர் அடுத்து 12 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். இந்த சம்பவம் நடந்தது பிரமோத சம்வத்ஸர என்று அந்த உகாபோகத்திலிருந்து தெரியவருகிறது. அது 1750ம் ஆண்டிற்கு சரியாக பொருந்துகிறது. ஸ்ரீதாசருக்கு அப்போது வயது 68 ஆண்டுகள். முன்னர் தனது மகனுக்குக் கொடுத்த 2 ஆண்டுகள்; இப்போது கேஷவராயருக்கு 3 ஆண்டுகள் என மொத்தம் 5 ஆண்டுகளை தானம் அளித்திருந்தார்.

கேஷவராயரின் தாய், இந்த சம்பவத்தை நினைவு கூறும் வகையில், ஸ்ரீதாசரின் தலைமையில், ஆயிரக்கணக்கான பிராமண சுமங்கலியர்களுக்கு அன்னசந்தர்ப்பணம் செய்வித்து, தனது நன்றியை தெரிவித்தார். ஒரு அடி உயரம் இருந்த பிராணதேவரை, ஸ்ரீதாசர் அங்கு பிரதிஷ்டை செய்து, அதனை தினமும் பூஜித்து வரும்படி, கேஷவராயருக்கு தெரிவித்தார். இன்றும்கூட அந்த பிராணதேவரை நாம் அங்கு காணலாம்.

இத்தகைய அபம்ருத்யு பரிகாரங்களுக்கு தாமே சாட்சி என்று, ஸ்ரீகோபாலதாசர் தம்முரைய கருணாகவச ஸ்தோத்திரத்தில் சொல்லியிருக்கிறார்.

பக்தர்க்கெ பந்தபம்ருத்யு ஹரிஸி ஆயுவித்தெ ஸ்ரீவிஜயராயா | அய்ய
ப்ரத்யக்ஷவல்லவெ மனவெ இதகெ ஸாக்ஷி அத்யந்தமஹிம விஜயராயா ||

7.5 ஸ்ரீவேணுகோபாலதாசருக்கு யோகஸித்தியைப் பற்றிய உபதேசம்

ஸ்ரீவிஜயதாசரின் அருளால் கிடைத்த ஹரிதாச தீக்ஷையினால், திம்மண்ணய்ய அவருக்கு அபாரமான ஸித்தி கிடைத்தது. ஒரு முறை அவரின் பித்ரு சிரார்த்த சமயத்தில், பிராமணரை உணவிற்கு அமர்த்தி, தாம் தம் யோகசித்தியினால் சாயாபகவதி க்ஷேத்திரற்கு சென்று, கிருஷ்ணா நதியில் பிண்டங்களை சமர்ப்பித்து, அங்கு சஞ்சாரத்தினால் வந்திருந்த ஸ்ரீதாசருக்கு சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.

‘திம்மண்ணா! யோகசக்தியை இவ்வாறு பயன்படுத்துவது சரியல்ல. இதனால், முக்கிய ஸித்திக்கு தடை உண்டாகிறது. மேலும், இது கலியுகம். விசேஷ யோக ஸித்தியை இந்த யுகத்தில் காட்டுவது, ஸ்ரீஹரிக்கு ப்ரியமான விஷயம் அல்ல. ஆகவே, இனி இவ்வாறு செய்ய வேண்டாம். உடனே உன் இடத்திற்கு திரும்பச் செல்’ என்று ஸ்ரீதாசர் கூறினார்.

ஸ்ரீவிஜயதாசரின் இந்த வாக்கு, கலியுகத்தில் யோகசக்தியைக் காட்டுதல் சரியல்ல என்னும் விஷயத்தை புரிய வைக்கிறது. யோக சக்தியானது, ஆத்யாத்ம சாதனைக்கு மட்டுமே பயன்பட வேண்டும். ஆனால், அதன் பலனை அடைவது, அந்த யோகஸித்தியை பலருக்கும் தெரியப்படுத்துவதாகவே அமையும் என்பதே இதன் கருத்து. இந்த விஷயத்திற்கு ஆதாரமாக, ஸ்ரீமதாசார்யரின் உபதேசம் இவ்வாறு இருக்கிறது. (பாகவத தாத்பர்ய).

மஹைஹஷ்வர்ய ஸ்வரூபோ ஹி பகவான் ருஷப: ஸ்வராட் |
நைஷ்வர்யாணி ஸ்வகீயானி க்யாபயாமாஸ ஸர்வவித் ||
உத்தமானாம் ஞாபனார்த்தம் தர்மதத்வஸ்ய கேஷவ: |

தேஷாமைஷ்வர்யபோகே ஹி மன: ஸக்திம் வ்ரஜேத்யதி |
ஆனந்தோ முக்திகோ ஹ்ராஸம் விகர்மகரணாத்வ்ரஜேத் ||
(5-6-5)

ந கிஞ்சித் காமயேத் பஷ்சாத் ஸ க்ஷிப்ரம் முக்திமேஷ்யதி ||
(11-15-32)

ஸ்ரீதாசரின் ஆணைக்கேற்ப, தான் திரும்பி வரும்போது, ஸ்ரீதாசரின் தீர்த்த பாத்திரத்தை தம்முடனேயே எடுத்து வந்துவிட்டார். இங்கு போஜனம் ஆனபிறகு, இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட பக்தர் ஒருவர் மெய்மறந்தார். 'ஷக்தியல்லி திம்மண்ண' என்று அவரைப் பற்றி இருக்கும் விஷயம், இந்த யோக சக்தியையே விளக்குகிறது என்பதை அறியலாம்.

7.6. பாகண்ணதாசரின் வசனத்தை காத்தது

ஒரு முறை ஒரு வயதான பெண் பாகண்ண தாசரிடம் வந்தாள். இறக்கும் தருவாயில் இருக்கும் தன் கணவனின் நிலையைக் கண்டு வருத்தமுடன் இருந்தாள். ஸ்ரீகோபாலதாசரின் கால்களில் விழுந்து வணங்கிய உடன், அவர் 'தீர்க்க சுமங்கலி பவ' என்று ஆசிர்வதித்தார். இதனால் மகிழ்ந்த அந்தப் பெண் உடன் தன் கணவனிடம் வந்தாள்.ஆனால், அதற்குள் அந்த கணவன் இறந்திருந்தான். துக்கமடைந்த அவள் மறுபடி கோபாலதாசரிடம் வந்து, இந்த விஷயத்தை சொல்லி, தன் மாங்கல்யத்தை காக்குமாறு வேண்டினாள். அவர் தன் குருகளான ஸ்ரீவிஜயதாசரையே வணங்கினார். தம் ஆசிர்வாதம் பொய் ஆகாதவாறு காக்குமாறு வேண்டினார்.

ஸ்ரீவிஜயதாசர், இன்னொரு முறை இவ்வாறு சிக்கிக் கொள்ளக்கூடாது என்று எச்சரித்து, ஸ்ரீஹரியை பிரார்த்தனை செய்து, அந்தப் பெண்ணின் கணவர், இன்னும் சில நாட்கள் பிழைத்திருக்குமாறு அருளினார் என்பது அவரது வரலாற்றிலிருந்து தெரிகிறது. ஸ்ரீபாகண்ணதாசர், எதிர்காலத்தை கணிக்கும் தன் செயலை இந்த சம்பவத்திற்குப் பிறகு விட்டுவிட்டார் என்றும் அறிகிறோம்.

7.7. ஸ்ரீ ஸ்ரீனிவாசாசார்யருக்கு (ஜகன்னாததாசர்) உதவுதல்

மானவிக்கு அருகில் உள்ள ப்யாகவட என்னும் கிராமத்தில் நரசிம்மதாசர் என்னும் பாகவத ஷிரோமணிகள் இருந்தார். ஸ்ரீசுமதீந்திர தீர்த்தர் (1692-1725), அவருடைய தர்ம நிஷ்டையை மெச்சி 'ரங்கனொலுமெய தாசரு' என்னும் விருதினைக் கொடுத்திருந்தார். அவருடைய சங்கீத சேவையை மெச்சி, உத்தராதி மடத்தின் ஸ்ரீசத்யபூர்ண தீர்த்தர் (1706-1726), அவரை பராவசு நாமக கந்தர்வனின் அவதாரம் என்று கொண்டாடினார். ஸ்ரீராகவேந்திர மடத்தின் ஸ்ரீஉபேந்திர தீர்த்தர் (1725-1728) அவருக்கு மந்திரோபதேசம் செய்து, நித்ய பூஜைக்காக கருட வாகன ஸ்ரீலட்சுமி நரசிம்ம பிரதிமை மற்றும் ஸ்ரீலட்சுமி நரசிம்ம சாலிகிராமங்களை கொடுத்தார். அடுத்து அவர் கனவில், ஸ்ரீபுரந்தரதாசரிடமிருந்து 'நரசிம்ம விட்டலா' என்னும் அங்கிதத்தைப் பெற்று, நரசிம்மதாசர் என்று புகழ் பெற்றார்.

பல ஆண்டுகள் வரை அவர்களுக்கு புத்திர சந்தானம் இல்லாததால், திருப்பதி ஸ்ரீனிவாசனின் சேவையை செய்து வந்தார். அதன் பலனாக அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அக்குழந்தைக்கு ஸ்ரீனிவாஸா என்றே நாமகரணம் செய்தார். பின்னர், மந்திராலயத்திற்குச் சென்று, பின்னர் ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் (1761-1785) ஆகப்போகும், பலராமாசார்யரிடம், ஸ்ரீனிவாஸ அத்யயனம் செய்து, பெரிய வித்வாம்சராக ஆகி, ஸ்ரீனிவாசாசார்ய என்றே பெயர் பெற்றார். நிரந்தர பாட, பிரவசனங்களை செய்து, சிறந்த வித்வாம்சர் என்று புகழ் பெற்றார். மான்வியின் தேசாய் அவர்களின் வீட்டில் இருந்த பிரம்மராக்ஷசனை ஓட்டிய புகழ் இவருடையது.

ஸ்ரீவிஜயதாசரைப் பற்றி, சிறிய வயதில் இவர் அறிந்திருந்த 'கூஸி மக தாஸ' என்னும் பெயரே இவர் மனதில் நிலைத்திருந்தது. அதனால் அவரைப் பற்றி அதிக மரியாதை பெற்றிருக்கவில்லை. ஆனால், ஆசார்யரை மேம்படுத்த வேண்டுமென்றே, ஸ்ரீதாசர் பாக்யவாட வந்திருந்தார். தக்க தகுதியைக் கொண்ட சஜ்ஜனர்களுக்கு, அவர்களிடத்திலேயே சென்று அவர்களை காப்பது ஞானிகளின் செயல். 'அனுக்ரஹாயேஹ சரந்தி நூனம் பூதானி

பவ்யானி ஜனார்த்தனஸ்ய'. ஸ்ரீவிஜயதாசரோ இதற்காகவே அவதரித்த விபூதி புருஷர்.

ஸ்ரீனிவாசாசார்யர் வீட்டின் அருகில் இருந்த ஸ்ரீபிராணதேவரின் ஆலயத்தில், ஸ்ரீதாசர் வந்து தங்கினார். ஆசார்யரின் வீட்டிற்கே சென்று, அடுத்த நாள் தீர்த்தபிரசாதத்திற்கு வருமாறு அவரை அழைத்தார் ஸ்ரீதாசர். ஆனால், ஆசார்யருக்கு தாசரைப் பற்றி இருந்த தவறான அபிப்பிராயத்தினால் அவர் அங்கு செல்லும் நிலையில் இல்லை. ஆனால், அதனை நேரடியாக சொல்லாமல், 'ஆகட்டும்' என்று கூறி ஸ்ரீதாசரை அனுப்பிவிட்டார். அடுத்த நாள், தன்னை அழைக்க வந்த ஸ்ரீதாசரின் சிஷ்யர்களிடம் 'தாமதமாக உண்டால் எனக்கு வயிற்று வலி வந்துவிடும். ஆகவே நான் உண்டுவிட்டேன்' என்று கூறி அனுப்பினார் ஆசார்யர். ஸ்ரீதாசரும் இதனை புரிந்துகொண்டு 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி, தீர்த்த பிரசாதத்தை முடித்துக்கொண்டு, தன் சஞ்சாரத்தை தொடர்ந்தார்.

இங்கு ஸ்ரீனிவாசார்யருக்கு அந்த நொடியிலிருந்தே வயிற்றுவலி தொடங்கியது. அது நாட்பட வளர்ந்துகொண்டே சென்றது. மருத்து, மாத்திரைகள் எதற்கும் வலி குறையவேயில்லை. தெய்விக பிரச்னைக்கு பௌதிக பரிகாரம் எப்படி தீர்வு ஆகும்? ஸ்ரீஹரிவாயுஸ்துதி புரஸ்சரணை, மந்திராலயத்தில் குருசேவை ஆகிய முயற்சிகள் நடந்தன. அதன் பலனாக, அவருக்கு கனவில் ஒரு குறிப்பு வந்தது. 'இழந்த பொருளை, இழந்த இடத்திலேயே தேடவேண்டும் அல்லவா?'.

வித்வாம்சரான ஸ்ரீனிவாசாசார்யருக்கு அந்த குறிப்பு புரிந்தது. ஸ்ரீதாசருக்கு செய்த அவமானத்தினாலேயே இது நடந்தது என்பதை அறிந்தார். உடன், மிகவும் சிரமப்பட்டு ஸ்ரீதாசர் இருந்த இடத்திற்குச் சென்றார். அப்போது ஸ்ரீதாசர் இருந்தது திருப்பதியில். தன்னைத் தேடி வந்த ஆசார்யரை ஸ்ரீதாசர் மரியாதையுடன் வரவேற்று உபசரித்தார். 'தங்களின் வயிற்றுவலிக்கு காரணம் தங்களின் நடத்தை அல்ல. ஸ்ரீகோபாலதாசரின் மனதில் ஏற்பட்ட வலி. நமக்கு ஏற்பட்ட அபசாரத்தை, ஏற்றுக் கொள்ளமுடியாமல் அவர் வருத்தப்பட்டதன் விளைவு. மேலும், இது உங்களின் பிராரப்த

பலன். ஆகவே, உங்களை கோபாலதாசரிடம் அனுப்புகிறேன். உங்களுக்கு அங்கேயே தீர்வு கிடைக்கும்' என்றார்.

உடன், ஸ்ரீனிவாசாசார்யர், கோபாலதாசரை சந்திக்க உத்தனூர் சென்றார். அதற்கு முன்னரே, கோபாலதாசருக்கு, ஸ்ரீனிவாசாசார்யரை காக்குமாறு ஸ்ரீதாசரிடமிருந்து குறிப்பு வந்திருந்தது. அதன்படி, ஸ்ரீகோபாலதாசரும், தன்வந்திரி ரூப ஸ்ரீஹரியை ஆராதனை செய்து, ஸ்ரீனிவாசார்யரின் நோயினை குணப்படுத்தினார். அடுத்து, அவருக்கு துர்மரணம் வரவிருப்பதையும் கவனித்து, ஸ்ரீகோபாலதாசர், அவருக்கு தம்முடைய ஆயுளிலிருந்து 40 ஆண்டுகளையே தானம் செய்தார். இவ்வாறு, ஸ்ரீஹரி வாயுகளின் சேவைக்கு அவருக்கு அனுகூலம் செய்து கொடுத்த ஸ்ரீதாசர், கலியுகத்தின் தலையாய வள்ளல்களின் வரிசையில் சேர்ந்தார்.

அடுத்து, ஸ்ரீகோபாலதாசரின் ஆணைப்படி, பண்டரிபுரத்திற்கு சென்ற ஆசார்யருக்கு, அங்கு ஜகன்னாதவிட்டலா - என்னும் அங்கிதம் கிடைத்து, அவர் ஸ்ரீஜகன்னாததாசர் என்றே பெயர் பெற்றார். ஹரிதாச சாகித்யத்தின் மேரு கிருதி எனப்படும் ஸ்ரீஹரிகதாம்ருதஸார என்னும் கிரந்தத்தை படைத்தார். குருவின் ஆணையை சிரமேற்கொண்டு, தன் ஆயுளையே தானம் கொடுத்த ஸ்ரீகோபாலதாசரைப் போன்று வேறொருவர் இல்லை. இதுவே ஸ்ரீனிவாசார்யருக்கு மேலும் சாதனை செய்ய பயன்பட்டது. பின்னர், ஸ்ரீஜகன்னாததாசர் இயற்றிய 'ரதுன தொரகிதல்ல' என்னும் கீர்த்தனையில், அவர் ஸ்ரீவிஜயதாசரின் புகழைப் பாடியிருப்பதை பார்க்கலாம்.

7.8 முன்னோர்களின் நாய் ஜென்மத்தின் பரிகாரம்

ஸ்ரீவிஜயதாசரின் தந்தை மற்றும் தாத்தா அவர்களுக்கு பிராரப்தத்தினால் நாய் ஜென்மம் வந்திருந்ததாம். ஸ்ரீவிஜயதாசர் கயா க்ஷேத்திரத்திற்கு சென்றபோது, அந்த நாய்களும், அப்பிறவியிலிருந்து விடுபட, அவர் பின்னாலேயே சென்றன. இடைவிடாமல் தொடர்ந்து வந்த இவற்றைக் கண்டு சிஷ்யர்களுக்கு தொந்தரவு ஏற்பட்டது. ஆனால், அதன் ரகசியத்தை

அறிந்திருந்த ஸ்ரீதாசர், கயா க்ஷேத்திரத்தில் பித்ரு காரியத்தை நிறைவேற்றி, விஷ்ணு பாதத்தில் பிண்ட சமர்ப்பணம் செய்தபோது, அவை மரணமடைந்தன. அவற்றின் முந்தைய கதையை ஸ்ரீதாசர் சொல்லி, தானே அவற்றிற்கு தகனாதி காரியங்களை செய்தார். ஸ்ரீகோபாலதாசரின் கருணா கவச ஸ்தோத்திரத்தில் இதன் மேற்கோள் வந்திருக்கிறது. துர்யோனிபந்த வம்ஷஸ்தரனுத்தரிஸித்யோ கருணி ஸ்ரீவிஜயராயா.

8. கங்கையின் பிரவாகம்

ஸ்ரீவிஜயதாசர், மூன்றாம் முறையாக காசி யாத்திரைக்கு சென்றிருந்தார். அப்போது வந்த ஒரு பர்வ காலத்தில், அவருடைய விசேஷ ஜபம் நடந்து கொண்டிருந்தது. விஷ்ணு பாதோதகமான பாகீரதியை விதம்விதமாக வணங்கியவாறு, கங்காஜனகனான ஸ்ரீஹரியின் தியானத்தில் அவர் இருந்தபோது, அங்கு ஒரு சம்பவம் நடந்தது. அவருடைய ஸ்தோத்திரம் நடந்து கொண்டிருந்தபோது, கங்கையின் பிரவாகம் அதிகரித்தது. கடைசியில் அது ஸ்ரீதாசர் அமர்ந்திருந்த உயரமான இடத்தையும் அடைந்தது. உடனே கங்காதேவி, சர்வாலங்கார பூஷிதளாக ஸ்ரீதாசருக்கு தரிசனம் அளித்தாள். ஸ்ரீதாசரின் ஆணைப்படி, அங்கு இருந்த சுமங்கலிகள் கங்காதேவிக்கு முறதபாகிண கொடுத்து தன்யர் ஆயினர். அனேகருக்கு கங்கையின் சாட்சாத் தரிசனம் கிடைத்தது. ஸ்ரீதாசரின் ஆடைகள் நனையாமல் அங்கேயே அமர்ந்திருந்தார். கங்கா ஸ்னானத்துடன், கங்கா தரிசனத்தையும் பெற்ற பாக்கியம் அவருடைய சிஷ்ய வ்ருந்தத்திற்கு ஆனது. இதன் குறிப்பு, ஸ்ரீகோபாலதாசரின் கிருதியில் இருக்கிறது.

ஸ்வச்சவாகி கங்காதீரவாஸவ மாடி நிச்ச ஸ்ரீவிஜயராய
ஹெச்சாத பர்வணி மத்ஸ்யோதரிய தோர்த்யோ விசித்ர விஜயராய

ஸ்ரீமதாசார்யர், ஹஸ்தினாபுரத்தில் ஒரு முறை சாதுர்மாதத்தில் அமர்ந்திருந்தபோது, அவரிடம் பாய்ந்து வந்த கங்கை, அவரை வணங்கினாள் என்னும் குறிப்பு, மத்வவிஜயத்தில்

சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சம்பவத்தை இங்கு நினைவு கூறலாம்.

9. கங்கையை துங்கையில் வரவழைத்தது

சீகலபரவியில் துங்கபத்ரா தீரத்தில் ஸ்ரீவிஜயதாசர் ஒரு முறை காலையில் ஆன்ஹிகத்தில் அமர்ந்திருந்தார். அவரது மனமோ காசியின் கங்கா நதியின் சிந்தனையில் இருந்தது. அவருடைய சிந்தனையின் பலனாக, துங்கபத்ரைக்கு கங்கை வந்தாள். பார்த்துக் கொண்டிருக்கையிலேயே திடீரென்று வெள்ளம் பொங்கியது. துங்கையில் வேறான தண்ணீரைக் கண்டு மக்கள் வியப்புடன் அதில் நீந்தி மகிழ்ந்தனர். கங்கா ஸ்னானம் செய்யமுடியாத பல வயதானவர்களும் அதில் இருந்தனர். இவ்வாறு, தமது தவ சக்தியினால் சீகலபரவிக்கு கங்கையைக் கொண்டு வந்த பெருமை ஸ்ரீவிஜயதாசருடையதாகும். இதன் குறிப்பும்கூட ஸ்ரீகோபாலதாசருடைய கிருதியில் இருக்கிறது.

துங்காதீரதல்லி குளிது மேலகெ
கங்கெ உக்கிஸிதெயோ விஜயராயா

உடுப்பியின் அனந்த ஸரோவரத்திற்கு ஸ்ரீமத்வாசார்யருக்காக கங்கை வந்தபின், அந்த சரோவரம், மத்வ சரோவரம் என்று பெயர் பெற்றது என்னும் மத்வவிஜய குறிப்பினை இங்கு சிந்தனையில் கொண்டு வரலாம்.

10. சீகலபரவியிலிருந்தே பாண்டுரங்கனின் தரிசனம்

இன்னொரு சமயம், சீகலபரவியில் ஸ்ரீதாசர் தியானத்தில் இருந்தார். அன்று ஆஷாட சுத்த ஏகாதசி. பண்டரிபுரத்தில் லட்சக்கணக்கான மக்கள் ஸ்ரீவிட்டலனை தரித்து புனிதர்கள் ஆன நாள். ஸ்ரீதாசரின் சிஷ்யர்களில் சிலர் அந்த உற்சவத்தைக் காண வேண்டும் என்று ஸ்ரீதாசரின் அனுமதியைப் பெறாமலேயே சென்றிருந்தனர். வேறு சில சிஷ்யர்கள் தாசரை விட்டுப் பிரியமுடியாமல் அவருடனேயே இருந்தனர். உற்சவத்து நாளன்று, சரியான நேரத்தில், அவர்களுக்கெல்லாம் ஒரு நொடி, தாம் பண்டரிபுரத்திற்குச் சென்று, ஸ்ரீவிட்டலனின் தரிசனத்தை பெற்றோம் என்னும் பாவம்

மின்னலைப் போல வந்தது. அந்த நொடியில் ஸ்ரீதாசரிடமிருந்து ஒரு விசித்ர மகிமை வெளிப்பட்டது. அங்கு இருந்தவர்கள் அனைவரையும், தங்களின் அங்க வஸ்திரத்தால் முகத்தை மூடிக்கொள்ளுமாறு ஆணை வந்தது. அப்போது நடந்ததே அதிசயம். அந்த அனைவருக்கும் சாட்சாத் பாண்டுரங்கனின் தரிசனமே ஆயிற்று. சில நொடிகளுக்குப் பிறகு தாசரின் குரல் கேட்டது. ‘மூடிய துணியை எடுத்துவிடவும்’. அப்போது அவர்களுக்கு தெரிந்தது, புன்னகை கூடிய முகத்துடனான ஸ்ரீதாசர் மற்றும் சீகலபரவியின் அஷ்வத்த நரசிம்மன்.

இது ஸ்ரீமத் பாகவதத்தில் நிரூபிக்கப்பட்ட தூரதர்ஷன என்னும் யோகசித்தியின் பலனே ஆகும். தமக்கு மட்டுமே அத்தகைய அனுபவம் வந்தால், அது ஸித்தி. ஆனால், ஸ்ரீதாசர், தமது யோகசக்தியினால் அனைத்து மக்களுக்கும் சீகலபரவியிலிருந்தே பண்டரிபுரத்தின் விட்டலனை தரிசனம் செய்வித்து, தன்யர் ஆக்கினார்.

தம்மை பார்ப்பதற்காக காத்திருந்த மக்களுக்கு, ஸ்ரீமத்வாசார்யர் அவர்கள் அமர்ந்திருந்த இடத்திலேயே தன் தரிசனத்தை அளித்து தன்யர் ஆக்கிய, மத்வவிஜயத்தின் குறிப்பினை இங்கு கவனிக்கலாம். இன்றைய தூரதர்ஷனத்திலும், வெகு தூரத்தில் இருக்கும் பொருட்களை பார்க்க முடிகிறதல்லவா? இங்கு பார்ப்பது திரையில். ஆனால், தாசர் காட்டியது மட்டும் திரைக்கு உள்ளே என்பது விசேஷம்.

அங்கத முஸுகு தெகெயலு க்ஷேத்ரதி பாண்டு
ரங்கனோ விஜயராயா -- ஸ்ரீகோபாலதாசர்

11. புலியால் வந்த ஆபத்து பரிகாரம்

ஒரு முறை திருப்பதி வெங்கடேசனை தரிசனம் செய்து, அஹோபல நரசிம்மனின் தரிசனத்திற்கான வழியில் ஸ்ரீவிஜயதாசர், ஸ்ரீசைலத்தின் மல்லிகார்ஜுனனின் தரிசனத்திற்கு சென்றார். வழியில் நடந்த ஒரு சம்பவம் விசித்ரமாக இருந்தது. சிஷ்யர்களுடன் இருந்த தாசரின் முன்னால், ஒரு மிகப்பெரிய புலி

கர்ஜித்தவாறு வந்து நின்றது.

சிஷ்யர்களுக்கெல்லாம் உயிர் பயமே வந்தது. ஆனால், ஸ்ரீதாசர் போன்ற மகாத்மருடன் இருப்பதால் அவர்கள் பயப்படாமல் நின்றனர். சிஷ்யர்களுக்கு தைரியம் கூறிய ஸ்ரீதாசர், நரசிம்ம ஸ்தோத்திரத்தை சொல்லத் துவங்கினார்.

புலி மேலும் முன்னேறும் சக்தியை இழந்தது. உடன், தூரத்தில் பாணத்தை விடும் சத்தம் கேட்டது. எதிரில் இருந்த புலி செத்து விழுந்தது. நரசிம்மதேவரின் ஸ்மரணையினால், துர்மரணத்தின் பரிகாரம் ஆனது என்பதே இதன் மூலம் வெளிப்பட்ட மகிமை.

ஸ்ரீமதாசார்யர் இரண்டாம் பதரி யாத்திரை சமயத்தில், இமாலயத்தில் சென்று கொண்டிருந்தபோது, தம் சிஷ்யரான ஸ்ரீசத்ய தீர்த்தரை சம்ஹரிப்பதற்கு வந்த புலி ரூபமான தைத்யனை தன் உள்ளங்கையாலேயே அடித்துக் கொன்ற மத்வவிஜயத்தின் குறிப்பினை இங்கு நினைக்கலாம். ஸாதுகள், பக்தவத்ஸலர்கள் என்பதற்கு இதுவே உத்தம உதாரணம்.

12. புலிக்கு சத்கதி கிடைத்தது

பிறகு நடந்த இன்னொரு சம்பவமும் இதே போல இருந்தது. ஒரு முறை, திடீரென்று ஸ்ரீதாசர், தம் சிஷ்யர்களை முன்னே செல்ல வேண்டாம் என்றார். ஏதோவொரு க்ரூர மிருகம் வருகிறது என்று தம் சிஷ்யர்களுக்குக் கூறினார். அந்த சமயத்தில் பயங்கரமான ஒரு புலி அங்கு வந்தது. புலி தாசரை பார்க்க; தாசரும் புலியை பார்க்க என, சிறிது நேரம் அப்படியே சென்றது. புலியின் கதையை அறிந்திருந்த தாசர், சிஷ்யர்களிடம் இவ்வாறு கூறினார்.

‘இவன் ஸாத்விக சேதனன். பிராரப்தத்தினால் இவ்வாறு புலியாக வந்திருக்கிறான். இன்று இவனுக்கு இதிலிருந்து விடுதலை அடையும் நேரம் வந்திருக்கிறது. இவனுடைய நலனுக்காக ஸ்ரீஅஹோபல நரசிம்மனை பிரார்த்தனை செய்வோம்’ என்றார். இவ்வாறு கூறி, அங்கேயே தியானத்தில் அமர்ந்தார். தம் தேவரபெட்டியை முன் வைத்துக் கொண்டு, அதற்கு பிரதட்சிணை செய்து, ஸ்ரீஅஹோபல நரசிம்மனை வணங்கினார்.

அனந்தகிரிவாஸ கொடு எனகெ லேஸா
என்னந்தரங்கதல்லிப்ப ஜகதப்பா ||ப

ரக்ஷிஸுவுது தாரக்ய துரங்க
அக்ஷய மரெகொடு பவபயபங்கா
லக்ஷ்மீ நாயக நீ பக்தஜனஸங்க
மோக்ஷதாயக விஜயவிட்டல நரஸிங்க ||3

தன் உடல் வலிமையை இழந்த புலி, நடந்து வந்து ஸ்ரீதாசரின் தேவரபெட்டியை பார்த்தவாறு, தன் உயிரை விட்டது. அதன் பிராரப்தம் முடிந்தது. நற்கதியை அடைந்தது. இவ்வாறு தீர்த்தயாத்திரையின் வழியில், பல உயிர்களுக்கு நற்கதியைக் கொடுத்தார் ஸ்ரீதாசர். சஜ்ஜனர்களின் சஞ்சாரம், ஆத்ம மேம்பாட்டுடன் உலகின் மேம்பாட்டிற்கும் காரணம் ஆகிறது என்னும் வாக்கியத்தை உண்மை ஆக்கினார்.

13. ரங்கராஜு

ஒரு முறை ஸ்ரீதாசர், கன்யாகுமரியிலிருந்து ராமேஸ்வரம் சென்றுகொண்டிருந்தார். நடுவில் ஒரு மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதி. அது திருடர்கள் அதிகம் இருக்கும் பகுதி என்று அறியப்பட்ட இடம். ஆனால் ஸ்ரீதாசர் மற்றும் குழுவிற்கு அது தெரிந்திருக்கவில்லை. ஏதோ ஒன்று நடக்கப்போகிறது என்று மட்டும் ஸ்ரீதாசருக்கு தெரிந்திருந்தது. அதே போல, திருடர்களின் கூட்டம் ஒன்று ஸ்ரீதாசர் குழுவினரை சூழ்ந்தது.

உடனே ஸ்ரீதாசர் பகவந்தனை தியானம் செய்து, தன்னை மற்றும் குழுவினரைச் சுற்றி, வட்டமாக ஒரு கோடு வரைந்தார். திருடர்களின் கூட்டத்தின் தலைவன் பெயர் ரங்கராஜு. தாசரின் மற்றும் அவரது குழுவினரிடம் அதிக செல்வம் இருக்கலாம் என்று நினைத்தான். ஸ்ரீதாசரே அந்த குழுவின் தலைவராக இருக்கலாம் என்றும் நினைத்தான். அவரிடம் வருவதற்காக, அந்த வட்டத்திற்குள் அவன் வந்தவுடன், ஸ்ரீதாசர் வெளியில் வந்தார். உடன், அவனும் வெளியில் வர முயல, அவனால் அது முடியவில்லை. அப்படியே திக்பிரமை பிடித்தவாறு அங்கேயே

அமர்ந்து விட்டான். ஸ்ரீதாசர் வரைந்த வட்டம், அவனை அங்கேயே சிறை பிடித்தது. அது, தந்த்ரஸார மந்திரங்களின்படி போட்ட வட்டம் என்று அவனுக்கு எப்படி தெரியும்? அது தற்போதைய ‘லைவ் வயர்’ போன்றதாக இருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும்.

கடைசியில் அவனுக்கு, ஸ்ரீதாசர் மகாத்மர் என்று அறிவு வந்தது. ஆனால், அவனை அப்படியே விட்டுவிட்டு, ஸ்ரீதாசரின் பிரயாணம் முன்னர் நடந்தது. ராமேஸ்வர யாத்திரையை முடித்துக்கொண்டு மறுபடி அவர்கள் அதே வழியில் திரும்பி வந்தனர். அப்போதும், ரங்கராஜு அதே வட்டத்திற்குள் சிறைப்பட்டு நின்றிருந்தான். இதன் காரணத்தை அறியாத மக்கள் கொடுத்து வந்த உணவினை உண்டு அங்கேயே இருந்தான். அப்போது அங்கு வந்த ஸ்ரீதாசரை வணங்கி, தான் செய்த தவறுகளை சொல்லி மன்னிப்பு கேட்டுக் கொண்டான். அவனின் நடத்தை மக்களுக்கு எப்படிப்பட்ட துன்பத்தை தருகிறது என்பதை தெரிவித்த ஸ்ரீதாசர், இனி இப்படி செய்யக்கூடாது என்னும் சத்தியத்தை பெற்றுக் கொண்ட பிறகு, அவனை அந்த வட்டத்திலிருந்து விடுவித்தார் ஸ்ரீதாசர். அடுத்து சஜ்ஜனனாக வாழ்ந்த ரங்கராஜு, வாழ்க்கை முழுவதும் அவரின் உதவியை நினைத்துக் கொண்டே வாழ்ந்தான்.

அடர்ந்த காட்டில் தம்மை சூழ்ந்த திருடர்களுக்கு, ஒரு கணம் சிலையாக மாறி, மறுகணம் மனிதராக தோன்றி அவர்களை மயங்கச் செய்து, சரணாகதி அடையச் செய்த ஸ்ரீமதாசார்யரின் சரித்திரம் மத்வவிஜயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனை இங்கு நினைவில் கொள்ளலாம்.

14. மன்னார்குடியில் ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனம்

ராமேஸ்வரத்திலிருந்து பிரயாணத்தை தொடங்கிய ஸ்ரீதாசர், அனந்தஷயன, தோத்தாத்ரி, திருவனந்தபுர க்ஷேத்திரங்களை தரிசித்து, மன்னார்குடியை அடைந்தார். ராஜகோபாலஸ்வாமியின் அழகான பிரதிமை உள்ள க்ஷேத்திரம். ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் இந்த ஸ்வாமியை தரிசித்த விவரம், ராகவேந்திர விஜயத்தில் உள்ளது. அங்கு உள்ள ஒரு பெரிய சரோரவரம் - ஹரித்ரா. சில

நாட்கள், ஸ்ரீதாசர் அங்கேயே இருந்தார். அப்போது ஒரு சம்பவம் நடந்தது.

என்றைக்கும்போல சரோவரத்தில் ஸ்னானம் செய்து, கரையில் அமர்ந்து, ஸ்ரீதாசர் தனது ஆன்ஹிகத்தில் இருந்தார். அங்கு விளையாடிக் கொண்டிருந்த கோபாலகர்களில் ஒரு சிறுவன், ஸ்ரீதாசரிடம் ஓடோடி வந்து, தண்ணீரில் இறங்கி ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து, அவர் மேல் எறிந்தான். இதனால், தாசருக்கு மெய் சிலிர்த்ததே தவிர கோபம் வரவில்லை. அவர் மறுபடி ஸ்னானம் செய்து, ஆன்ஹிகத்தில் அமர்ந்தார். அந்த சிறுவனோ மறுபடி அவர் மேல் தண்ணீர் ஊற்றினான். மறுபடி கோபம் கொள்ளாத ஸ்ரீதாசர், இன்னொரு முறை ஸ்னானம் செய்து, தன் ஆன்ஹிகத்தை தொடர்ந்தார். இப்படியே 17 முறை நடந்தது.

அடுத்த 18வது முறை, அந்த சிறுவன், தண்ணீரை தன் வாயில் நிரப்பிக்கொண்டு, அதனை அப்படியே ஸ்ரீதாசர் மேல் உமிழ்ந்தான். ஸ்ரீதாசரோ இப்போதும் ஒன்றும் சொல்லாமல், மறுபடி ஸ்னானம் செய்து ஆன்ஹிகத்தில் அமர்ந்தார். அவருக்கு கோபம் மட்டும் வரவேயில்லை. அவர் மனதில் ஏதோ ஒரு நிம்மதி பரவியது. அந்த சிறுவனை அழைத்து இவ்வாறு கூறினார்.

‘குழந்தாய், எத்தகைய உபகாரம் செய்தாய். இத்தகைய பவித்ர சரோவரத்தில் பல முறை திரும்பத்திரும்ப ஸ்னானம் செய்யும் வாய்ப்பினை அளித்து, நான் மேம்படுபவதற்கு காரணம் ஆனாய்’ - என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த சிறுவன் புன்னகையுடன் நின்றிருந்தான். ஸ்ரீதாசருக்கு தெரிந்த அந்த சிறுவன் அல்ல. சிறுவனின் ரூபத்தில் இருந்த சாட்சாத் ஸ்ரீகிருஷ்ணனின் அழகான முகமே. உடனே ஸ்ரீதாசரின் வாயிலிருந்து ஒரு அபூர்வ கிருதி வெளிப்பட்டது.

மாதன்னாடை மன்னாரி கிருஷ்ண மாதனாடை ||ப
தாதனு நீனெந்து பயஸி பந்தேனு மாதனாடை ||அப

ஊதுவ ஸிரி பொங்கொளலோ ஜக
தாதாரத நிஜ ஹொளெயோ
பாதத பொங்கெஜ்ஜெ தளிலோ ஸர்வ

வேதகளரஸுவ கல்பக ஸௌலோ ||1

கஸ்தூரி திலகத மதவோ ம
குட மஸ்தகதி ஜகஜகவோ
விஸ்தரதி பொத்த ஜகவோ பர
வஸ்துவு நந்த யஷோதெய மகுவோ ||2

நவனீதவ பிடித கரவோ நவ
நவ மோஹன ஷ்ருங்காரவோ
அவதரிஸித ஸுரதருவோ ஷதர
வியந்ததி உங்குரவிட்ட பரவோ ||3

ஆனந்த ஞானத ஹ்ரதவோ ஷுப
மானவரிகெ பலு ம்ருதுவோ
ஆனன சவியொளு மிதுவோ பாப
கானன தஹிஸுவ பாவக பதவோ ||4

த்ரிஜகததிக பாவனனோ பங்
கஜ நேத்ரெய நாயகனோ
அஜபவாதிகள ஜனகனோ நம்ம
விஜயவிட்டல யதுகுமாரகனோ ||5

பாடல் முடிந்தது. புன்னகையுடன் நின்றிருந்த ஸ்ரீகிருஷ்ணன், அங்கிருந்து மறைந்தான். ஸ்ரீதாசர் அந்த சமயத்தில் கோபத்தை வென்றது, அவருடைய அசாதாரண ஸித்திக்கு காரணம் ஆயிற்று. பற்பல ஞானிகள்கூட தங்கள் கோபத்தினால், சாபம் கொடுத்து, புண்ணியத்தை இழந்த கதைகள் பலவற்றை புராணங்களில் படித்திருக்கிறோம் அல்லவா? அதற்காகவே பகவத்கீதையில் காமத்தை மஹாஷன, மஹாபாப்மா, துஷ்பூர, அனல என்று பல்வேறு விதமாக வர்ணித்திருப்பதை பார்க்கிறோம்.

அங்கு இருக்கும் ராஜகோபால மூர்த்திக்கு மன்னாரி கிருஷ்ண என்னும் பெயர் வந்த காரணத்தை, ஸ்ரீதாசர் சுளாதி ஒன்றில் அழகாக விவரித்திருக்கிறார்.

மன்ன அதிகவாத மன்னாஸுரதைத்ய

தன்னெதுரலி ஒப்பரனு காணெனெந்து
உன்மத்ததிந்த ஸன்னு முனிய தப
வன்னெ கெடிஸலாகி கின்னமனிஸினல்லி
தன்னொளு தானெ காவன்னனய்யன பாத
வன்னு நெனெஸலு ஸன்னிதியாதனு
அன்னாதரொடெய விஜயவிட்டலனு பந்து
மன்னிஸிதனு ரிஷி அன்னவாதவனு ||4

ஸன்ன என்னும் ரிஷிகளின் தவத்திற்கு தடை செய்த மன்னாஸுர என்னும் அசுரனைக் கொன்று, ரிஷிகளுக்கு மகிழ்ச்சி அளித்த மன்னாரி (முராரி என்று சொல்வதைப் போல) என்று, அங்கு இருக்கும் ஸ்ரீகிருஷ்ணனுக்கு பெயர் என்பது பொருள்.

15. நம்பியவர்களின் வியாதியை போக்கியது

ஒரு முறை உடுப்பி யாத்திரை மேற்கொண்ட ஸ்ரீதாசர் பத்ராவதியை தாண்டி மாளெனஹல்லி என்னும் இடத்தை அடைந்தார். திடீரென்று அவருடன் இருந்தவர்கள் அனைவரும் ஒரு விசித்திர நோய்க்கு ஆளாயினர். ஸ்ரீதாசருடன் பயணம் செய்வது எங்கு தடைபட்டுவிடுமோ என்று அவர்களுக்கு பயம். அவர்களின் எண்ணம் புரிந்த ஸ்ரீதாசர், அவரை கருணையுடன் பார்த்து, அவர்களின் நோய்களின் பரிகாரத்திற்காக 'தடிய கொடுவுதிந்து ஒடெயா கருணதலி' என்னும் சுளாதியை இயற்றி, ஸ்ரீஹரியை பிரார்த்தனை செய்தார்.

தடியா கொடுவுதிந்து ஒடெயா கருணதல்லி
தடவ மாடிதரெ பலு அபகீர்த்தியு
தடெயாதெ பருவுது பிடதெ நினகெ இந்து
படவராதாரி எம்போ நின்ன பிருது
பொடவியொளு தும்பிதெ நானொப்ப பேளலில்ல
பொடமடுவெனு நின்னய சரணக்கெ
கடெகண்ணினிந்த நம்மன்யாகெ நோடுவெ ஹீங்கெ
அடகாணிஸி நில்லிஸுவுது தர்மவல்ல
ஒடவெ பேட பந்தத்தில்ல ஸ்வாமி
ஒடல உம்மளிகெயல்லி நிர்தோஷவாத நின்ன

அடிகள நோடி தோஷவ போகாடி
அடிகடிகெ அதிகவாகி எந்தெந்திகெ ஸுக
படுவெனெ பலுபகெயிந்த நானு
ஒடமதியாதரு நீனேவெ கதியெந்து
நடெது பந்திரெ ஈ பரியாஹுதெ
கடெகோலு பிடித ஸிரி விஜயவிட்டல கிருஷ்ண
படுவலகடலவாஸ யாதவேஷ ரமேஷ ||1

இத்தகைய பிரார்த்தனையை காம்ய கர்ம என்று சொல்வதில்லை. மற்றவர்களின் நலனுக்காக செய்யும் காரியங்கள் அனைத்தும் நிஷ்காம கர்மமே. ஸ்வார்த்தத்திற்காக (தன்னுடைய நலனுக்காக) செய்தாலே அது நிஷித்த எனப்படுகிறது. சில நொடிகளிலேயே, அனைவரும் நலன் பெற்றனர். உடுப்பி யாத்திரை நிர்விக்னமாக நடந்தது.

16. விஷத்தை குடித்ததால் வந்த தொல்லை நீங்கியது

சிறந்த பக்தர்களுக்கு துர்ஜனர்கள் விதம்விதமாக தொல்லைகளைக் கொடுப்பது காலம் காலமாக நடந்து வரும் விஷயங்களே. ஸ்ரீபீமசேனதேவருக்கு துரியோதனன் காலகூடத்தைப் போன்ற ஒரு மகாவிஷத்தைக் கொடுத்து கொல்ல முயன்றதை மகாபாரதத்தில் பார்க்கிறோம். பிரகலாதனுக்கு ஹிரண்யகசிபு விஷம் கொடுத்து கொல்ல முயன்றதை பாகவதத்தில் பார்க்கிறோம். இத்தகைய துர்ஜனர்களின் கெட்ட செயல்களை முறியடித்து, முன்பைவிட அதிகமாக ஒளிர்வது சஜ்ஜனர்களின் பெருமை ஆகும். முக்கியமாக பக்தவத்ஸலனான பகவந்தன், தன்னவர்களை என்றும் கை விடமாட்டான் என்பதற்கு இதுவே உதாரணம்.

இதே போல, ஸ்ரீவியாசராஜருக்கு, ஸ்ரீவாதிராஜருக்கு, ஸ்ரீவிஜயீந்திரருக்கு, ஸ்ரீஸத்யபோதருக்கு - விஷபிரயோகம் ஆகி, அதனை அவர்கள் ஸ்ரீஹரியின் பரமானுக்கிரகத்தால் அற்புத ரீதியில் பரிகரித்தனர் என்பதை பார்க்கிறோம்.

ஸ்ரீவிஜயதாசருக்கும் இத்தகைய விஷபிரயோகம் நடந்து அதனை அவர் 'ஸேரிதெனோ பந்து ஸங்கடதலி நொந்து' என்னும்

சுளாதியை இயற்றி ஸ்ரீஹரியை விசேஷமாக வணங்கி அதிலிருந்து முழுமையாக குணமடைந்தார்.

ஸேரிதெனோ பந்து ஸங்கடதல்லி நொந்து
தாரி துடியாரி தானவாரி
கோரவாதவதிக்ரூரரு ஔளகெ ஐ
வாரு ஒந்தாகி, மெத்தாரு சென்னாகி
நூரி நூரி பேரு ஒல்லனெந்தரெ மூரு
பாரி குடிஸிதரு ஒந்தொந்து ஸேரு
புராதன நாம விஜயவிட்டல ப்ரேம
ஆரைது ஸலஹுவவர காணெ பல்லவர ||

இந்த சுளாதி, ஆபத்து பரிஹார, விஷ நிவாரண சுளாதி என்று பெயர் பெற்றதாகும்.

17. நம்பியவர்களை காப்பாற்றிய கருணாளு

நோய் நொடிகளிலிருந்து மட்டும் அல்லாமல், பிற வகைவகையான ஆபத்துகளிலிருந்தும் சஜ்ஜனர்களை காப்பாற்றுவது ஞானிகளின் ஸ்வபாவம். ஸ்ரீவிஜயதாசர் இத்தகைய ஞானிஸ்ரேஷ்டர் ஆவார். அத்தகைய ஆபத்துகளில் சிக்கி நொந்த மக்களைக் கண்டு அதன் பரிகாரத்திற்காக ஸ்ரீஹரியை "துருளன்ன பரிஹரிஸோ துர்காரமண ஹரி' என்னும் சுளாதியை இயற்றினார்.

துருளன்ன பரிஹரிஸோ துர்காரமண ஹரி
உரகாபரண ருத்ர நாமக நாராயண
ஸரளொந்து எச்சி ஸப்த த்ருணராஜ தருகள
தரணிகெ ஒரகிஸித தைர்யஷாலி
இரளு ஹகலு நின்ன ஷரணங்கெ ப்ரேதியாத
நரரிகெ மனோவாசகாயதல்லி
ஆர எள்ளிநிதாதரு விபத்து எம்போதுண்டெ
கருணாகர தேவ அத்புத ஹஸ்த
கரளுரி மத்யதல்லித்த ஸஸியந்தெ ஜீ
வரு இப்பரு கேளு கடெ ஹாயிஸோ
பரம மூர்க்கராதரு ஷோதிஸி நோடிதரு

ஹரி நின்ன லீலெ காணெ திளிதுபல்லெ
பரரிகெ ஈ பரி ஸாஹஸ எந்தெம்பியா பக்தஜனர
பொரெவ பிரிது நின்னதல்லவேனை
அரியதவனந்தெ ஸும்மனிரலாகதோ
பரிபக்வகால பந்திதெ, ஈகலே
மொரெ ஹொக்கெனய்யா நின்ன சரணாப்ஜயுகள
நெரெ மாது லாலிஸு மனகெ தந்து
பரிதாகெ போகதந்தெ மாடோ மஹப்ரபல
துரகவேரித கல்கி களமர்த்தன
பரீக்ஷெ மாடுவ கால ஸ்வல்பவாதரு இல்ல
ஸருவ பகெயிந்த விசாரிஸெ
கொரளகதார்த்தராகி கேவல
நிரவிண்ண பரராகி தைன்யவ்ருத்தி படுதிப்பரோ
வர அபய மூர்த்தி இந்த ஸமயக்கெ நின்ன
சரித்ரெ தோரிதித்தடெ இன்னாவாக தோர்ப்பெ
ஹிரியரு பிந்தெ ராயரிகெ பந்த குஹூயோக
பரிஹரிஸி கீர்த்திபொத்து நின்னவராகி
தரணியொளகெ மெரெது, ஜயவந்தரெனிஸி டங்
குரவ, ஹோயிஸி நின்ன ஒலிஸலில்லெ
நெரெ ஹொரெயவனல்ல நானவர சிஷ்யர
கருணாகடாக்ஷக்கெ யோக்யனஹுதோ
ஹரி நீனெ உபேக்ஷ மாடிதரெ நின்
திரெ மார்க்க காணினோ பரம மித்ர
ஹருவ ஹெத்தொரெயொளுக்காஸு ஈஸுகாயி
ஹரகோலு தப்பிகைஸோது கடிகெ
பருவ மனுஜ நடுவெ முணுகுவ பரியந்தெ
தெரனாகிதெ, இன்னேனுளதெ இல்ல
ஸுரபாலானுத, ஸிரி விஜயவிட்டல நின்ன
கருணவாதரெ கோடி ப்ரதிபந்தக ஹரவு ||1

இந்த பிரார்த்தனையின் பலனாக, தபஸ்விகள் மற்றும் சஜ்ஜனர்களை இம்சிக்கும் துர்ஜனர்களின் தொல்லைகள் பரிகாரமாகி, மக்களில் நிம்மதி நிலவியது. ஸ்ரீதாசர், சிப்பகிரிக்கு வருவதற்கு காரணமாக இருந்தது, சஜ்ஜனர்களுக்கு வந்த இத்தகைய ஆபத்துகளை பரிகாரம் செய்வதற்கே.

18. முத்து மாலை வழங்கிய யோகஸித்தி

ஒரு முறை ஸ்ரீதாசரின் தீர்த்த யாத்திரை சமயத்தில் ஒரு வாலிபன் அவரை இடைவிடாமல் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். அவனுக்கு திருமணம் ஆகவேண்டும் என்று விருப்பம். ஆனால் பரமஏழையான அவனுக்கு கன்யா தானம் செய்வதற்கு யாரும் தயாராக இல்லை. அதற்காக, ஸ்ரீதாசரை பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். அவனின் விருப்பத்தை அறிந்திருந்த ஸ்ரீதாசர், தக்க சமயம் வரட்டும் என்று காத்திருந்தார்.

அவருடைய சஞ்சாரம் திருப்பதியில் சென்று முடிந்தது. ஹரிசங்கீர்த்தனையுடன், மலை ஏறும் நிகழ்ச்சியும் துவங்கியது. அங்கு வழியில் ஒரு பெரிய பெட்டியை தூக்கிக் கொண்டு ஒரு குழு தென்பட்டது. ரேவா மகாராஜா அனுப்பிய காணிக்கையை, ஸ்ரீனிவாசனுக்கு அர்ப்பணம் செய்வதற்காக தாம் வந்திருக்கிறோம் என்று அந்த குழுவினர் கூறினர்.

ஸ்ரீதாசர், தன்னை பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த அந்த வாலிபனை அழைத்து, ‘இந்தா நீ விரும்பிய செல்வம். இதனை வைத்துக்கொண்டு, நீ விரும்பும் பெண்ணைத் திருமணம் செய்து, சதாசாரஷீலனாக வாழ்வாயாக’ என்று சொல்லி, தம் யோக சக்தியினால், அந்த ராஜ சேவகர்கள் கொண்டு வந்த பெட்டியிலிருந்து, ஒரு முத்து மாலையை எடுத்து அவனிடம் கொடுத்து அனுப்பினார்.

அடுத்து அந்த சேவகர்கள் அந்த காணிக்கைப் பெட்டியை ஸ்ரீனிவாஸனுக்கு சமர்ப்பிக்க தேவஸ்தான அதிகாரிகளான மஹாந்தருக்கு சமர்ப்பித்தனர். அது ரேவா மகாராஜா, மரணப்படுக்கையில் இருந்த தன் மனைவியின் நலனுக்காக சங்கல்பம் செய்திருந்த காணிக்கையாகும். அவை அடுத்த நாள் ஸ்ரீனிவாசனுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அந்த ராஜ ஆபரணங்களுடனான ஸ்ரீனிவாசன், அந்த மகாராஜாவின் கனவில் வந்தபோது, ஒரு முத்து மாலை மட்டும் இல்லாததைக் கண்ட ராஜா திடுக்கிட்டார். உடன் அந்த அதிகாரிகளை விசாரித்ததில்,

அவர்களுடைய கணக்கிலேயே அந்த மாலை இல்லாததைக் கண்டார்.

இதனால் கவலை கொண்ட ராஜாவிற்கு, ஸ்ரீனிவாசன் அவருடைய கனவில் வந்து இவ்வாறு கூறினார். ‘அந்த முத்து மாலையைப் பற்றி கவலை கொள்ளாதே. அதனை, திருமணத்திற்காக உதவி கேட்ட ஒரு வாலிபனுக்கு, என் ப்ரிய பக்தனான ஸ்ரீவிஜயதாசர் கொடுத்திருக்கிறார். அதனை நான் தனியாக அணிந்திருக்கிறேன்’ என்று சொல்லி, அந்த மாலையுடன் காட்சி அளித்தார்.

அந்த பெட்டியிலிருந்து அந்த முத்து மாலையை மட்டும் எடுத்துக் கொடுத்த ஸ்ரீவிஜயதாசரின் யோகசக்தி மற்றும் ஏழை வாலிபனுக்காக அவர் காட்டிய கருணை ஆகியவை மக்களுக்குத் தெரிந்து அனைவரும் வியப்படைந்தனர்.

அக்னியில் சமர்ப்பிக்கட்ட நகையை மறுபடி எடுத்துக் காட்டிய ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் செயலை இது நினைவுக்கு கொண்டு வருகிறது.

19. பண்டரிபுரத்தில் பாண்டுரங்கனின் தரிசனம்

ஸ்ரீதாசர், பண்டரிபுரத்தில் நிலைத்திருந்தபோது ஒரு சம்பவம் நடந்தது. ஒரு நாள் மாலை. தான் தங்கியிருந்த இடத்திலிருந்து சந்தியாவந்தனைக்கு செல்லும்போது, வழியில் பாண்டுரங்கனை தரிசிக்க ஆலயத்தில் நுழைந்தார். தரிசனம் செய்தவாறு அப்படியே தியானத்தில் ஈடுபட்டார். அப்போது ஒரு நான்காம் வர்ணத்தவன் அவர் கண்களில் விழுந்தார். ஏதோ சில வார்த்தைகளை கூறிவிட்டு அங்கிருந்து மறைந்தான். அடுத்த நாள், ஸ்ரீதாசர் அவனைப் பற்றியே சிந்தித்தவாறு, தியானத்தில் இருந்தபோது, பாண்டுரங்கனே குறிப்பில் இவ்வாறு உணர்த்தினார். ‘அந்த நான்காம் வர்ணத்தவனாக வந்து உன்னிடம் பேசியது நானே’. இந்த சமயத்தில் ஸ்ரீதாசர் இந்த சுளாதியை இயற்றினார்.

அந்து நின்ன தருஷனக்கெ ஆர்த்தவுள்ளவனாகி
பந்து ஒந்தெடெயல்லி ஏகாந்ததி
நந்தவாகி குளிது தியான மாடுதலிரெ

மந்தரதர நீனெ பதஜரூபதிந்த
லோஹக்ஷேத்ரனிவாஸ கோவளேஷ
பாஹி பண்டரிராய விஜயவிட்டல ப்ரிய

20. இன்னொரு முறை ஸ்ரீஹரியின் தரிசனம்

ஒரு முறை, ஒரு விலக்ஷணனான (அழகில்லாத) ஒருவன், ஸ்ரீதாசரின் குழுவினருடன் சேர்ந்தான். நாள் முழுவதும் அவர்களுடனேயே இருந்த அவன், இரவில் பிரவசனம் முடிந்த உடனேயே எங்கும் காணப்படாததாக இருந்தான். அடுத்த நாள் ஸ்ரீதாசர் தியானத்தில் இருந்தபோது, பாண்டுரங்கனே அந்த உருவத்தில் தான் வந்ததாக ஸ்ரீதாசருக்கு குறிப்பால் தெரிவித்தான்.

21. முதியவருக்கு கங்கா ஸ்னானம் செய்வித்தது

ஸ்ரீவிஜயதாசர் ஒரு முறை காசி யாத்திரைக்கு புறப்பட்டபோது, சீகலபரவியின் ஒரு முதிய பிராமணன் தன்னுடைய முதுமையின் காரணமாக அவருடன் செல்லும் பாக்கியம் தனக்கு இல்லையே என்று வருத்தப்பட்டார். அவருக்கு தைரியம் கூறிய ஸ்ரீதாசர், அங்கிருந்த திரும்பி வந்தபின், தாம் கொண்டு வந்திருந்த கங்கை நீரினை அவருக்கு அளித்து, கங்கா ஸ்னானத்தின் யோகத்தை அருளினார். அடுத்து, ஸ்ரீதாசர், கங்கையை துங்கைக்கு கொண்டு வந்தபோது, அதில் ஸ்னானம் செய்யும் யோகமும் அந்த முதியவருக்கு கிடைத்தது. அவரது வீட்டில் ஸ்னானத்திற்காக தயார் செய்த இரு குடங்களின் மூலமும் கங்கை வந்து, அந்த பிராமணருக்கு முழுமையான நிம்மதி அளித்தார் ஸ்ரீதாசர்.

மானஸ ஸ்னானம் செய்யும் ஸித்தி உள்ளவர்களுக்கு தேகத்திலேயே கங்கை பிரத்யட்சம் ஆகும் நிலையை சாஸ்திரங்கள் வர்ணிக்கின்றன என்பதை அறிந்தவர்களுக்கு மேல்கூறிய சம்பவங்கள் ஒன்றும் வியப்பினை அளிப்பதில்லை.

இப்படியான மகிமைகள், அபாரமான யோகஸித்தி பெற்ற மஹனீயர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. பகவத் பக்தர்களை, அவர்கள் விரும்பிய இடத்திற்கு, நொடிப்பொழுதிலேயே அழைத்துச்

செல்லும் இத்தகைய ஸித்தி யோக சாஸ்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீதாசர் அத்தகைய மகாமகிமர் என்பது இதிலிருந்து தெரியவருகிறது.

22. மந்திராலயத்தில் வெளிப்பட்ட மகிமை

ஒரு முறை ஸ்ரீதாசர் மந்திராலயத்திற்கு சென்றிருந்தபோது, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பிருந்தாவனத்தின் முன் தியானத்தில் அமர்ந்திருந்தார். நடுவில் ஒரு முறை கண் திறந்தபோது, அவருக்கு பிருந்தாவனமே தெரியவில்லை. மறுபடி தியானத்தில் அமர்ந்தபோது, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் அங்கிருந்து, ஸ்ரீபஞ்சமுகி பிராணதேவரின் தரிசனத்திற்காக சென்றிருக்கும் விஷயம் தெரிந்தது. உடனே, இவரும் தம்முடைய யோகஷக்தியினால் அங்கு சென்று, ஸ்வாமிகளின் தரிசனம் செய்தார்.

அவருடனேயே மறுபடி தாம் தியானத்தில் அமர்ந்திருந்த இடத்திற்கு திரும்பி வந்தார். அப்போது பிருந்தாவனம் மறுபடி அவருக்கு தெரிந்தது. அப்போது அவர் இயற்றிய கிருதியே ‘நோடிதெ குருகள நோடிதெ’. இந்த பாடலில், ஸ்ரீமந்திராலத்தியின் பின்னணி, ஸ்ரீராயரின் பிருந்தாவனத்தின் பெருமை, அதில் ஸ்ரீஆனந்த தீர்த்தர் முதலான குருகளின் சன்னிதானம், ஸ்ரீஹரி - ஸ்ரீராம, நரஹரி, வாஸிஷ்ட கிருஷ்ண, யாதவ கிருஷ்ண என்னும் ரூபங்களால் நிலைத்திருக்கும் விவரம், 700 ஆண்டுகள் காலம் பிருந்தாவனத்தில் இருக்கும் ராயருடைய விசேஷ சன்னிதானம் ஆகியவற்றின் விவரம் ஆகியவை நிரூபிக்கப்பட்டுள்ளன.

23. ஸ்ரீதாசரின் அபாரமான பூத-தயை

ஒரு முறை ஸ்ரீதாசர் காசி க்ஷேத்திரத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த சமயம். வழியில் ஒரு ஆள் அரவமற்ற பிரதேசம். கடும் வெய்யில். எங்கும் தண்ணீர் நிலைகள் காணப்படவில்லை. அங்கு உணவைத் தேடி வந்த ஒரு கழுதை, பசி தாகத்தினால் மயங்கி விழுந்தது. அதைப் பார்த்த உடனேயே, ஸ்ரீதாசர், தாம் காசியிலிருந்து கொண்டு வந்திருந்த கங்கா ஜலத்தை

அந்த கழுதைக்கு குடிக்கக் கொடுத்தார். தாகம் தீர்ந்த அந்த கழுதை திருப்தியுடன் எழுந்து நடந்தது.

இதைப் பார்த்த பக்தன் ஒருவன் இவ்வாறு ஸ்ரீதாசரிடம் கேட்டான். 'பூஜ்யரே, அவ்வளவு சிரமப்பட்டு, கொண்டு வந்த அந்த கங்கா ஜலத்தை அந்த கழுதைக்கு கொடுத்து விட்டீரே? இது நியாயமா?'. அதற்கு ஸ்ரீதாசர் இவ்வாறு பதில் அளித்தார். 'சமஸ்த சராசரங்களிலும் பகவந்தன் நிலைத்திருக்கிறான். அது மக்களோ, மிருகமோ, நாம் செய்யும் சேவை ஸ்ரீஹரிக்கு செய்த பூஜையே ஆகும். கங்கை நீரினை மறுபடி கொண்டு வரமுடியும். ஆனால், கழுதையின் உயிர் போயிருந்தால் மறுபடி கொண்டு வரமுடியுமா?. தேவைப்படுபவர்களுக்கு செய்யப்படும் உதவி, பூஜையைவிட சிறந்தது அல்லவா?' என்றார். கேள்வி கேட்டவர், தலை குனிந்தார்.

ஸ்ரீதாசரின் இந்த நடவடிக்கை 'பண்டிதா: ஸமதர்ஷின:' என்னும் கீதை வாக்கியத்தை நினைவு படுத்துகிறது. ஜடபரத அரசன், வெள்ளத்தில் சிக்கிய மான்குட்டியை காத்தது, இத்தகைய சாஸ்திர தத்வத்தின் பின்னணியிலேயே. அந்த மான்குட்டியின் மேல் அபாரமான பாசத்தை வைத்தது மட்டும், அவனுடைய பிராரப்த கர்மத்தின் பலன் ஆகும். பூத-தயை பாகவத தர்மமே ஆகும். ஸர்வபூத-தயை என்பது, அஷ்டபாவ புஷ்பத்தில் ஒன்று என்பது சாஸ்திரத்தில் சொல்லப்பட்டது. (ஸர்வபூத தயாபுஷ்பம்).

பற்பல மனிதர்களுக்கு செய்யப்படும் சேவை, ஸ்ரீஹரியை விசேஷமாக பூஜிக்கும் விசேஷ சாதனை ஆகிறது என்பது ஸ்ரீமதாசார்யரின் வாக்கே ஆகிறது. நானாஜனஸ்ய ஷுஷ்ரூஷா கர்மாக்யா கரவன்மிதே: | .. தஸ்ய பிராண்யுபகாரேண ஸந்துஷ்டோ பவதி ஈஷ்வர: || (கீதா தாத்பர்ய நிர்ணய).

24. ஸ்ரீதாசரின் நைவேத்யத்தின் மகிமை

ஒரு முறை ஸ்ரீதாசர் சஞ்சாரத்தை செய்து கொண்டிருந்தபோது, வழியில் ஒரு விசேஷ உற்சவம் தென்பட்டது. கேட்டபோது, அது அந்த ஊர் மக்கள் கோபாலதாசருக்கு செய்யும் மரியாதை நிமித்த ஊர்வலம் என தெரிந்தது. சிஷ்யனின் வைபவத்தை பார்ப்பதற்கு,

ஸ்ரீதாசர் தாமே அங்கு சென்றார். குருகளைக் கண்ட பாகண்ணன், அவரை மரியாதையுடன் விழுந்து வணங்கினார். விஷயத்தை அறிந்த மக்களுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. ஸ்ரீதாசர் பிராணதேவரின் கோயில் ஒன்றில் தங்கியிருந்து, தம் பூஜை, நைவேத்தியங்களை முடித்து உணவு உண்டார். கோபாலதாசருக்கு தனியாக கொஜ்ஜு மட்டும் அனுப்பி வைத்தார். தம் உணவில் அதனை சேர்த்துக் கொண்ட கோபாலதாசர், அதன் சுவையைக் கண்டு மெய் மறந்தார். பெயருக்கு அது கொஜ்ஜு எனப்பட்டாலும், தாம் இதுவரை உண்ட அனைத்து பதார்த்தங்களையும்விட சுவையாக இருந்தது என்று அறிந்தார். இதனை மக்களுக்கு விவரித்த பாகண்ண, அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடு இணையே இல்லாததாக ஆனது. நைவேத்தியத்தின் மகிமையை, இவ்வாறு செயல்களின் மூலம் மக்களுக்கு தெரிவித்தார்.

25. ஸ்ரீதாசரின் சிஷ்ய வாத்ஸல்யம்

ஸ்ரீபாதராஜரைப் போல, ஸ்ரீகோபாலதாசரும் விசேஷ வைபவ வாழ்க்கைக்கு புகழ் பெற்றவர். அவருக்கு பற்பல இடங்களில் விதம்விதமான சன்மான விழாக்கள் நடைபெற்று வந்தனவாம். இதனை சிலர் ஸ்ரீதாசரிடம் சொல்லி, இதற்கான காரணத்தை விளக்குங்கள் என்று கேட்டபோது, ஸ்ரீதாசர் இவ்வாறு கூறினாராம்: 'ஆம், பாகண்ண என்னுடைய உற்சவமூர்த்தியைப் போல. இதனால் நமக்கு மிகுந்த பெருமை'. ஸ்ரீதாசரின் பெருந்தன்மைக்கு மக்கள் மகிழ்ந்தனர். ஸ்ரீகோபாலதாசர் குருகளுக்கு ஏற்ற சிஷ்யர். இந்த பேச்சு அவர் காதில் விழுந்தபோது, அவர் அதிக பக்தியுடன் இவ்வாறு கூறினாராம். 'ஆம், அவர் என்னுடைய மூலமூர்த்தி'.

29. பௌராணிகனின் ஸ்வரூபத்தை தெரிவித்தது

ஒரு முறை ஆதவானியில் புராண நிகழ்ச்சி ஒன்று நடந்தது. புகழ் பெற்ற புராணிகர் ஒருவர் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு ஸ்ரீவிஜயதாசர், தம் சிஷ்யர்களுடன் அங்கு வந்தார். அன்றைய புராண விஷயம் 'முக்தியில் விதவிதமான ஜீவஸ்வரூபத்தின் நிலைகள்'. கடைசியில், ஸ்ரீதாசரைப் பற்றி கேள்விப்பட்டிருந்த அந்த புராணிகர், முக்தியில் தம்முடைய

ஸ்வரூபம் எது என்று அறிய விரும்பினார். ஸ்ரீதாசரின் ஆணைப்படி பதில் அளித்த கோபாலதாசர் 'காக்கை' என்றார். இதைக் கேட்டவுடன், ஆசார்யரின் முகத்தில் வாட்டம் தென்பட்டது.

இதைக் கண்ட ஸ்ரீதாசர் 'ஆசார்யரே. முக்தியில் ஸ்வரூப எதுவாக இருந்தாலும், அதற்கு கவலைப்பட தேவையில்லை. அவை அப்ராக்ருதமானவை. ப்ராக்ருத தேகத்தின் எந்தவொரு தோஷமும் அதற்கு இருப்பதில்லை. பாகண்ணன் கூறியதைப் போல, நீங்கள் முக்தி அடைவது நிச்சயம் என்றானால், அதற்கு மகிழ்ச்சிதானே அடையவேண்டும்?'. முக்தி ஸ்வரூபத்தைப் பற்றிய அதிக விவரங்களை ஸ்ரீதாசர் அப்போது அவருக்கு விளக்கினார். இந்த விஷயம், தந்தெ கோபாலதாசரின் 'பதுகி பஜிஸிரோ' என்னும் கீர்த்தனையில் வந்திருக்கிறது.

த்விஜனு விஜயராயர தன்ன நிஜஸ்வரூபத கேள்தனு |
ஸுஜனஷிரோமணி முக்தியலி நீ காக நிஜவெந்து பேள்தனு |
நுடித வசனவ கேளி விப்ரனு மிடுகிதனு பலு மனதலி
ஸடகரதி குருவிஜயராயரு த்ருடவலிது நிஜவெனுதலி ||

27. கஷ்டப்படுபவளுக்கு அருளியது

ஸ்ரீதாசர் சிப்பகிரியில் இருந்தபோது இன்னொரு சம்பவம் நடந்தது. ஒரு முறை ஒரு விதவைப் பெண், தூரத்திலிருந்தே ஸ்ரீதாசரை வணங்கி, தனக்கு அருளுமாறு வேண்டினார். அவள் பிராமண ஸ்த்ரீயளாக இருந்தாலும், பிற ஜாதியினருடன் தொடர்பு வைத்து, தன் குலத்திலிருந்து விலக்கப்பட்டவள். பிறகு, அவளின் கணவன் இறந்துவிட, அவள் அனாதை ஆனாள். தன் பாவத்தின் பலனால் இவை நடந்தன என அவள் சுய பரிதாபம் கொண்டாள். இதற்கான பரிகாரத்தினை விரும்பி ஸ்ரீதாசரிடம் வந்திருந்தாள். கருணாளுவான ஸ்ரீதாசர் அவளுடைய அதித்வத்தை ஏற்றுக் கொள்ள நினைத்தார். அவள் கொடுக்கும் பதார்த்தங்களால் உணவு தயார் செய்து, ஸ்வாமிக்கு சமர்ப்பிக்க முடிவு செய்தார். பிறகு ஒரு நாளில், ஸ்ரீதாசரின் மனைவி அரளம்மா அந்த சமையலை செய்தார். சித்ராஹுதி, பிராணாஹுதிகளுக்கு தேவையான அளவிற்கு மட்டும் ஏற்றுக்கொண்டு உணவினை முடித்தார்.

பிறகு அந்த பெண்ணை அழைத்து, அவளை தீர்த்தம் எடுத்துக் கொள்ளக் கூறினார். போஜன சேஷத்தை அவளுக்குக் கொடுத்தார். போஜனத்தை முடித்த அவள், இன்னொரு முறை ஸ்ரீதாசரை வணங்கி, தன் நன்றியினை தெரிவித்து, உடனே தன் உயிரை நீத்தாள். தாசரின் ஆணைப்படி அவளின் இறுதிக் காரியங்கள் நடந்தேறின. அவள் நற்கதிக்குச் செல்லுமாறு அருளினார். அவள் முதலில், சாபத்தைப் பெற்ற அப்சரஸ் பெண்ணாக இருந்தாள். ஸ்ரீதாசரை வணங்கி, அவள் தன்னுடைய பாவங்களிலிருந்து விடுபட்டாள். அவளின் வாழ்க்கை அனைவருக்கும் ஒரு பாடமாக இருந்தது.

28. ஸ்ரீஸத்யபோத தீர்த்தர்

ஸ்ரீதாசரை ஆராதிக்கும் மக்களைப் போல, தூஷிக்கும் மக்களும் இருந்தனர். ஸ்ரீஹரி வாயுகளை எதிர்க்கும் எண்ணிக்கையே அதிகமாக இருக்கும்போது, இன்னும் ஸ்ரீதாசரின் த்வேஷிகள் இருப்பதில் வியப்பு எதுவும் இல்லை. ஸ்ரீதாசரின் ஆளுமையை குறைப்பதற்கு காத்திருந்த அவர்கள், மேற்கண்ட சம்பவத்தை பயன்படுத்திக் கொள்ள முயன்றனர்.

அந்த காலத்தில் ஸ்ரீஉத்தராதி மடத்தின் பீடாதிபதியாக இருந்த ஸ்ரீசத்யபோத தீர்த்தரிடம் ஸ்ரீதாசரைப் பற்றியும், அவருடைய செயல்களைப் பற்றியும் தவறான அபிப்பிராயத்தை கூறினர். ஆனால், ஸ்ரீசத்யபோதருக்கு ஸ்ரீதாசரைப் பற்றிய விஷயங்கள் ஏற்கனவே தெரிந்திருந்தது. ஆனால், துஷ்டர்களுக்கு புத்தி கற்பிக்கும் விதமாக, அவர் ஸ்ரீதாசருக்கு ஒரு பஹிஷ்கார பத்திரத்தை எழுதிக் கொடுத்தார்.

அடுத்து ஒரு முறை, ஸ்ரீசத்யபோதரின் திக்விஜயம், சிப்பகிரிக்கு வந்தது. ஸ்வாமிகளைப் பார்க்க வந்த ஸ்ரீதாசர், அவருடைய பஹிஷ்கார பத்திரத்தை மதித்து, தூரத்திலிருந்தே அவரை வணங்கினார். அப்போது ஸம்ஸ்தான பூஜை நடந்து கொண்டிருந்தது. அப்போது சமையலறையிலிருந்து கஞ்சி வெளிவந்து கொண்டிருந்தது. அதனைக் கண்ட ஸ்ரீதாசர், உடனே

கிருஷ்ணார்ப்பண என்றார். அடுத்து, நைவேத்ய காலத்தில் அந்த அன்னம் ஏற்கனவே நைவேத்தியம் செய்யப்பட்டது என்பதை ஸ்ரீசத்யபோதர் தம் ஞானத்ருஷ்டியினால் கண்டுகொண்டார். அது ஸ்ரீவிஜயதாசரின் செயல் என்பதையும் அறிந்தார். அவருடைய மானஸபூஜையின் ஸித்தி ஸ்ரீசத்யபோதருக்கு மிகவும் பிடித்தது. உடனே அதனை மக்களுக்கு விவரித்து, பஹிஷ்கார பத்திரத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு சன்மான பத்திரத்தை கொடுத்து ஆசிர்வதித்தார்.

உடுப்பியில் ஸ்ரீகனகதாசர்கூட இவ்வாறே ஸ்ரீகிருஷ்ணனுக்கு கஞ்சியை சமர்ப்பித்தபோது ஸ்ரீவாதிராஜரால் பாராட்டப்பட்ட விவரம் நாம் அறிந்ததே. ஸ்ரீசத்யபோதர், அந்த பெண்ணைப் பற்றிய விவரங்களை கேட்டபோது, ஸ்ரீதாசர் அவளின் பின்னணியை சொல்லி, ஸ்ரீஹரியின் ஆணைப்படி தாம் அவளை அருளியதாகவும் கூறினார். எந்த நிலையிலும் தர்மசாஸ்திரத்திற்கு எதிராக நடக்காத ஸ்ரீதாசரின் செயல்களைக் கண்டு , முன்பு அவரைப் பற்றி தவறான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்த மக்கள் தலை குனிந்தனர். ஸ்ரீவிஜயதாசர் சத்யபோதரைக் குறித்து 'மதிஸி பேடுவெ வரவ கரவ முகிது' என்னும் கிருதியை இயற்றியதை இந்த சமயத்தில் சிந்திக்க வேண்டும்.

29. ஏழையின் ஏழ்மையை பரிகரித்தல்

ஸ்ரீதாசர் மாதக்கணக்கில் உடுப்பியில் தங்கியிருந்தார். அவரைப் பற்றி முன்னரே அறிந்திருந்த அஷ்ட மடாதீஷர்களும், அவரை விசேஷமாக கௌரவித்தனர். தினமும் அவர் மூலமாக பகவத் மகிமைகளை விளக்கும் கதாசிரவணத்தை சொல்ல வைத்து மகிழ்ந்தனர். மகாஞானிகளான ஸ்ரீதாசரின் பக்திபாவம் அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஸ்ரீதாசர் அங்கு இருந்தபோது, ஒரு ஏழை பிராமணன் அவரிடம் வந்து வணங்கி, தன் ஏழ்மையை பரிகரிக்கும் விதத்தை கேட்டான். உடனே ஸ்ரீதாசர் அவருக்கு தைரியத்தை சொல்லி, ஒரு கீர்த்தனையை இயற்றி ஸ்ரீஹரியை அதன் மூலம் பிரார்த்திக்குமாறு கூறினார். அதனை தினமும் படித்த அந்த

பிராமணன், தன் ஏழ்மையை போக்கிக் கொண்டு சுகமாக வாழ்ந்தான். தாசரின் கிருதிகளின் ஸித்திக்கு இதுவே மிகச்சிறந்த உதாரணம் ஆகும்.

ஸம்பத்து நினகிந்து பொஸதாயிதெ
ஸிம்பினலி பாலு குடிதது மரெதெயா ரங்கா

30. ஸ்ரீவிஜயதாசரின் மதுகரவ்ருத்தி

ஸ்ரீவிஜயதாசர் தம் குழுவினரை மிகவும் அன்புடன் பார்த்துக் கொண்டிருந்தார் என்னும் விவரத்தை ஸ்ரீகோபாலதாசர் பாடியிருக்கிறார்.

ஸதாசாரஸம்பத்து மதுகரவ்ருத்தியு
விதியல்லி விஜயராயா |அய்ய
கதன்ன உண்டரியெவோ சிஷ்யஜனஸங்க
ஸதாகால விஜயராயா ||
நித்யான்னதான புத்ரோத்ஸவகளனித்தி
ஸத்ய ஸ்ரீவிஜயராயா |அய்ய --ஸ்ரீகோபாலதாசர்

பரதத்வ விசார பரம நிஷ்டர ஸங்க
பரிபரிய ஸுகர்ம பரிணாமவு
பரவாதிகள துச்சீகரிஸி அவருக்திகள
ஹரியெ ஸர்வோத்தமனெந்தரிது பாள்வந்த |
பூஸுரர ஸேவே பூ யாத்ரி தானதர்ம
க்ராஸ உணவுடுவோது லேஸு எல்ல
வாஸுதேவன குணகளாஷெயலி கேளுத
க்லேஷ தட்டதெ ஹரி உபாஸனெய மாள்பந்த ||

ஞானிகளிந்த மானக்ஷோணியொளகெ யஷஸ்ஸு
ஹீனஜனரிகெ தைன்யவன்னு படதெ
பந்துஜனஸந்தணி சந்துள்ள ஆபரண
நந்ததி உடுகோரெ உத்ஸாஹவு
இந்திரேஷன ஸ்தோத்ரதிந்தலெ தினவனு
ஒந்து களிகி மரெயதந்ததலி ஈவந்த || -- ஸ்ரீகோபாலதாசர்

அவனிய மேலின ஸஞ்சார பரோபகார குணஸாகர
கவிகள காணுத அவரிகெ பலு உபசரிஸி பஹூ ஆதரிஸி |
கவகவனகுதலி தீனஜனங்கள நோடி வரகள நீடி
நவ நவ மோஹன ஹரி நாமாம்ருதவுண்ட ஹரிபாதவ கண்ட ||3
-- ஸ்ரீஹயவதன விட்டலதாசர்

ஷிர விப்ரபாததலி எரகிதெ இ
வரங்க திவ்யபோஜன வஸ்த்ர நானா
சாருபந்துகள அனுஸந்தானபூர்வக
நாரிஸங்க ஸர்வஸமர்ப்பணெ ||
-- ஸ்ரீஹயவதன விட்டலதாசர்

இவற்றிலிருந்து தெரிய வருவதைப் போல, ஸ்ரீவிஜயதாசரின் இந்த அனைத்து வைபவமும் மற்றவர்களின் சொத்துகளால் அல்ல. பிறரை நம்பி அல்ல. வெறும் ஹரிதாசருக்கு ஏற்றதான மதுகர வ்ருத்தியினாலேயே. அதாவது, பகவத் பக்தர்கள் தம் கோபாள வ்ருத்தியின் சமயத்தில் சமர்ப்பித்த காணிக்கைகளால் மட்டுமே. அவரே சொல்லியிருப்பதைப் போல, ‘ஸால மாடலி பேட, ஸாலதெந்தெனபேட, நாளிகெ ஹ்யாகெம்போ சிந்தெ பேட’. இத்தகைய அபூர்வ வாழ்க்கையை ஓரிரு நாட்கள் நடத்துவதே கஷ்டம் என்கையில், வாழ்க்கை முழுவதும் இத்தகைய சிறப்பான வாழ்க்கையை ஸ்ரீதாசர் வாழ்ந்தார் என்பது அவருடைய ஸித்திக்கு ஒரு எடுத்துக்காட்டு. இவ்வாறு சிஷ்யர்களுக்கு, மக்களுக்கு, ஸதாசாரத்துடன் வாழுமாறு உபதேசம் செய்வதன் மூலம், அவர் செய்த லோகோத்தாரக மிகவும் மகத்துவபூர்ணமானதாகும்.

31. ஹம்பியில் ஸ்ரீபுரந்தரதாசரின் ஆராதனை

ஒவ்வொரு பிரம்மோத்ஸவத்திற்கும், ஸ்ரீதாசர் திருப்பதிக்கு யாத்திரை செல்வதைப் போல, ஒவ்வொரு ஆண்டும் அவரது தீக்ஷா குருகளான ஸ்ரீபுரந்தரதாசரின் ஆராதனை அவருக்கு ஒரு விரதமாகவே இருந்தது. அதையும்கூட பல ஆண்டுகள், ஸ்ரீபுரந்தரதாசரின் நிர்யாண இடமான ஹம்பியில் செய்து வந்தார். அந்த சமயத்தில் பல நாட்கள்வரை ஹம்பியிலேயே இருந்து, ஞான யக்ஞங்களை செய்து வந்தார். மேலும், அந்த காலத்து

வித்வாம்சர்களை அங்கு அழைத்து அவர்களையும் கௌரவித்து வந்தார்.

துவக்க காலத்தில் பண்டித வர்க்கம், இவரை கன்னட தாசர் என்று சிறிது அகௌரவத்தினால் நடத்தினர். பிறகு ஒரு முறை, பண்டிதர்களின் எதிரில், போஜன சமயத்தில் வாக்யார்த்த நடந்து கொண்டிருந்தபோது, தண்ணீர் பரிமாறுபவரின் கையைப் பிடித்து ஸ்ரீதாசர், அந்த வாக்யார்த்தத்தில் பங்கேற்குமாறு கூறினார். சாதாரண மனிதனான அவன், ஸ்ரீதாசரின் கையைப் பிடித்த உடன், அந்த வித்வாம்சர்களே வியந்து போகும் அளவிற்கு, வாக்யார்த்தத்தில் பங்கேற்றான். ஸ்ரீதாசரின் அபார தபஸ் சக்தியையும், தெய்விக ஞானஸம்பத்தையும், நேரடியாகக் கண்ட பண்டிதர்கள் அன்றிலிருந்து ஸ்ரீதாசரின் தலைமையிலேயே தம் விசார கோஷ்டிகள் நடக்க வேண்டும் என்னும் நிர்ணயத்திற்கு வந்தனர்.

அத்தகைய அபூர்வ மகோத்ஸவத்தைக்கூட ஸ்ரீதாசர், முன்னர் கூறியதைப் போல எந்த செல்வந்தர்களையும் எதிர்பார்க்காமல், வெறும் மதுகர வ்ருத்தியிலேயே செய்து வந்தார் என்பது மிகப்பெரிய சிறப்பே ஆகும். வெறும் போஜன ஏற்பாடுகள் மட்டுமல்லாமல் வித்வாம்சர்கள் திருப்தி அடையும் அளவிற்கு சம்பாவனைகளையும் ஸ்ரீதாசர் கொடுத்து கௌரவம் செலுத்தினார். அதாவது, ஸ்ரீதாசரின் பெருமை எந்த மடாதீசர்களுக்கும் குறைந்ததல்ல.

32. திருமணம் - உபநயன விவரங்கள்

தன்னுடன் இருந்த சிஷ்ய வர்க்கத்தினருக்கு, தக்க காலத்தில் நடக்கவேண்டிய உபநயன, திருமண சம்ஸ்காரங்களை அந்தந்த காலத்தில் செய்து வந்தார் என்பது ஸ்ரீதாசரின் இன்னொரு சிறப்பு. உபநயனத்தால் பிராமண்யத்தின் ரக்ஷணை, திருமணத்தால் வர்ணாசிரம கடமைகளின் சம்ரக்ஷணை இரண்டையும் நடத்தி வந்தார் என்பதை அறியலாம்.

ஹத்தெண்டு மதுவெ முஞ்சிகள மாடிஸி நின்ன ப்ருத்யர பொரித்யோ ராயா || -- ஸ்ரீகோபாலதாசர்

33. ஸ்ரீதாசரின் வைராக்கியம்

ஸ்ரீதாசரின் வாழ்க்கையில் ஒரு முறை இவ்வாறு நடந்தது. என்றைக்கும்போல அன்றும் ஸ்ரீதாசர், துங்கபத்ராவில் ஸ்னானம் செய்து, அதன் அருகில் தனது நித்ய கர்மத்தை செய்து கொண்டிருந்தார். வீட்டில் தாய் கூஸம்மா, மனைவி அரளம்ம ஆகியோரும் தங்களின் தினப்படி வேலைகளில் இருந்தனர். அப்போது ஒரு மங்களகரமான சுமங்கலி ஒருவர் தாசரின் வீட்டிற்கு வந்து இவ்வாறு கூறினார்.

'அம்மா, நான் நாராயணராயரின் மனைவி. இன்று தாசருக்கு உணவிற்கு அழைத்துள்ளோம். ஏனோ அவர் இன்னும் வரவில்லை. வழிபார்த்து நேரமாகி விட்டதால், என் கணவரின் ஆணைப்படி, ஸ்ரீதாசருக்கு கொடுக்க வேண்டியதை கொண்டு வந்திருக்கிறேன்' என்று கூறி அபாரமான திரவியங்களை இறக்கிவிட்டு, அங்கிருந்து மறைந்தார்.

அடுத்து சில மணி நேரத்தில் வீட்டிற்கு வந்த ஸ்ரீதாசரிடம், அரளம்மா, விஷயத்தை சொல்லி, 'உணவிற்கு அழைத்தால் போகாமல் இருக்கக்கூடாது' என்றார். ஆனால் தாசரோ, அன்று அவரை யாரும் அழைக்கவில்லை என்று சொல்லி, அங்கிருந்த பொருட்களைக் கண்டார். உடனே, அவருக்கு அது லட்சுமி நாராயணரின் லீலை என்று புரிந்தது. அத்தகைய பொருட்கள் வந்ததால் அவர் அதிகம் மகிழவில்லை. மாறாக, தன் சாதனைக்கு அது தடையாகிவிட்டது என்ற கவலையில் ஸ்ரீஹரியிடம் இவ்வாறு பிரார்த்தனை செய்தார்.

நீனொலிதுத்தக்கீ இஹ ஸௌக்யவே இன்னு
நானொல்லெ நானொல்லெ ஸர்வேஷ ||ப

நின்னனுராகதி கதியெந்து நம்பித
மானவன கூட மௌனவாகிப்பரெ ||அப

படுரஸ நானா ஸுபோஜனவ
பிடிஸய்யா தானவபஞ்சன
ஒடனொடனெ மொரெயிடுவெ கருணிஸோ
அடிகடிகஞ்ஞான கொடதந்தெ ப்ரதிதின
ஒடலிகோஸுக பொடமட்டு நி
ன்னடிகடிகெ நமிஸிதெ கேளெ
ந்னொடெய த்யானவ பாலிஸி பவ
தடியிந்த கடெகெத்தி நோள்புது ||1

ஜனஜனபரிந்தலி மன்னணெ ஸ்வல்ப
எனகெ ஹத்தது காணோ நின்னாணெ
மனவசன காயதல்லினிது ஸித்தவதெ
அனுவில்ல யோசனெ யாதகெ தேவ
ஜனுமதொளு ஸாதனவிதாயிது
தனகனக வாஹனகளிந்தலி
கனததிகெ ஒந்தினவு ஆதரூ
மனதி நின்னர்ச்சனெய மாடலில்ல ||2

கண்டகண்டலியென்ன திருகிஸி பஹு
தண்ட தண்டதலென்ன மருகிஸி
மண்டலதொளு ப்ரசண்டனெனிஸதிரு
உண்ட பரான்னகெ தண்டனெ பஹளல்லி
தொண்ட நானய்ய கருணஸாகர
கண்டமதியனு கொடதெ முக்தர
ஹிண்டு பக்தர ஸங்கவீவுது
அண்டஜாம்ஸக விஜயவிட்டல

இதன் மூலம் ஸ்ரீதாசர் காட்டிய வைராக்கிய பாவம் மிகவும் அபூர்வமானது. செல்வங்களின் மோகமானது, தத்வஞானத்தின் வழியை மறைக்கும் அபாயம் என்றே சாஸ்திரங்கள் சொல்கின்றன. அதனை வெல்வது என்பது சாத்தியமில்லாத சாதனை. ஸ்ரீதாசரின் இந்த வாக்கினில் அவருடைய நிர்மலமான ஹரிபக்தி வெளிப்படுகிறது.

அவருடைய பிரார்த்தனை முடியும் வேளையிலேயே, அந்த அனைத்து பொருட்களும் அப்படியே மறைந்துவிட்டனவாம். சிறுவயதில் அவருக்கு இருந்த ஏழ்மையானது, அவருடைய இந்த வைராக்கியத்திற்கு எப்படி காரணமாக இருந்தது என்பதை இதிலிருந்து அறிகிறோம்.

34. யமலோகத்தின் பயத்தினை நீக்குமாறு வேண்டினார்கள்

மனிதனுக்கு வயது ஆகும்போது சக்தி குறைகிறது. கண்கள் மங்குகின்றன. காது கேட்பதில்லை. கை கால்கள் வலி, புத்தி மயங்குகிறது. தனிமை அவர்களை வாட்டுகிறது. தினப்படி வேலைகள் கூட மிகவும் கடினமாக இருக்கின்றன. தூக்கம்கூட குறைகிறது. உண்ணவேண்டும் என்று விருப்பம் இருந்தாலும், ஜீர்ண சக்தி குறைந்து, உண்பதற்கும் சங்கடம் உண்டாகிறது. ஆக மொத்தம், ஞானேந்திரிய, கர்மேந்திர்யங்கள் அடங்கிய தேகம், அனைத்து வித பிரச்னைகளிலும் சிக்கித் தவிக்கிறது. அத்துடன் இந்த உலகத்தை விடும் கவலையோ எப்போதும் வாட்டிக் கொண்டே இருக்கிறது. இல்லிரலாரெ, அல்லி ஹோகலாரெ - என்னும் தாசரின் வாணி, அப்படியே பொருந்துகிறது. இப்படியான ஒரு நிலையில் இருக்கும் ஜீவிக்கு ஸ்ரீதாசர் இயற்றிய சுளாதி இவ்வாறு இருக்கிறது.

சிந்தெ வெக்களிஸிது, சின்மாதுர ஸிரி
காந்த நின்னய பாதக்கெ நமோ நமோ
அந்திகாந்திகவாகி, காலபந்திதெ நா
நெந்து உஸுரலி நோடி நோடி
ஸந்தத பாளிதெனோ, ஞான பகுதி மந்த்ர
தந்த்ர வைராக்ய ஆசார விசாரவ
முந்தெ ஸத்கர்ம ஒந்தாதரு எஸகி, ஏ
காந்ததலி நின்ன மெச்சிஸலில்ல
அந்த்யஜகிந்த நானு கனிஷ்டனாகி, ஸ்வா
தந்த்ர்யவெ என்னதெந்து ஹிக்கி ஹிக்கி
ஸந்திதெ அர்த்தகால ஹிந்துகளது பவ
ப்ராந்தியிந்தலி பாபக்கொளகாதெனோ

எந்து மாடலி ஹரியெ, அகடகட இன்னு எனகெ
பிந்தெ போகுவ திவஸ நெனபாகதோ
ஹந்தியா கட்டி தெனியா, துளிஸுவாக, ஸமீப
நிந்த தெனிகெ அவகாஷவுண்டெ?
சிந்திதபலதாய பரம பராகு, ஹே
ஸுந்தரிஸுவ தெய்வ நினகெ நானே
நிந்தல்லி குளிதல்லி மொரெயிடுவெனு நித்ய
அந்தரங்கதொளிப்ப ஸர்வக்ஞனெ
அந்தகன ஸபெயல்லி வர்த்தமான புட்டிதெ
ஸந்தாப களெவராரோ என்னய்யனெ
ஸந்ததி நீனே ஸந்த்ராத நீனெ நிஜ
ஸந்து பாந்தவ நீனெ ஸார ஹ்ருதய
அந்த்யகாலக்கெ நின்ன ஸ்மரணெ மாடுவ ஸாதன
தந்து லேஷவாதரு மனதொளில்ல
எந்தாகுவுதோ ஆ காலக்கெ ஸ்மரணெ நர
காந்தக பவகாந்தாரதஹன
அந்தகாணிஸோ என்ன துரிதகோடிகெ, நி
ரந்தர எணிஸலனேக ஸங்க்யா
சிந்தாரதுன நின்ன கருணவல்லதெ, அ
வந்த, ஸாதன நானா பல கொடுவவு
ஸந்தோஷ மூருதி விஜயவிட்டல ஸக
லந்தர்யாமி ஸ்வாமி பகுதவத்ஸலதேவ ||

இந்த சுளாதி மிகவும் அர்த்தமுள்ளது. மனதிற்கு மிகவும் நிம்மதியைக் கொடுக்கவல்லது.

35. ஸ்ரீவிஜயதாசரின் அபூர்வ நித்ய ஆன்ஹிக

ஸ்ரீகுருவேணுகோபால தாசரின் 'ஸ்ரீவிஜயதாசர ஆன்ஹிகபத்ததி' என்னும் கிருதி ஸ்ரீவிஜயதாசரின் நித்ய ஆன்ஹிகத்தைப் பற்றி விளக்குகிறது.

உதய காலத்தில் ஒரு யாமத்தின் முன்பே எழுவது, கோ-தரிசனத்தை செய்வது, ம்ருத்திகாஷௌச, தந்ததாவன, முக பிரக்ஷாளன, ஸ்ரீதுளசிக்கு தண்ணீர் ஊற்றி நமஸ்காரம், துலஸி

ம்ருத்திகா தாரணம், குருகளுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம், ஸ்னானம், த்வாதச நாம தாரணம், ஸந்த்யாவந்தனம், காலையின் நர்த்தன சேவை, விதம்விதமாக ஸ்ரீஹரியின் ஸ்தோத்திரம், வெறும் ஐந்து வைஷ்ணவர்களின் வீட்டில் கோபாள வ்ருத்தி, யோக்ய வைஷ்ணவரிடமிருந்து மட்டும் பிக்ஷா ஸ்வீகாரம், அதிதிகளை பிக்ஷைக்கு அழைப்பது, நற்சாஸ்திர கிரந்தங்களை படிப்பது, குழுவினருடன் மதிய ஸ்னானம், ஜபாதி ஆன்ஹிகம், பிரம்மயக்ஞ, லட்சுமி சூக்தத்தினால் நிர்மால்ய விசர்ஜனம், ரஜத பீடத்தில் மத்ஸ்ய, கூர்ம, வராஹ, வாசுதேவ, கோபாலகிருஷ்ண, ஹயவதன, லட்சுமி நாராய்ண, ஷட்சக்ர சீதாராம, அனந்தபத்மனாப, ததிவாமன முதலான ஸாலிகிராமங்களின் மற்றும் விஜயவிட்டலனின் பூஜை, வாயுஸ்துதியினால் முக்யபிராணனின் பூஜை, ஜயதீர்த்தரின் பிருந்தாவனத்தின் பூஜை, பிறகு ஸ்வாமிக்கு புருஷ சூக்தத்தினால் மகாபிஷேகம், கந்த அக்ஷதைகளின் சமர்ப்பணம், துளசி சமர்ப்பணம், மல்லிகை, கமல, ஸம்பிகை முதலான புஷ்பங்கள் சமர்ப்பணம், விஷ்ணு சஹஸ்ர நாமாவளியின் படனம், த்வாதச ஸ்தோத்திரம் படித்து அன்ன, பரமான்னாதி பதார்த்தங்களின் நைவேத்ய சமர்ப்பணம், மங்களாரத்தி, ஆரத்திகளின் நடுவில் புஷ்ப சமர்ப்பணம், கற்பூர ஆரத்தி, மந்திர புஷ்ப சமர்ப்பணம், சங்கு பூஜை, பளித்தா ஸூக்தத்தினால் முக்யபிராணனுக்கு பூஜை, தீர்த்த, கந்த அக்ஷதை, துளசி சமர்ப்பணம், ஸனகாதிகளுக்கு நைவேத்தியம், வைஷ்வதேவ, பலிஹரண, ஜயதீர்த்தருக்கு தீர்த்தம், ஹஸ்தோதகம், அங்கார அக்ஷதை சமர்ப்பணம், மத்வவிஜய, மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தின் பாராயணம், சிஷ்யர்களுக்கு பிரம்ம ஸூத்ர, கீதா பாஷ்ய, த்வாதச ஸ்தோத்திரங்களின் பாடம், பிறகு தீர்த்தம், அங்கார அக்ஷதைகளை கொடுத்து அதிதிகளுக்கு போஜனம், பிறகு தம் போஜனம், தாம்பூல சர்வண, மதிய காலத்தில் தினமும் 10 தேவர நாமாக்கள் இயற்றுதல், தத்வ விசார, வேதாதி சாஸ்திரங்களை படித்தல் மற்றும் ஆராய்ச்சி, மாலை நேர சந்தியாவந்தனம், ஜப, ஸங்கீத சேவை, சனகாதிகளின் பரம்பரையின் குருகளின் ஸ்மரணை, ஸத்யபோதருக்கு குரு நமஸ்காரம், புரந்தரதாசருக்கு வந்தனை, ஸ்ரீபாதராஜர், ஸ்ரீவியாசராஜர், ஸ்ரீவாதிராஜர், ஸ்ரீராகவேந்திர குருகளின் விசேஷ கானம், மறுபடி துளசி சரஸ்வதியருக்கு நமஸ்காரம், வாயுதேவரின் மகிமையின் கீர்த்தனை, ஸ்ரீஹரியின்

விசேஷ பஜனை, ஹரிவாண சேவை, தீபாராதனை, நைவேத்ய, ஸ்ரீஹரிக்கு ஷயனோத்ஸவ - என இந்த அனைத்தும் இந்த கிருதியில் சொல்லப்பட்டுள்ளபடி ஸ்ரீவிஜயதாசரின் நித்ய ஆன்ஹிக பத்ததி ஆகும்.

இதிலிருந்து தெரிவதைப் போல, ஸ்ரீவிஜயதாசர், ஸதாசாரத்தை விதிப்படி பின்பற்றும் மிக உன்னதமானவராக இருந்தார். ஸந்த்யாவந்தனம், தேவபூஜை, பிரம்மயக்ஞ, வைஷ்வதேவாதி பஞ்ச மஹாயக்ஞங்கள் முதலான அனைத்து விஹித கர்மங்களையும் அவர் தவறாமல் செய்து வந்தார். அவருடைய நித்ய ஆன்ஹிகத்தில் சாஸ்திர படிப்பு, ஆராய்ச்சி, விவாதம் ஆகியவை அதிகமாக இருந்தன என்பதை இங்கு கவனிக்க வேண்டும். ஸ்ரீஹரிவாயுகளின் ஆராதனை, குரு ஸ்மரணை ஆகியவை நித்யவிதியாக இருந்தது.

இன்றைய நாளில் பலர் தாம் தாச பரம்பரையை சேர்ந்தவர்கள் என்னும் காரணத்தினால், சந்த்யாவந்தனை முதலான நித்ய கர்மங்களையும், ஸதாசாரங்களையும் விட்டுவிட்டு, வெறும் பஜனை மட்டுமே தமது கடமை என்று சொல்லி, சாஸ்திர அத்யயனம், பாராயணங்கள் ஆகியவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. ஆனால், உண்மையான தாச பரம்பரையானது, வியாச பரம்பரைக்கு வேறுபட்டது அல்ல என்பது இந்த ஸ்ரீதாசரின் நித்ய ஆன்ஹிகத்திலிருந்து தெரிய வருகிறது. உண்மையான ஹரிதாசர்கள் அனைவரும், ஸ்ரீவிஜயதாசரின் இந்த ஆன்ஹிக பத்ததியை பின்பற்றி, ஸ்ரீஹரிதாசர்களின் கிருதிகளின் அத்யயனத்துடன், சர்வமூல கிரந்தங்களின் அத்யயனத்திலும் ஈடுபட வேண்டும் என்பதை நிரூபிக்கிறது எனப்தை அறிய வேண்டும்.

இந்த கிருதியில் விஜயதாசரிடம் இருந்த ஸ்ரீவாசுதேவ முதலான பல சாலிகிராமங்களின் விவரம், அவரிடம் இருந்த ஸ்ரீஜயதீர்த்தரின் பிருந்தாவனம் ஆகிய விஷயங்கள் வந்திருப்பது கவனிக்க வேண்டும்.

சிப்பகிரி க்ஷேத்திரத்தில் ஸ்ரீதாசர்

சிப்பகிரி, ஆந்திராவில் கர்னூல் ஜில்லாவில் குண்டக்கல் ஜங்க்ஷனிலிருந்து 6-7 கிமீ தூரத்தில் இருக்கும் இடம். புராணத்தில் இது பாஸ்கர க்ஷேத்திரம் என்று குறிப்படப்பட்டுள்ளது. சூரிய தேவன் இங்கு தவம் செய்ததால் இதற்கு இந்தப் பெயர். போகேஷ்வர மற்றும் சென்னகேஷவ ஆலயங்கள் ஆகியவை இங்கு உள்ளன. ஒரு காலத்தில் இங்கு ஜைனர்கள் அதிகம் இருந்ததாக தெரிகிறது.

இந்த பவித்ர க்ஷேத்திரத்தில் ஒரு முறை, மாந்திரீகங்கள் செய்பவர்கள் அதிகம் இருக்கலாயினர். அங்கிருந்த மக்கள், அவர்களை எதிர்க்கவும் முடியாமல், அங்கு வாழவும் முடியாமல் தவித்தனர். ஊர் மக்கள் சிலர் ஸ்ரீவிஜயதாசரிடம் சென்று, தங்களின் பிரச்னைகளை சொல்லி, தம்மை காக்குமாறு வேண்டினர். கருணாளுவான ஸ்ரீதாசர், உடனே இந்த பிரச்னைகளை தீர்ப்பதற்காக சிப்பகிரி வந்தார்.

தினமும் சூர்ய தீர்த்த என்னும் புஷ்கரிணியில் ஸ்னானம் செய்து, போகேஷ்வர தேவாலயத்தில் தங்கியிருந்து, விசேஷ தியானம் செய்தார். ஊரில் கோபாள செய்து கொண்டு, தமது கந்தர்வகான மற்றும் தத்வோபதேசங்களால் ஸாத்விக சிந்தனையை பரப்பினார். ஸ்ரீஹரியின் மகிமையையும், ஸதாசாரத்தின் பெருமையையும் விளக்கினார். அதன் பலனாக, அங்கு அந்த மாந்திரீகர்களின் செயல்கள் குறையத் தொடங்கின. பிறகு, நாளடைவில், அத்தகைய மாந்திரீகர்களில் சிலர் மனமாற்றம் அடைந்து, ஸ்ரீவிஜயதாசரின் சிஷ்யர்களாகவே மாறினர். வேறு சிலர் அந்த ஊரிலிருந்து வெளியேறினர். இப்படியாக, சிப்பகிரியும் ஸ்ரீவிஜயதாசரின் இன்னொரு கார்யக்ஷேத்திரமாக மாறியது. திருப்பதி முதலான யாத்திரைகளுக்கும் அவர் அங்கிருந்தே சென்றுவரத் தொடங்கினார்.

தங்குவதற்கு வசதியில்லாத அந்த ஊரில், போகேஷ்வர ஆலயமே ஸ்ரீதாசரின் இருப்பிடம் ஆயிற்று. போகேஷ்வரனின் கோயிலில் ஒரு தூணில் ஸ்ரீபிராணதேவரின் உருவமும் இருந்ததால், அது

வெறும் சிவன் கோயிலாக இல்லாமல், வைஷ்ணவர்களுக்கும் தக்கதாகவே இருந்தது. 'கைலாஸவாஸா கௌரீஷ ஈஷ, தைலதாரெயந்தெ மனஸு கொடே ஹரியல்லி ஷம்போ' என்னும் தாசரின் புகழ்பெற்ற கிருதி இயற்றப்பட்டது இந்த போகேஷ்வரனைக் குறித்தே என்று சொல்கிறார்கள்.

ஸ்ரீதாசரின் வருகையின் நோக்கம் வெற்றிகரமாக முடிந்தது. மக்கள் அனைவரும் அவருக்கு தங்களின் நன்றியுடனான நமஸ்காரங்களை சமர்ப்பித்தனர். சூரியன் தவம் செய்த குகைக்கு அருகில், சூர்ய சக்கரம் ஒன்று இருக்கிறது. அங்கு அமர்ந்து தியானம் செய்வது ஸ்ரீதாசரின் நித்யகர்மமாக இருந்தது. இந்த க்ஷேத்திரத்தின் சிறப்பினை அறிந்தபின், இங்கிருந்து கிளம்பும் மனமே ஸ்ரீதாசருக்கு வரவில்லை. அப்போது ஒரு விசித்திர சம்பவம் நடந்தது.

ஸ்ரீவேணுகோபால விக்ரகம் கிடைத்தது

சிப்பகிரியில் இருந்தபோது, ஒருமுறை ஸ்ரீவிஜயதாசர் மாலை நேர சந்தியாவந்தனைக்காக போகேஷ்வர தேவஸ்தானத்தின் கிழக்கில் இருந்தார். 'ஸாயம்ஸந்த்யா பஹிர்ஜலே' என்பதே சாஸ்திர விதியாக இருக்கிறது. அதன்படி அங்கிருந்த ஒரு சிறிய குட்டையில் தினமும் மாலையில் சந்தியாவந்தனம் செய்யத் துவங்கினார். இதனை கவனித்த அங்கிருந்த சந்தப்ப என்பவன், ஸ்ரீதாசரை வணங்கி இங்கு வந்து சந்தியாவந்தனம் செய்யும் காரணத்தை கேட்டான்.

அப்போது ஸ்ரீதாசர் இவ்வாறு கூறினார். 'இந்த குட்டையில் நமது ஸ்வாமி இருக்கிறார். இது வெறும் குட்டை / கிணறு அல்ல. புண்ய தீர்த்தமே ஆகும் - என்றார். அவனுக்கு வியப்பு உண்டாயிற்று. பலமுறை வறண்ட அந்த இடத்தில் எந்தவொரு விக்ரகத்தையும் அவன் இதுவரை கண்டிருக்கவில்லை. ஆனால், இத்தகைய மகானின் வாக்கினையும் அவனால் நம்பாமல் இருக்கமுடியவில்லை.

உடன் தாசர் ஒரு இடத்தைக் காட்டி, 'அங்கு தோண்டிப் பாருங்கள். நம் ஸ்வாமி அங்கு இருக்கிறார்' என்றார். அவனும் அவர்களின் ஆட்களுடன் அந்த இடத்திற்கு வந்து, தோண்டத் துவங்கினான். சிறிது நேரத்திலேயே அவர்களுக்கு அழகான ஒரு வேணுகோபாலஸ்வாமி விக்ரகம் கிடைத்தது. அதனைக் கண்ட அவர்களுக்கு, வியப்பு, மகிழ்ச்சி. ஸ்ரீதாசரின் திவ்ய ஞானதிருஷ்டியை நினைத்து மகிழ்ந்தனர். அந்த விக்ரகத்தை பிரதிஷ்டாபனை செய்யும் பொறுப்பினை சந்தப்பா ஏற்றான். அதன் நிரந்தர பூஜைக்காக தனது சொத்திலிருந்து ஒரு பாகத்தை எழுதி வைத்தான். தாசரின் ஆணைப்படி அந்த குட்டையை மேலும் பெரிதாக்கினான். ஸ்ரீதாசரின் மகிமைக்கு ஆதாரமாக அது 'விஜயதீர்த்த' என்றே பெயர் பெற்றது.

ஒரு முறை ஸ்ரீதாசரின் ஆணைப்படி, அங்கேயே அருகில் இன்னொரு இடத்தில் தோண்டச் செய்தால், அங்கு அபாரமான புதையல் ஒன்று கிடைத்தது. அது சந்தப்பனின் முன்னோர் வைத்த புதையல் என்று தெரிய வந்தது. ஸ்ரீதாசருக்கு செய்த சேவையின் பலனை சந்தப்ப பெற்றான் என்றே சொல்ல வேண்டியதாயிற்று. 'தானம் த்ருவம் பலதி பாத்ரகுணானுகூல்யாத்'.

ஸ்ரீதாசரின் வைகுண்ட யாத்திரை

யுவ நாம சம்வத்ஸரத்தின் பிரம்மோத்ஸவமே, ஸ்ரீவிஜயதாசரின் கடைசியான திருப்பதி யாத்திரையாக இருந்தது. அந்த விஷயம் அவருக்கும் தெரிந்தே இருந்தது. அங்கிருந்து சிப்பகிரிக்கு வந்த ஸ்ரீதாசர், தம் சிஷ்யர்களுக்கு விசேஷமாக தத்வோபதேசத்தை செய்தார். அவரைவிட முன்னரே, அவருடைய மனைவி அரளம்மா இவ்வுலகை விட்டிருந்தார். சிப்பகிரிக்கு வந்த ஸ்ரீதாசர், தன்னை அருளவேண்டும் என்று சந்தப்பா வேண்டினான். முன்னர், ஸ்ரீதாசரின் அருளால் ஆஸ்விஜ பகுள தசமியன்று அவனின் சுகமரணமும் ஆயிற்று. 'அனாயாஸேன மரணம்' என்று சாத்விகர்களின் மரணத்தைப் பற்றி சாஸ்திரம் சொல்கிறது. ஸ்ரீவிஜயதாசர் போன்ற ஞானிவரேண்யரின் சங்கம், அவனின் வாழ்க்கையையே அர்த்தமுள்ளதாக ஆக்கியது. அவன்

விமானத்தில் அமர்ந்து, ஸ்வர்க்கத்திற்கு சென்றதை சிலர் பார்த்தனர்.

ஸ்ரீதாசர் அவதரித்து அப்போது 73 ஆண்டுகள் ஆகியிருந்தன. அன்று கார்த்திக சுக்ல தசமி நாள். வழக்கம்போல, ஸ்ரீதாசர் காலை ஆன்ஹிகத்தை, தேவபூஜாதிகளை நிறைவேற்றினார். அங்கிருந்தவர்களிடம், தாம் இவ்வுலகை விட்டு நீங்கும் நேரம் வந்திருக்கிறது என்பதை உணர்த்தினார். விஜய தீர்த்தத்தின் அருகில் உள்ள ஒரு இடத்தை தன் இறுதிக் காரியங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு தன் சிஷ்யர்களிடம் கூறினார். தான் தயார் செய்த கட்டெயின் அருகில், தர்ப்பாசனத்தில் அமர்ந்து, சிஷ்யர்களுக்கு அருளுரை வழங்கினார்.

ஸ்ரீமன் மத்வாசார்யரின் மதமே மதம். ஸ்ரீஹரியே சர்வோத்தமன். ஸத்ஸித்தாந்தத்திற்கு கேடு வராமல் வாழ்வதே வாழ்க்கையின் பொருள், ஸ்ரீஹரிகுருகளின் பக்தியே முக்கிய சாதனம், மக்களின் நலனே ஜனார்த்தனின் மகாபூஜை ஆகிய முக்கிய பிரமேயங்களை சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்தார்.

ஸ்ரீபாகண்ண, கல்லூர் சுப்பண்ணாசார்யர், ஸ்ரீமோகனதாசர், ஸ்ரீஜகன்னாததாசர் முதலான ஸ்ரீதாசரின் முக்கிய சிஷ்யர்கள் அனைவரும் அங்கு இருந்தனர். ஸ்ரீஜகன்னாததாசரை அழைத்து, தமக்கு கிடைத்த விஜயவிட்டல பிரதிமையை அருளினார். ஸ்ரீமதாசார்யரின் சித்தாந்தத்தையே பின்பற்றுமாறு அனைவருக்கும் உபதேசம் செய்தார். தியானத்தில் அமர்ந்தார். அப்போது இன்னொரு முறை விஜயவிட்டலன், ஸ்ரீபுரந்தரதாசரின் ரூபத்தில், சந்திரனைப் போல காட்சி அளித்தான். அந்த ஆனந்தமான சூழ்நிலையில் அவரிடமிருந்து ‘தாஸபுரந்தரன பாதவனு பொந்திதெனு’ என்னும் அவருடைய வாழ்க்கையின் ஸார ரூபமான சுளாதி வெளிப்பட்டது.

தாஸ புரந்தரன பாதவனு பொந்திதெனு
ஏஸு ஜன்மத புண்யராஷி பலிஸிதோ எனகெ
காஸிகாகதவனு ஸாஸிரகெ பெலெயாதெ
ஸூஸுவ பகுதியல்லி ஸ்ரீஷன நாம பீ

யூஷவன்னுண்டெனோ உசித ஸாதனதிந்த
லேஸாகி புரந்தரதாஸரன பாலிஸித
ஸாஸிரபாத நம்ம விஜயவிட்டலன்ன
தாஸர தாஸனாதெ தோஷ விரஹிதனாதெ ||1

அவர் மறுபடி கண் திறக்கவில்லை. பரமாத்ம விஜயவிட்டலனின் பாதங்களை அடைந்தார். ஹரிதாச சாகித்யத்தில் மிகச்சிறந்த சாதனை புரிந்த திவ்ய சேதனர், ஹரிலோகத்திற்கு சென்றார்.

ஸ்ரீமோகனதாசர், ஸ்ரீஆனந்ததாசர் ஆகிய தாஸ வர்க்கத்தவர்கள், ஸ்ரீதாசரின் இன்மையை தாங்க முடியாமல் துக்கப்பட்டனர். அவருடைய ஆணைப்படியே அந்த கட்டெயின் மீது, அவருடைய தேகத்தினை, அக்ன்யந்தர்கத ஸ்ரீபரசுராம ரூப பகவந்தனுக்கு சமர்ப்பணம் செய்தனர். ஸ்ரீதாசரின் தம்பியான ஆனந்ததாசரால் இறுதி காரியங்கள் நடந்தேறின. ஸ்ரீதாசரின் இறுதி காலத்தின் விவரங்களை அவருடைய தம்பியான ஆனந்ததாசர், வளர்ப்பு மகனான ஸ்ரீமோகனதாசர், மற்றும் தாஸ ஸ்ரேஷ்டரான ஸ்ரீஜகன்னாததாசர் ஆகியோர் தங்களின் பதங்களில் பாடினர். ஸ்ரீவிஜயதாசரின் சிப்பகிரியின் சாதனா பூமி இன்றும் ஸ்ரீவிஜயதாசரின் கட்டெ என்று புகழ்பெற்று, வைஷ்ணவர்களின் பவித்ர தீர்த்தக்ஷேத்திரங்களில் ஒன்றாக இருக்கிறது.

ஸ்ரீவிஜயதாசரின் கட்டெ

ஸ்ரீவிஜயதாசரின் தேகத்தின் சம்ஸ்காரங்கள் நடந்த இடத்திலேயே ஸ்ரீமோகனதாசர் முதலான அவருடைய சிஷ்யர்கள் ஒரு கட்டெயை கட்டி, பூஜித்தனர். அடுத்து மோகனதாசரும்கூட சிப்பகிரியிலேயே பரலோக யாத்திரை செய்தபிறகு, விஜயதாசரின் கட்டெக்கு அருகில், கிழக்கு பக்கத்தில் அவருடைய தேக சம்ஸ்காரங்கள் ஆயின. அந்த இரண்டு கட்டெகளையும் சேர்த்து, அதன் மேல் கோயில் கட்டினர் - என்று சிலர் சொல்வதுண்டு.

ஆனால், ஸ்ரீவிஜயதாசர் வேணுகோபாலனின் விக்ரகத்தை பிரதிஷ்டை செய்த இடத்திலேயே அவர் தியானத்தில் அமர்ந்தார் என்றும், அந்த இடத்தில் கட்டப்பட்ட கட்டெயே, ஸ்ரீவிஜயதாசரின்

கட்டெ, என்று ஸ்ரீமோகனதாசரின் வம்சத்தவர் சொல்கின்றனர்.ஆண்டுதோறும் ஆராதனாதி உற்சவங்கள் அங்கு நடைபெறத் துவங்கின. மோகனதாசருக்கு அது முக்கிய கடமையாகவே ஆனது. அடுத்து ஆண்டு 1812 ஜ்யேஷ்ட சுத்த பஞ்சமியன்று அவரும் அங்கேயே வைகுண்ட யாத்திரையை செய்தார். அவருடைய விருப்பப்படி, ஸ்ரீவிஜயதாசரின் கட்டெயின் அருகில் கிழக்கு பக்கத்தில் அவருடைய தேக சம்ஸ்காரம் நடந்தது.

ஸ்ரீகுருவிஜயவிட்டல என்று பெயர் பெற்ற ஸ்ரீமொதலகல்லு சேஷதாசர்; அவர் ஹரிதாச தீக்ஷை பெறும் முன்னர், ஸ்ரீவிஜயதாசரின் கட்டெ அருகில் ஓராண்டு காலம் சேவை செய்தார். ஸ்ரீதாசரின் கட்டெயின் மேல் அந்த கோபாலகிருஷ்ணனை பிரதிஷ்டை செய்தார். அவருடைய சேவையின் பலனாக ஒரு நல்ல நாளில் ஸ்ரீவிஜயதாசர் அவருக்கு தரிசனம் அளித்து, ஸ்ரீகுருவிஜயவிட்டல என்னும் அங்கிதத்தைக் கொடுத்து உபதேசம் செய்தார். அன்றிலிருந்து அவர் ‘குருவிஜயவிட்டல தாசர்’ என்று பெயர் பெற்றார்.

ஸ்ரீவிஜயதாசரின் நினைவாக, அவருக்கு கனவில் கிடைத்த 7 தந்திகளைக் கொண்ட தம்பூரியை இன்றும் சிப்பகிரி க்ஷேத்திரத்தில் பார்க்கலாம். மிக சமீபத்தில், மந்திராலய ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடாதீஷரான ஸ்ரீசுஷமீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர், அதற்கு வெள்ளி கவசத்தை செய்து சமர்ப்பித்தார். ஸ்ரீவிஜயதாசர் மற்றும் அவருடைய தம்பியான ஸ்ரீஆனந்த தாசர் பயன்படுத்தி வந்த, தாளம் கூட சீகலபரவியின் ஸ்ரீதாசரின் வீட்டில் இருக்கிறது என்று சொல்கின்றனர்.

ஒரு முறை, ஸ்ரீமத் உத்தராதி மடத்தின் ஸ்ரீசத்யஞான தீர்த்தர் சிப்பகிரி க்ஷேத்திரத்திற்கு வந்திருந்தார். ஸ்ரீவிஜயதாசர் நிலைத்த புண்ய ஸ்தல என்னும் காரணத்தினால், ஸ்ரீபோகேஷ்வர தேவஸ்தானத்திற்கு வந்தபோது, அங்கு ஒரு தூணில் முக்யபிராணதேவரின் சிலையை கண்டு மகிழ்ந்தார். அடுத்து சிப்பகிரிக்கு வந்த ஸ்ரீசத்யத்யான தீர்த்தர், ஸ்ரீவிஜயதாசரின் கட்டெ அருகில், சில மணி நேரங்கள் தியானத்தில் அமர்ந்திருந்தார் என்று

தெரிகிறது. ஸ்ரீசத்யபிரமோத தீர்த்தரும், இங்கு வந்து ஸ்ரீராமதேவரின் பூஜை செய்தார் என்று அறிகிறோம்.

ஸ்ரீவிஜயதாசரின் கட்டெ அருகில், அவருடைய கிருதிகளின் கையெழுத்து பிரதிகள் இருந்தன என்றும், அவற்றை லிங்கசுகூரின் ஸ்ரீவரதேந்திர ஹரிதாச சாகித்ய மண்டலியின் ஸ்ரீகோரேபாள ஹனுமந்த ராயர் மிகவும் சிரமப்பட்டு எடுத்து, தொகுத்து, அவற்றில் பெரும்பாலானவற்றை வெளியிட்டு, ஆன்மிக மக்களுக்கு மிகப்பெரிய உதவியை செய்திருக்கிறார். இவ்வாறு ஸ்ரீசிப்பகிரியில் ஸ்ரீவிஜயராயரின் சேவா கைங்கர்யம், அவரது வளர்ப்பு மகனான ஸ்ரீமோகனதாசரின் மற்றும் அவருடைய வம்சத்தவர்களால் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீவிஜயதாசரின் பிருந்தாவனம்

ஸ்ரீவிஜயதாசரின் காலத்திற்குப் பிறகு, அவருடைய பக்தர்கள், அவருடைய கட்டெயின் அருகில் இருந்த மிருத்திகையை ஒரு பிருந்தாவன தோற்றம் கொண்ட சம்புடத்தில் ஸ்ரீகோபாலதாசரின் கைகளால் எடுத்து வைத்தனராம். ஸ்ரீவிஜயதாசருடைய கட்டெயும்கூட ப்ருந்தாவன உருவத்திலேயே இருக்கிறது என்பதை பார்க்கிறோம். அதன் மேல் ஸ்ரீவிஜயதாசர் என்றும் எழுதப்பட்டு இருக்கிறது. மதராஸ் டிஸ்ட்ரிக்ட் கெஜெடியர் பள்ளாரி, டபுள்யு. பிரான்ஸிஸ், ஐசிஎஸ் (1904) பக்கம் 11ல் வந்திருக்கும் பிருந்தாவனத்தின் குறிப்பு, இந்த பிருந்தாவத்தை சொல்வது போலவே உள்ளது.

Chippagiri - East of the Village and South of the road to Nancharla is a Brindavanam to Vijayaraya a famous Madhva hyminist.

ஸ்ரீவிஜயதாசரின் நினைவாக உள்ளவை

1. காசியிலிருந்து வந்த சாணைக்கல்

ஒரு முறை காசியிலிருந்து சீகலபரவிக்குப் புறப்பட்ட தாசர், காசியில் வசித்ததன் நினைவுக்காக என்பது போல ஒரு பெரிய சாணைக்கல் வாங்கினார். தாமே அந்த கல்லிலிருந்து சந்தனம்

அரைத்து, ஸ்ரீபிந்து மாதவனுக்கு சமர்ப்பித்தார். அந்த கந்த சேஷத்தை விஷ்வநாதனுக்கும் சமர்ப்பித்தார். அங்கிருந்து கிளம்பும்போது, அந்த கல்லினை தம்முடனேயே எடுத்து சீகலபரவிக்கு வந்தார். அதனை அவருடைய வீட்டில் இன்றும் காணலாம். ஸ்ரீதாசரின் ஸ்பரிசத்தால் பவித்ரமான அந்த சாணைக்கல்லிற்கு அபிஷேகம் செய்து, அந்த ஜலத்தை தண்ணீர் என்று எடுத்துக்கொள்ளும் வழக்கமும் வந்திருக்கிறது. அந்த தீர்த்தத்தினால் பல நோய்கள் தீர்கின்றன என்பது நம்பிக்கை. சீகலபரவிக்குச் செல்லும் பக்தர்களுக்கு, அந்த கல் மேல் தூவிய அரிசி, கோதுமை ஆகியவற்றை பிரசாதமாக கொடுக்கும் பழக்கம் இருக்கிறது. அவற்றை பெற்றுக்கொண்டு தம் வீட்டில் தான்ய பாத்திரங்களில் சேர்த்தால், அவை வ்ருத்தி ஆகின்றன என்பது நம்பிக்கை. அதைப் போல அந்த தானியங்களை உண்டாலும், நோய் நொடிகள் விலகுகின்றன என்பது நம்பிக்கை. இத்தகைய பலன்களைப் பெற்ற பல பக்தர்களும் இருக்கிறார்கள்.

2. காசியின் சிவலிங்கம்

சாணைக்கல்லினைப் போலவே ஸ்ரீகாசி க்ஷேத்திரத்திலிருந்து, லிங்க உருவமான சிலை ஒன்றினையும் ஸ்ரீதாசர் சீகலபரவிக்கு கொண்டு வந்தார். அங்கிருக்கும் அஷ்வத்த நரசிம்மனிடம், பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் அந்த சிலை, தினமும் பூஜிக்கப்படுகிறது. நரசிம்ம உபாசகரான ஸ்ரீருத்ரதேவரின் சன்னிதானம் அங்கு இருக்கட்டும் என்று ஸ்ரீதாசர் அவ்வாறு செய்தார் என்று சொல்லலாம். 'ஈஷ கைலாஸவாஸ காஷி நகராதீஷ' என்னும் ஸ்ரீதாசரின் கீர்த்தனை இந்த சிவலிங்கத்தைக் குறித்தது என்கின்றனர். அவருடைய பல கிருதிகள் இவ்வாறு வாழ்க்கையின் சம்பவங்களுக்கு சம்பந்தப்பட்டவை என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

3. காசியிலிருந்து வந்த பானை

காசியிலிருந்து ஸ்ரீதாசர் கொண்டு வந்த இன்னொரு அபூர்வமான பொருள் - ஒரு பானை. அவர் காசியில் இருந்தபோது, அந்த பித்தளைப் பானையால் கங்கையைக் கொண்டு வந்து, பிந்துமாதவ,

காசி விஷ்வநாதர்களின் அபிஷேகத்தை செய்தார் என்பது நம்பிக்கை. இந்த பானையை இன்றும் சீகலபரவியில் காணலாம். இங்கும், ஸ்ரீதாசர் அந்த பானையினால் துங்கபத்ரா தண்ணீரை கொண்டு வந்து, ஸ்ரீநரசிம்ம ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்தார் என்றும் சொல்லப்படுகிறது.

4. கனவில் கிடைத்த 7 தந்திகள் கொண்ட தம்பூரி

ஸ்ரீவிஜயதாசருக்கு அங்கிதம் கிடைத்த சமயத்தில், தெய்வ-லப்தமான தம்பூரியை இன்றும் சிப்பகிரி க்ஷேத்திரத்தில் அவருடைய சன்னிதியில் காணலாம். காலகிரமத்தில் சேதம் அடைந்த இதனை, மைசூரைச் சேர்ந்த பக்தர் ஒருவர் மிகவும் சிரமப்பட்டு சரிசெய்து கொடுத்தார் என்பதை அறிகிறோம்.

ஸ்ரீவிஜயதாசரின் ஸ்வரூப விசாரம்

அம்ச-அவதாரங்களின் நம்பிக்கை, தாச சாகித்யத்தில் அதிகமாக காணப்படுகிறது. தாசரின் வழிவந்தோர் இத்தகைய அம்ச-அவதாரங்களின் விவரங்களைக் கொடுப்பது சகஜம். சில ஹரிதாசர்கள் தங்களின் கிருதிகளிலேயே இத்தகைய குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஸ்ரீவிஜயதாசரின் கடைசி காலத்தில் இயற்றப்பட்ட ‘தாஸ புரந்தரன பாதவனு பொந்திதெனு’ என்னும் கிருதியில் வந்திருக்கும் இந்த விவரங்கள் கவனிக்கப்பட வேண்டியவை.

ஸூரலீலனாகி நிகம்பனெந்தெனிஸி த்பா
பரதல்லி ஜனிஸிதெ கெலவு தின பிடதெ
தருவாய வர கலியுகதலி ஈக ஜனன
மரணவாகுத பந்து தரெயொளகெ மெரெது
ஹரி க்ருபெயிந்தலி இவர ஸதனதொளகெ
துருகருவு ஆகி ஜனிஸிதெ ஸுக்ருததிந்த
ஸிரிபதிஸ்த விஷ்ணு நம்ம விஜயவிட்டலன்ன தா
ஸரு பேளலு கவன எரகலு கர்ணக்கெ ||3

இதிலிருந்து தெரிவதுபோல, அவர் முதலில் நாரத முனிவரின் சிஷ்யர். க்ருத யுகத்தில் ஸூரலீலா என்னும் கபி; த்வாபரத்தில்

நிகம்பன என்னும் யாதவனாக இருந்து ஸ்ரீஹரிசேவை செய்தவர். ஸ்ரீபுரந்தரதாசரின் வீட்டில் கருவாக பிறந்து, பிறகு அவருடைய மகனாகவும் பிறந்தார். ஸ்ரீபுரந்தரதாசரின் மக்களில் ஒருவரான மத்வபதி தாசர், இவரே என்று சொல்கிறார். அவருடைய தம்பியான ஸ்ரீஹயவதன தாசர்னி கிருதியிலும் இந்த விவரம் வந்திருக்கிறது.

ஆதியலி ஸுரமுனிய பாதஸேவெய மாடி
மோததலி ஸுரலீல எம்ப கபி த்ரேதெயலி
ஆ த்வாபரதி நிகம்பன எம்ப நாமதலி ஸ்ரீதரன ஸேவிஸுதலி
காதித்து கலியுகதி புரந்தரதாஸர
ஸ்வாது வசனவ கேளி துதுகருவு ஆகித்து
கேதவில்லதெ ஜனிஸி பருத பருத மத்தெ மேதினீஸுரஜன்மதி ||1

தேவாம்ச சம்பூதரானவர்கள், ஒரு சிறப்பு காரணம் இருந்தாலே தவிர, தம் ஸ்வரூபத்தின் ரகசியங்களை வெளியில் சொல்வதில்லை. தவிர்க்கப்படாத காரணத்தால், அது வெளிவந்தால், உடனே அங்கிருந்து வெளியேற வேண்டும் என்பது சாஸ்திரத்தின் நியமம். ந தர்மோ தேவதானாம் ஹி ஞாதவாஸஷ்சிரம் ந்ருஷு. ஆகையால், ஸ்ரீவிஜயதாசர் தம் வாழ்க்கையின் கடைசி பகுதியில் இந்த வாக்குகளால் தம் ஸ்வரூபத்தை வெளிப்படுத்தினார் என்பதை அறியலாம்.

மோகனதாசரின் கிருதியில் இவர் ஹரிசர்வோத்தமத்வத்தை பறைசாற்றிய ப்ருகு முனிகளின் அவதாரம் என்ற குறிப்பு இருக்கிறது.

மொதலு ரிஷிகளு கூடி ஸத்ரயாகவ நாக
நதிய தீரதலி ரசிஸியிரலு
பதுமஸம்பவனங்கபவ பந்து முனிவ்ருந்த
ஹ்ருதய ஸம்ஷய ஹொந்தலு
விதி விஷ்ணு ஷிவரொளகெ உத்தமர தோரதலெ
மதடபாவவ ஒஹிஸலு
ஒதகி ப்ருகுமுனிகளே ஸர்வேஷ வைகுண்ட
ஸதனனெந்தருஹிதவரோ இவரு ||1

ஸ்ரீபுரந்தரதாசரின் ரூபத்தில் ஸ்ரீஹரி இவருக்கு தரிசனம் அளித்தது; ஸ்ரீபுரந்தரதாசர் சங்கல்பம் செய்த 5,00,000 கிருதிகளில் 75,000 கிருதிகளை இவர் நிறைவேற்றியது; இவருடைய அதிகமான கிருதிகளில் ஸ்ரீபுரந்தரதாசரை விசேஷமாக வணங்கியது; கடைசி காலத்தில் மறுபடி இவருக்கு ஸ்ரீபுரந்தரதாசரின் தரிசன பாக்கியம் கிடைத்தது; ஆகியவை, இவர் ஸ்ரீபுரந்தரதாசருடன் மிகவும் நெருங்கிய ஆத்யாத்மிக சம்பந்தத்தை கொண்டிருந்தார் என்பதை காட்டுகிறது.

ஸ்ரீவிஜயதாசரின் கிருதிகள்

ஸ்ரீவிஜயதாசரின் வாழ்க்கையின் மிகச்சிறந்த பரிசு என்றால் அவருடைய அபாரமான எண்ணிக்கையிலான கிருதிகளே. எந்தவொரு சம்பிரதாயமான அத்தியயனத்தின் பின்னணியும் இல்லாத அவரிடமிருந்து இயற்றப்பட்ட கிருதிகள், உண்மையான அர்த்தத்தில் ஒரு மகிமையே ஆகும். ஸ்ரீகோபாலதாசர், ஸ்ரீஜகன்னாததாசர் ஆகிய ஞானி வரேண்யர்களின் வாக்குகளில் அவருடைய கிருதிகளின் ஸ்வரூபம் இவ்வாறு உள்ளது.

மத்வமதகெ அவிருத்தவாகி கவன பத்ததி விஜயராயா ।அய்ய
ஷப்தஸங்கதியிந்த ஸித்தாந்ததத்வத முத்தி மாடிதியோ விஜயராயா ।।
தித்தி தத்வஸார ஸுளாதி பதகளு புத்திலி விஜயராயா ।அய்ய
தத்திமி திமிகெந்து ஹ்ருத்குஹதி ஹரிய எத்து குணிஸிதி ராயா ।। --ஸ்ரீகோபாலதாசர்

ஞானவெம்போ புத்தளி - கம்பியல்லி
ஆணிமுத்தின பக்திலி - ஸுக்ருதமாலா
நானாவித ஹவளதலி ஸேரிஸுதலி
ப்ராணபதகவெம்ப மாலெயனு அனு
மானவில்லதெ கொரளிக்ஹாகுத கானதிம்
குணியுத்த பாடுத்த தீனஜனருத்தார கெயுவ ।।
ஷோதிஸி கிரந்தகள ஸுளாதிய
மோததிந்தலி பஹள கவிதெ மாடி
ஸாதுஜனகெ ஸகல - ஆனந்தவித்து

வாதிராஜனரு கெத்து போதிஸி
மாதவ ஜகன்னாதவிட்டலன பாதகமலகெ
மதுபனந்ததி ஸாதரதி தோருத்த மெரெயுவ ||
-- ஸ்ரீஜகன்னாததாசர்

ஸுகதீர்த்தமுனிய மனகனுகூல ஸச்சாஸ்த்ர
நிகரகள கவன ரூபதலி ரசிஸி
பகுதரிகெ ஸன்மார்க்க தோரி ஸந்தோஷதலி
விகனஸார்ச்சித ஜகன்னாதவிட்டலன பதகெ ||
-- ஸ்ரீஜகன்னாததாசர்

நிச்ச மன பந்தந்தெ ஸஜ்ஜரித ஸித்தாந்த
அச்ச ஸுகதீர்த்தமத நெச்சி கவனவ பேளி
நுச்சு மனவுள்ளவர தித்தி ஞானபகுதி முச்சுகாணிகெ இத்தது ||
-- ஸ்ரீஹயவதன விட்டலதாசர்

இதிலிருந்து தெரிவதைப் போல, அவருடைய கிருதிகள் மத்வமதத்திற்கு ஏற்புடைய சிறந்த கிருதிகளே ஆகின்றன. மத்வ ஸித்தாந்த தத்வங்களை, சொற்களின் ரூபத்தில் பிடித்த உருண்டைகள் எனலாம். நம் இதயக் கோயிலில் ஸ்ரீஹரியை தரிசனம் செய்விக்கும் வசனங்கள் ஆகும். இந்த விளக்கம், பொதுவாக ஹரிதாச சாகித்யத்திற்கு அப்படியே பொருந்தும் என்றுகூட சொல்லலாம்.

ஸ்ரீவிஜயதாசரின் கிருதிகளின் எண்ணிக்கையைப் பற்றி சரியான விவரம் கிடைக்கவில்லை. அவருடைய மற்றும் அவருடைய சிஷ்யர்களின் கிருதிகளால் மற்றும் அவருடைய பரம்பரையினரால் தெரிய வருவதைப் போல, அவருடைய அவதார காரியமானது, முக்கியமாக ஸ்ரீபுரந்தரதாசரின் சங்கல்பத்தை நிறைவேற்றுவதே ஆகும்.

அங்கிதம் கிடைத்த நாளிலிருந்து, ஸ்ரீதாசர் தினம்தோறும் குறைந்தபட்சம் 10 கிருதிகளை இயற்றினார் என்னும் விவரம் பார்த்தோம். அவரது 33ம் வயதில் அங்கிதம் கிடைத்தது என்றும் பார்த்தோம். இதனால், அடுத்த 40 ஆண்டுகள் காலம் கிருதிகளை இயற்றினார் என்று ஆகிறது. ஒரு நாளுக்கு 10 கிருதிகள் என்றால்,

மொத்தம் 40 ஆண்டுகளில், 360*10*40 = 144,000 ஆகிறது. இது முடியாத செயல் இல்லை என்றால், அவருடைய கிருதிகளின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால், இன்றுவரை கிடைத்துள்ள அவருடைய கிருதிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவே ஆகிறது. ஸ்ரீபுரந்தரதாசரின் லட்சக்கணக்கான கிருதிகளில் கிடைத்திருப்பவை ஆயிரத்துக்கும் கீழ். ஸ்ரீவிஜயதாசரின் கிருதிகளும் அப்படியே ஆகும். ஆனாலும், இன்று கிடைத்திருக்கும் ஹரிதாச சாகித்யத்தின் கிருதிகளில், இவர்கள் இருவருடைய கிருதிகளே பெரும்பான்மையாக இருக்கிறது என்பதும்; அதிலும் ஸ்ரீவிஜயதாசருடையதே அதிகம் என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஸ்ரீபுரந்தரதாசரின் காலத்திற்குப் பிறகு நடந்ததான தாளிகோடி யுத்தம் போன்ற விஷயங்கள், ஸ்ரீவிஜயதாசரின் காலத்திற்குப் பிறகு நடக்கவில்லை என்றாலும், அவருடைய அதிகமான கிருதிகள் கிடைக்காமல் போனது வியப்பான விஷயமே. அபாரமான சிஷ்யர்களைக் கொண்டிருந்தாலும்கூட, அவருடைய கிருதிகள் கிடைக்காமல் போனதற்கான காரணம் ஊகிக்க முடியாததாக இருக்கிறது.

ஸ்ரீவரதேந்திர ஹரிதாச சாகித்ய மண்டலி, லிங்கசுகூர் வெளியிட்ட ஸ்ரீவிஜயதாசரின் பதங்கள் பாகம் 2ல் இவ்வாறு சொல்லியிருக்கின்றனர்.

தாம் இயற்றிய அனேக பத சுளாதிகளை, ஸ்ரீவிஜயதாசரே, ஸ்ரீபம்பா க்ஷேத்திரத்தில், சக்ரதீர்த்தத்தில், துங்கா நதியில் சிஷ்யர்களைக் கொண்டு போட்டுவிட்டார் என்று, பூர்வ பரம்பரையிடமிருந்து வந்த செய்தி, உண்மையாகவே இருக்க வாய்ப்பு இருக்கிறது. ஸ்ரீராகவேந்திர விஜயத்தின் மொத்தம் 16 சர்க்கங்கள் இருந்ததை, முதல் 10 மட்டும் வைத்துக்கொண்டு, அடுத்த 6 சர்க்கங்களை, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளே நதியில் போட்டார் என்னும் செய்தியை நாம் பார்த்திருக்கிறோம். சந்த துகாராம் போன்றவர்களும்கூட இவ்வாறு செய்திருக்கின்றனர் என்பதை

அறிகிறோம். ஸ்ரீபுரந்தரதாசரின் அனேக கிருதிகள்கூட இத்தகைய காரணங்களாலேயே இன்று கிடைப்பதில்லை என்பதை அறியலாம்.

இதுவரை கிடைத்துள்ள ஸ்ரீவிஜயதாசரின் கிருதிகளின் எண்ணிக்கை

1. கீர்த்தனைகள்: 689
2. உகாபோகங்கள்: 98
3. சுளாதிகள்: 527

ஸ்ரீவிஜயதாசரின் மகிமை

ஸ்ரீவிஜயதாசர் த்வைத வேதாந்தத்தின் வரலாற்றில் ஒரு மிகச்சிறந்த மஹனீயர் ஆவார். ஹரிதாச சாகித்யத்தின் வரலாற்றில் மிகவும் முக்கியமானவர். ஆத்ம- உத்தாரகத்துடன், லோக- உத்தாரகத்தையும் செய்யும் மகான்களின் வரிசையைச் சேர்ந்த மகாத்மர் இவர். வாழ்க்கையின் முதல் 33 ஆண்டுகள், கல்வி மற்றும் செல்வம் இல்லாத இவர், அடுத்த 40 ஆண்டுகள் உலகத்தையே ஒளிரச் செய்த உஜ்வல ஜீவர் எனப்பட்டார். தத்வ பிரசாரம், சிஷ்ய செல்வம், ஆதரவு கொண்டோரை காத்தல், லோக கல்யாண சஞ்சாரம் முதலான சாதனைகளை செய்து ஸார்த்தகமான வாழ்க்கையை நடத்திய சேதனர் இவர்.

ஸ்ரீகோபாலதாசர், ஸ்ரீவேணுகோபாலதாசர், ஸ்ரீஜகன்னாததாசர், ஸ்ரீமோகனதாசர், ஸ்ரீவியாசவிட்டலதாசர் முதலான உன்னத ஹரிதாசர்களைக் கொடுத்த பெருமையும் இவரையே சாரும். கிருஹஸ்தராக இருந்தும், யதிகளைப் போலவே வாழ்ந்த வைராக்கிய நிதி இவர். மடாதீசர்களின் வைபவத்திற்கு சமம் எனப்படும் வாழ்க்கையை நடத்தியவர். ஸ்ரீபுரந்தரதாசரிடமிருந்து கனவில் அங்கிதம், தாசதீக்ஷை பெற்ற இவர், மொதலகல்லு சேஷதாசருக்கு கனவில் அங்கிதம், தாசதீக்ஷையை வழங்கி சிறப்பினைப் பெற்றவர்.

அடுத்து வந்த ஹரிதாச பரம்பரைக்கு ஜீவநாடி எனப்படுகிறார். ஹரிதாச சாகித்யத்தில் நேரடியாக ஸித்தாந்த பிரதிபாதனை செய்யும் சூக்ஷ்மாதிசூக்ஷ்ம ரகசியங்களை பற்பல சுளாதிகள்

மூலமாக விளக்கியதால் இவரை சுளாதி தாசர் என்று சொல்கிறோம். இன்றைக்கும் எந்தவொரு தாச பந்தத்தின் மூலத்தை பார்த்தால், அது ஸ்ரீவிஜயதாசரிடமிருந்தே துவங்குகிறது என்பதை பார்க்கிறோம். சிப்பகிரி, சீகலபரவி இரண்டும் இவருடைய முக்கிய காரிய க்ஷேத்திரங்களாக இருந்து, இன்றைக்கும் அனேக ஆத்திக ஹரிபக்தர்களின் ஸ்ரத்தா- கேந்திரமாக விளங்குகின்றன.

ஸ்ரீஸ்ரீபாதராஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீஅஷ்வத்த நரசிம்ம க்ஷேத்திரத்தில் அவதரித்த ஸ்ரீவிஜயதாசர், தம் தாசதீக்ஷைக்குப் பிறகான வாழ்க்கையை, ஸ்ரீஸ்ரீபாதராஜரைப் போல ராஜ வைபவத்துடனேயே வாழ்ந்தார் என்பதில், அவருடைய வாழ்க்கையின் பெருமையை நாம் காணலாம்.

இவருடைய இந்த கீழ்க்கண்ட வாக்கு சாதகர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும், மிகப்பெரிய செய்தியாகவும் இருக்கிறது.

ஸ்ருதிகெ அப்ராமாண்ய பாரதந்தெ மத்வ
மதகெ விரோதவாகதந்தெ
க்ஷிதியொளகெ ஸுஜனரிகெ ஹிதவாகுவந்தெ ஸ்ரீ
பதிய ஸேவிஸி ஸுகதி படெயோ - பிராணி ||
-- நெச்சதிரு ஸம்ஸார கடெகெ ஹாகுவுதல்ல
-- ஸ்ரீவிஜயதாசர்

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

ஸமர்ப்பிதம் மயா பவேத் ஸுமத்வனுத்தமாணினா |
ரமாரமேஷ பாதயோ: பிரபஞ்சனாபிதாயிஜா ||

***